# ஏன் நாங்கள் நம்புகிறோம்
# எதை நாங்கள் நம்புகிறோம்

## *Why We Believe What We Believe*

**பாகம் 1**

*By*

**J.C. சோட்**

**E.Z.S. ராஜநாயகம்**

வெளியிடுவோர்

**உலக இலக்கிய பதிப்பகம்**

***86-A,* தாராபுரம் ரோடு, காங்கயம் – 638 701.**

**தமிழ்நாடு, இந்தியா.**

***Why We Believe What We Believe (Tamil)***

***Copyright 2010 - Tamil World Soul Winning Campaign***

***First Impression : September, 2010***

***Copies : 3000***

Translated By :

**E.Z.S. Rajanayagam**

Assisted By :

**B. Benny Martin**

***For Copies :***

**Tamil World Soul Winning Campagin**

86-A, Dharapuram Road, Kangayam - 638 701.

Tamilnadu, India. Ph: 04257-230030, 98427-30382

## பதிப்பாசிரியர் உரை

கிறிஸ்துவின் சிலுவைக்குப் பின்னால் வாழும் மானிடத்தை ஆன்மீக ரீதியாகக் கட்டுப்படுத்தும் புதிய ஏற்பாட்டு உபதேசத்தை அப்படியே ஏற்றுக்கொண்டு, அதற்கு முழுமையாகக் கீழ்ப்படியும் ஒருவன் "கிறிஸ்தவன்" என்று அழைக்கப்படுகிறான். இப்படி கிறிஸ்தவன் என்ற பாக்கிய நிலையை அடைந்து, மெய்க் கிறிஸ்தவ நெறிகளை நடைமுறைப்படுத்தும் வாழ்க்கையை நடத்துவதற்கு ஒருவன் அநேக காரியங்களை "விசுவாசிக்க" வேண்டியது அவசியம்.

ஆனால், அப்போஸ்தலன் பவுலடியார், தான் விசுவாசத்தில் பெற்றெடுத்த குமாரனாகிய தீமோத்தேயுவுக்கு எழுதும் போது, "தாங்கள் சொல்லுகிறது இன்னதென்றும், தாங்கள் சாதிக்கிறது இன்னதென்றும் அறியாதிருந்தும், நியாயப்பிரமாண போதக ராயிருக்க விரும்புகிறார்கள்" (I தீமோ. 1:7) என்று சொல்வது போல், ஆவியின் பிறப்பினடிப்படையில் கிறிஸ்தவர்களாக இருக்கும் அநேகரும், சரீரப் பிறப்பினடிப்படையில் தங்களையும் கிறிஸ்தவர்களென்று சொல்லிக் கொள்ளும் ஏனையோரும், தாங்கள் விசுவாசிக்கும் காரியங்கள் குறித்து அறிய வேண்டிய அளவுக்கு அறியாதவர்களாகவும் அல்லது எதுவுமே தெரியாதவர் களாகவும் இருக்கிறார்கள். மெய்க் கிறிஸ்தவ அறத்திற்கு ஊறு விளைவிக்கும் இக்கீழ் நிலை, கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு உபதேசக்கோட்பாடுகளுக்கு நிச்சயம் வலு சேர்க்காது.

இந்நிலை நீடிக்கக் கூடாது என்ற நோக்குடன் அன்பிற்கும், மரியாதைக்குமுரிய சகோ. J.C. சோட் (Bro. J.C. CHOATE) அவர்களால் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இந்த எளிய நடை நூல் பரலோகத்திற்குப் பாதை வகுக்கும் தேவபக்தியின் வாழ்க்கைக்குப் பெரும் பயனாக இருக்கும் என்பதில் எனக்கு எவ்வித சந்தேகமும் இல்லை. இந்நூலை நம் தமிழ் மொழியில் வெளியிடுவதற்கு ஆக்கமும், ஊக்கமும் தந்து, கிறிஸ்துவின் நற்செய்தியை தமிழ் பேசும் நல்லுலகமெங்கும் எடுத்துச் செல்வதற்கு எல்லாவகை யிலும் எனக்குப் பேராதரவு காட்டி வரும் சகோதரி. பெட்டிசோட் (Sister. BETTY CHOATE) அவர்களுக்கு நான் மிகவும் கடன் பட்டிருக்கிறேன்.

மேலும், இந்நூலை மொழியாக்கம் செய்யும் பணியில் எனக்குத் துணை நின்ற சகோ. பென்னி மார்ட்டின் அவர்களுக்கும், அச்சகப் பணியில் உதவிய சகோ. விக்டர் அவர்களுக்கும், சிறப்பாக அச்சிட்டுக் கொடுத்த சன் ஆப்செட் அச்சகத்தாருக்கும் என் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் உங்கள் யாவருக்கும் பயனுள்ளதாக இருக்க நான் ஜெபிக்கிறேன்.

தமிழ் உலக ஆத்தும
ஆதாயப் பணியில்,

10.09.2010
காங்கேயம்

(E.Z.S. ராஜநாயகம்)

# ஆசிரியர் உரை

கடந்த 20 ஆண்டுகளாக நான் அனுபவித்து வரும் ஆசீர்வாதங்களுள் ஒன்று, இந்தியாவிலிருக்கும் மக்களைச் சென்றடையத்தக்கதாக, வானொலி நிகழ்ச்சிகளை வழங்கும் பேச்சாளர்களில் ஒருவனாக இருப்பது. என்னுடைய மகன் ஸ்டீவ் இந்த ஒலிபரப்புகளுக்கெல்லாம் அறிவிப்பாளராக இருப்பது மற்றுமொரு ஆசீர்வாதம். இந்தத் தொடர் பிரசங்கங்களெல்லாம் புதுடில்லியில் பதிவு செய்யப்பட்டு, 1986-ஆம் ஆண்டு அங்குள்ள அச்சகத்தாரிடம் கொடுக்கப்பட்டது. பிறகு, அவைகள் இந்தோனேசியா நாட்டு மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்டு, இந்தோனேசியாவின் ஜகர்த்தா பட்டணத்தில் புத்தகமாக அச்சிடப்பட்டது. இப்பொழுது, அமெரிக்க ஐக்கிய நாட்டிலும் அச்சிடப்பட்டுள்ளது. இங்கிருந்து எங்களது அலுவலகத்தின் மூலமாகவும், உலக வேதாகமப் பள்ளி ஆசிரியர்கள் மூலமாகவும் உலகமெங்கும் அனுப்பப்படுகிறது.

பெரும்பாலும், தவறான மத போதனைகளைக் கொண்டதொரு காலகட்டத்தில், நாம் விசுவாசிப்பவைகளை ஏன் விசுவாசிக்கிறோம் என்று அடிக்கடி பலரால் கேட்கப்படுகிறோம். இப்புத்தகத்தின் பிரசங்கங்கள் இக்கேள்விக்கு பதிலளிக்கும்படியாக அமைக்கப்பட்டுள்ளது. மூன்றாம் உலக நாடுகளில், ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாகக் கொண்டுள்ளவர்களை மனதில் கொண்டுதான் முதலில் இந்நூல் எழுதப்பட்டது. ஆனால், வேதாகமத்தின் கருத்துக்களை அறிய விரும்பும், உலகத்தின் எப்பகுதியிலுள்ளவருக்கும் இந்நூல் உதவியாகவே இருக்கும். இந்தப் பிரசங்கங்கள் தொடர்ந்து அநேகரை கிறிஸ்துவுக்குள் வழிநடத்தும் ஒரு சாதனமாக இருக்க வேண்டுமென்பது என்னுடைய ஜெபம்.

இப்பிரசங்கங்களை அச்சிடுவதற்கு ஆயத்தம் செய்வதில் உதவி புரிந்த என்னுடைய மனைவி பெட்டி சோட், சகோதரிகள் யூலன் ராம்சே மற்றும் பார்பரா ஆலிவர் ஆகியோருக்கு நான் நன்றி கூறுகிறேன்.

ஜூன் 26,1996
வினோனா, மிசிசிபி, அமெரிக்கா.

**J.C. சோட்**

# பொருளடக்கம்

பக்கம்


பாடம் 1.

ஏன் நாங்கள் தேவனை விசுவாசிக்கிறோம்? 1

பாடம் 2.

ஏன் நாங்கள் கிறிஸ்துவை விசுவாசிக்கிறோம்? 8

பாடம் 3.

ஏன் நாங்கள் பரிசுத்த ஆவியானவரை விசுவாசிக்கிறோம்? 15

பாடம் 4.

ஏன் நாங்கள் வேதாகமத்தை விசுவாசிக்கிறோம்? 22

பாடம் 5.

ஏன் நாங்கள் நியாயப்பிரமாணத்தின் கீழ் இல்லை? 29

பாடம் 6.

ஏன் நாங்கள் இரட்சிக்கப்பட வேண்டும்? 36

பாடம் 7.

ஏன் சுவிசேஷம் இரட்சிப்பதற்கு தேவபெலனாயிருக்கிறது? 43

பாடம் 8.

ஏன் விசுவாசம் முக்கியமானது? 51

பாடம் 9.

ஏன் மனந்திரும்புதல் மிகவும் அவசியமானது? 58

பாடம் 10.

ஏன் நாங்கள் ஞானஸ்நானம் பெறுகிறோம்? 65

பாடம் 11.

ஏன் நாங்கள் கீழ்ப்படிதலில் விசுவாசம் வைக்கிறோம்? 72

பாடம் 12.

ஏன் நாங்கள் கிறிஸ்துவின் சபை அங்கத்தினர்களாயிருக்கிறோம்? 79

பாடம் 13.

ஏன் நாங்கள் கிறிஸ்தவர்களாக மாத்திரம் இருக்கிறோம்? 85

பாடம் 14.

ஏன் நாங்கள் ஒற்றுமையில் நம்பிக்கை வைக்கிறோம்? 92

பாடம் 15.

ஏன் கிறிஸ்து சிலுவையில் மரித்தார்? 99

பாடம் 16.


ஏன் நாங்கள் கிறிஸ்து கல்லறையிலிருந்து எழுந்தார் என்று விசுவாசிக்கிறோம்? 106

பாடம் 17.

ஏன் நாங்கள் கிறிஸ்து மீண்டும் வருவார் என விசுவாசிக்கிறோம்? 113

பாடம் 18.

ஏன் கிறிஸ்தவம் இன்று அவசியப்படுகிறது? 120



## பாடம் - 1

# ஏன் நாங்கள் தேவனை விசுவாசிக்கிறோம்?

நாம் வாழும் இன்றைய உலகம் முரண்பட்ட ஒன்றாயிருக்கிறது. ஒரு பக்கத்தில் தேவன் ஒருவர் இருக்கிறார் என்பதை நம்பாத மக்கள் இருக்கிறார்கள். அவர்கள் தேவன் என்று ஒருவர் இருக்கிறார் என்பதை மறுக்கிறார்கள். இந்த உலகமானது ஒரு விபத்தினால் அல்லது தற்செயலாக உருவானது என்றும், மனிதன் கீழான ஜந்துக்களின் சந்ததி என்றும் சொல் கிறார்கள். இவர்கள் மனிதனை விட மேலான ஒருவருக்கு தாங்கள் கணக்கு ஒப்புவிக்க வேண்டும் என்று விசுவாசிப்பதில்லை. இன்னொரு பக்கத்தில், ஒன்று அல்லது ஒன்றுக்கும் அதிகமான கடவுள்கள் இருக்கிறார்கள் என்பதை நம்புகிற மக்கள் பலர் இந்த உலகில் இன்று இருக்கிறார் கள். இவர்களில் பெரும்பாலானோர் சொரூபங்களும், விக்கிரகங் களும் தங்கள் தெய்வங்களுக்கு பிரதிநிதிகளாக இருக்கின்றன என்று நம்புகிறார்கள். இந்தக் காரியங்களில் நீங்கள் எங்கே நிற்கிறீர்கள்? நீங்கள் எதை நம்புகிறீர்கள்?.

நான் ஒரு கிறிஸ்தவனும், கிறிஸ்துவின் சபையின் அங்கத்தினருமாயிருக்கிறேன். ஆகையால், என் சகோதரரும், நானும் தேவனை விசுவாசிக்கி றோம். நாங்கள் ஒன்றான மெய்த் தேவன் ஒருவர் உண்டென்று விசுவாசிக்கிறோம், அவர் ஜீவனுள்ள தேவன், சர்வசிருஷ்டிகர், சர்வ வல்லவர், சர்வ ஞானி எல்லாவற்றையும் காண்கிறவர் என்றும் விசுவாசிக்கிறோம். மேலும், அவர் நித்திய மானவர், ஆவியாயிருக்கிறவர், சர்வ வியாபி என்றும் விசுவாசிக்கிறோம். நீங்களும் தேவனிடத்தில் இப்படியாக விசுவாசம் வைக்க நாங்கள் உங்களை உற்சாகப்படுத்த விரும்புகிறோம்.

நாங்கள் ஏன் தேவனை விசுவாசிக்கிறோம் என்று நீங்கள் ஆச்சரியப்பட லாம். எங்கள் விசுவாசத்தைக் குறித்து கேள்வி கேட்க உங்களுக்கு எல்லா உரிமையும் உண்டு. ஆகையால், நாங்கள் தேவனை ஏன் விசுவாசிக்கிறோம் என்பதற்கான சில காரணங்களை உங்களுக்குக் கொடுக்க விரும்புகிறோம்.

*முதலாவது, தேவன் இருக்கிறார், அவர் எல்லாவற்றையும் உண்டாக்கினார் என்பதை நம்புவதற்குத் தர்க்க ரீதியாக எல்லாம் சரியாக இருக்கிற படியால் நாங்கள் தேவனை நம்புகிறோம். எல்லா ஜீவராசிகளோடும் இப்பூமி இருக்கிறது என்கிற உண்மையானது, இதற்கு யாரோ ஒருவர் பொறுப்பு என்பதை நிச்சயமாகக் காட்டு கிறது. ஒரு புத்தகத்திற்கு எப்படி ஒரு ஆசிரியர் இருக்கிறாரோ, ஒரு வீட்டிற்கு எப்படி அதைக் கட்டினவர் ஒருவர் இருக்கிறாரோ, ஒரு வாகனத்திற்கு எப்படி அதை உருவாக்கினவர் ஒருவர் இருக்கிறா ரோ அப்படியேதான் பூமியையும், அதில் குடியிருப்பவர்களையும், உண்டாக்கினவர் ஒருவர் இருக்கிறார். வேதாகமத்தின் முதல் வார்த்தைகளில் நாம் இப்படியாக வாசிக்கிறோம், "ஆதியிலே தேவன் வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்தார்" (ஆதியாகமம். 1:1) என்று.*

*இரண்டாவது, சர்வ சிருஷ்டிகரான பரலோகத்தின் தேவனை நாங்கள் விசுவாசிப்பதற்கான காரணம், இந்த பூமியில் நாம் வாழும் அறிவுப் பூர்வமான வாழ்க்கை தான். இந்த பூமியானது தாவரங்க ளையும், மிருகங்களையும் மாத்திரம் உடையதாயிராமல், மனித னும் இந்த பூமியில்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறான். அவன் மற்ற ஜீவராசிகளோடு ஒப்பிடும் போது உயர்வானவனாயிருக்கிறான். மனித இனத்திற்கு மட்டும் தான் சிந்திக்கும் திறனும், காரண காரியங்களை அறியும் திறனும் இருக்கிறது. அது மட்டுமல்ல, காலப் போக்கில் மனிதன் தன் அறிவில் அபரிதமான வளர்ச்சியை அடைந்திருக்கிறான். அதன் பொருள், மனிதனுக்கு தன்னுடைய மூதாதையரிடமிருந்து கற்றுக் கொள்ளும் திறனும், அவர்களிட மிருந்து பெற்றுக் கொண்ட அறிவை வளர்த்துக் கொள்ளும் அறிவும் இருக்கிறது. இன்னும் அதன் பொருள், ஒரு புத்திசாலியான சிருஷ்டிகர் தான் இவைகளுக்கெல்லாம் பொறுப்பாளியாயிருக் கிறார் என்பது. ஆனால், மிருகத்தின் வாழ்க்கையைப் பாருங்கள். அது, ஆரம்பத்திலிருந்தே ஒரே மாதிரியாகத்தான் இருக்கிறது. இது, ஞானமுள்ள சிருஷ்டிகர் மிருக ஜீவன்களையும், மற்றெ ல்லாவற்றையும் மனிதனுடைய பயன்பாட்டிற்காகத்தான் வைத்திருக்கிறார் என்பதையே காட்டுகிறது. வேதாகமத்தில், ஆதியாகமம் புத்தகம் ஒன்றாம் அதிகாரத்திற்குத் திரும்பும் போது,*

தேவன் வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்து, பின்பு பூமியில் ஊரும் பிராணிகள், ஆகாயத்துப் பறவைகள், நீர் வாழ் ஜந்துக்கள் உட்பட எல்லாவற்றை யும் அதில் சிருஷ்டித்தார் என்று நமக்கு சொல்லப்பட்டிருக்கிறது. அதன் பின்பு, கடைசியாக தேவன் ஆணையும், பெண்ணையும் சிருஷ்டித்தார். ஆதியாகமம் 1:28-ல் நாம் இப்படியாக வாசிக்கி றோம். " *பின்பு தேவன் அவர்களை நோக்கி; நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங் களையும், ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின் மேல் நடமாடு கிற சகல ஜீவஜந்துகளையும் ஆண்டு கொள்ளுங்கள் என்று சொல்லி தேவன் அவர்களை ஆசீர்வதித்தார்* ".

மூன்றாவது, மனிதன் ஆவியை உடையவனாகவும், சரீரத்தை உடையவனாகவும் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறபடியால், தேவன் தான் மனிதனுடைய சிருஷ்டி கர்த்தர் என்று நாங்கள் விசுவாசிக்கி றோம். தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார். அவனைத் தேவ சாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும், பெண்ணு மாக அவர்களைச் சிருஷ்டித்தார் என்று ஆதியாகமம் 1:27-ல் நமக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. மறுபடியும், நாம் இப்படியாக வாசிக்கி றோம். " *தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான் என்று* " (ஆதியாகமம் 2:7). இதைப் புரிந்து கொள்வதற்கு தேவன் ஆவியாயிருக்கிறார் என்கின்ற உண்மையை நாம் அறிந்திருக்க வேண்டும் (யோவான் 4:24). மனிதன் தேவ சாயலில் சிருஷ்டிக்கப்பட்டான் என்று சொல்லும்போது, அதன் பொருள், தேவன் மனிதனை என்றென்றும் அழியாத ஆத்துமாவை உடையவனாக சிருஷ்டித்திருக்கிறார் என்பதேயாகும். சரீரத்தை யும், ஆத்துமாவையும் பற்றிப் பேசும் போது, ஞானி சாலொமோன் இப்படியாகச் சொல்கிறார். "*இவ்விதமாய் மண்ணானது தான் முன்னிருந்த பூமிக்குத் திரும்பி, ஆவி தன்னைத் தந்த தேவனிடத் திற்கு மறுபடியும் போகாததற்கு முன்னும், அவரை உன் வாலிபப் பிராயத்திலே நினை*" (பிரசங்கி 12:7) என்று. இது, சரீரமானது மரித்து பூமியின் மண்ணுக்கு திரும்புவதைக் குறிக்கிறது, ஆனால்,

மனிதனு டைய ஆவியானது தொடர்ந்து வாழ்ந்து தன்னைத் தந்த தேவனிடத் திற்குத் திரும்புகிறது. இதுவே மனிதன் தேவனை விசுவாசிப்பதற்கு மற்றுமொரு பலமான காரணமாகும். எல்லாவற்றுக்கும் முடிவாயி ருக்கும்படி யார்தான் மரிக்க விரும்புவர்? தேவனை நம்ப மறுக்கிறவர்களைப் பொறுத்தவரை, இவைகளைத் தான் மனிதன் எதிர் நோக்க வேண்டியவனாயிருக்கிறான். ஆனால், தேவனை விசுவா சிக்கிற ஒருவர் வாழ்க்கையை இப்படியாக வாழ்வதற்குப் பெற்றி ருப்பதோடு, அவருடைய சரீர மரணத்திற்குப் பிறகும் அவருடைய ஆவி அல்லது ஆத்துமா என்றென்றும் வாழ்கிறதாயிருக்கும். இயேசு இப்படியாகச் சொன்னார். இதைக் குறித்து நீங்கள் ஆச்சரியப் பட வேண்டாம்; ஏனென்றால், " பிரேதக் குழிகளிலுள்ள அனை வரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும்; அப்பொ ழுது நன்மை செய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிற வர்களாகவும், தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்தி ருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள் " (யோவான் 5:28,29)

நான்காவது, தேவனுடைய சிருஷ்டிப்பின் ஒற்றுமையினி மித்தம் நாங்கள் அவரை விசுவாசிக்கிறோம். காலங்கள், தட்ப வெப்ப நிலை, தாவரங்கள், கடல் ஜீவன்கள் மற்றும் மனித ஜீவன் கள் இந்த பூமியில் ஒன்றிணைந்து வாழ்ந்து, ஒவ்வொன்றும் மற்றொன்றை முழுமையாக்குகிறது. ஒவ்வொன்றும் பிழைப்ப தற்கு மற்றொன்றைச் சார்ந்திருக்கிறது. ஆனால், சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் எல்லாம் எப்படி? அவைகள் எல்லாம் சரியான தூரத் தில் வைக்கப்பட்டிருக்கிறது. உதாரணத்திற்கு, சூரியன் பூமிக்கு சற்று அருகில் இருந்திருந்தால் கூட அதிக வெப்பத்தினால் பூமி அழிக்கப்பட்டு விடும், அதே நேரத்தில் சூரியன் பூமியிலிருந்து சற்று கூடுதலான தூரத்தில் இருந்தால் அதிக குளிர் காரணமாக பூமி உறைந்து விடும். எத்தனை ஆச்சரியம் தேவனுடைய சிருஷ்டிப்பு! முன்பொரு காலத்தில் சங்கீதக்காரனாகிய தாவீது தேவனை இப்படி யாக புகழ்ந்து பாடியிருக்கிறார். " வானங்கள் தேவனுடைய மகிமை யை வெளிப்படுத்துகிறது, ஆகாய விரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது. பகலுக்குப் பகல் வார்த்தைகளைப்

பொழிகிறது, இரவுக்கு இரவு அறிவைத் தெரிவிக்கிறது. அவை களுக்குப் பேச்சுமில்லை, வார்த்தையுமில்லை, அவைகளின் சத்தம் கேட்கப்படுவதுமில்லை. ஆகிலும், அவைகளின் சத்தம் பூமி யெங்கும், அவைகளின் வசனங்கள் பூச்சக்கரத்துக் கடைசி வரைக் கும் செல்லுகிறது; அவைகளில் சூரியனுக்கு ஒரு கூடாரத்தை ஸ்தா பித்தார். அது தன் மணவறையிலிருந்து புறப்படுகிற மணவாள னைப் போலிருந்து, பராக்கிரமசாலியைப் போல் தன் பாதையில் ஓட மகிழ்ச்சியாயிருக்கிறது" என்று. (சங்கீதம் 19:1-5).

ஐந்தாவது, தேவன் இருக்கிறார் என்பதை நாங்கள் விசுவாசிப் பதற்கான காரணம், பரிசுத்த வேதாகமம் அப்படி போதிப்பது தான். வேதாகமம் தேவனுடைய வார்த்தைகளை உள்ளடக்கிய, ஒட்டு மொத்த உலகத்திலும் சிறந்த புத்தகமாகத் திகழ்கிறது. இந்தப் புத்தகம் தேவன் சர்வத்தையும் சிருஷ்டித்தார் என்பதை சித்தரிக்கி றது. மேலும், வேதாகமம் தேவனை வல்லமையுள்ள தேவனாக, நித்தியப் பிதாவாக (ஏசாயா 9:6) மெய்யான ஜீவனுள்ள தேவனாகக் (எரேமியா 10:10) காட்டுகிறது. அது மட்டுமல்ல, வேதாகமம் தேவன் ஆவியாயிருக்கிறார் என்றும் (யோவான் 4:24), தேவன் அன்பாகவே இருக்கிறார் என்றும் (1யோவான் 4:8), அவர் பட்சபாத முள்ளவரல்ல என்பதையும் காட்டுகிறது. (ரோமர் 2:11). தேவன் பொல்லாங்கினால் சோதிக்கப்படுகிறவரல்ல என்பதையும் காட்டுகிறது (யாக்கோபு 1:13). நம்மை அவரோடு பரிச்சயப்படுத்தவும், அவர் தம்முடைய சிருஷ்டிப்போடு எப்படி இடைபடுகிறார் என்பதையும் நாம் காணும்படியாக நூற்றுக்கணக்கான வேறு காரியங்களும் சொல்லப் பட்டிருக்கிறது.

ஆறாவது, அவர் ஒருவரே தேவனாக சொல்லப்பட்டிருக்கிற படியால் நாங்கள் தேவனை விசுவாசிக்கிறோம். எனவே, தேவனை மிஞ்சினவர் யாருமே இல்லை. பவுல் எபேசியர் 4:6-ல் இப்படியாக அறிவிக்கிறார். " எல்லாருக்கும் ஒரே தேவனும், பிதாவும் உண்டு; அவர் எல்லார் மேலும், எல்லாரோடும் உங்கள் எல்லாருக்குள்ளும் இருக்கிறவர் என்று ". நம் தேவன் எரிச்சலுள்ள தேவனாயிருக் கிறார். அவர் தம்முடைய சிருஷ்டி உயிரற்ற சொரூபங்களையும், விக்கிரகங்களையும் பணிந்து கொள்வதை விரும்பமாட்டார். நீண்ட காலத்திற்கு முன்பாகவே இப்படியாகச் சொல்லப்பட்டது.

"அந்நிய தேவனை நீ பணிந்து கொள்ள வேண்டாம் " (யாத்திராகமம் 34:14). மறுபடியும், நாம் யாத்திராகமம் 34:17-ல் வார்ப்பிக்கப்பட்ட தெய்வங்களை உங்களுக்கு உண்டாக்க வேண்டாம் என்று சொல் லப்பட்டிருப்பதை வாசிக்கிறோம். மற்றுமொரு சந்தர்ப்பத்தில், தேவன் இப்படியாகச் சொன்னார். "மேலே வானத்திலும், கீழே பூமி யிலும், பூமியின் கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவை களுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத் தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம், நீ அவைகளை நமஸ்கரிக்கவும், சேவிக்கவும் வேண்டாம்; உன் தேவனாகிய கர்த்த ராயிருக்கிற நான் எரிச்சலுள்ள தேவனாயிருந்து என்னைப் பகைக் கிறவர்களைக் குறித்துப் பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளை களிடத்தில் மூன்றாம், நான்காம் தலைமுறை மட்டும் விசாரிக்கிற வராயிருக்கிறேன். என்னிடத்தில் அன்பு கூர்ந்து, என் கற்பனைக ளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கோ ஆயிரம் தலைமுறை மட்டும் இரக்கஞ் செய்கிறவராயிருக்கிறேன் " என்று (யாத்திராகமம் 20:4-6) விக்கிரக ஆராதனை நியாயமற்றது என்பதைக் காட்டுவதற்கு வேத வசனங் கள் மூலமாக இன்னுமொரு உதாரணத்தை நாம் காணலாம். "ஒரு மனுஷன் ஒரு மரத்துண்டை எரித்து குளிர்காய்கிறான்; நெருப்பை மூட்டி அப்பமும் சுடுகிறான். அதினால் ஒரு தெய்வத்தை யும் உண்டு பண்ணி, அதைப் பணிந்து கொள்ளுகிறான், ஒரு விக்கிர கத்தையும் அதினால் செய்து அதை வணங்குகிறான் " (ஏசாயா 44:15).

ஏழாவது, நாங்கள் தேவனை விசுவாசிப்பதற்கான காரணம், நாம் இரட்சிக்கப்படவும், நித்திய ஜீவனுக்கான நம்பிக்கையை உடையவர்களாகவும் நமக்காக தம்முடைய ஒரே பேறான குமார னை அனுப்பிக் கொடுத்ததினால் தேவன் நமக்கு இரக்கத்தைக் கூட்டி வழங்கியிருக்கிறார். (யோவான் 3:16,17; ரோமர் 5:8; எபேசியர் 2:8,9).

கடைசியாக, நாங்கள் தேவனை ஏன் விசுவாசிக்கிறோமென் றால், நாங்கள் அப்படி விசுவாசியாமல் போனால், அதற்கு மாற்றாக, சர்வ வல்ல தேவனையும், அவர் போதிக்கும் நித்திய ஜீவனையும் நாங்கள் நிராகரிக்க வேண்டியதாயிருக்கும்.

அதுமட்டுமல்லாமல், எல்லா காரியங்களுமே ஒரு விபத்தாக, தற்செயலாக நடந்தது என்றும், மனிதன் கீழான விலங்காகிய குரங்கிலிருந்து பரிணாம வளர்ச்சியினால் மனிதனாக மாறியிருக்கிறான் என்கின்ற கருத்தை ஏற்றுக் கொள்ள வேண்டியதாகவுமிருக்கும். இக்கருத்து வெறும் கொள்கை தான், இது நிரூபிக்கப்ப டாத நியாயமற்ற ஒன்று. சங்கீதக் காரன் இப்படியாகச் சொன்னார். "தேவன் இல்லை என்று மதி கெட்டவன் தன் இருதயத்தில் சொல்லிக்கொள்ளுகிறான்" (சங்கீதம் 14:1). தேவனை நிராகரிக்கிறவர்கள் அப்படிச் செய்வதற்கு சுதந்தரத் தைப் பெற்றிருக்கிறார்கள். ஆனால், நமக்கு இப்படியாகச் சொல்லப் பட்டிருக்கிறது. "அந்தப்படி முழங்கால் யாவும் எனக்கு முன்பாக முடங்கும், நாவு யாவும் தேவனை அறிக்கை பண்ணும் என்று என் ஜீவனைக் கொண்டு உரைக்கிறேன் என்பதாய்க் கர்த்தர் சொல்கிறார் என்று எழுதியிருக்கிறது. ஆதலால், நம்மில் ஒவ்வொருவனும் தன்னைக் குறித்துத் தேவனுக்குக் கணக்கொப்புவிப்பான்" (ரோமர் 14:11,12).

நீங்கள் தேவனை விசுவாசிக்கிறீர்களா? அப்படி இல்லையென்றால், தயவு செய்து மேலே என்ன சொல்லப்பட்டிருக்கிறதோ அதை சிந்தித்துப் பாருங்கள். நீங்கள் தேவனையும், அவருடைய குமாரனாகிய கிறிஸ்துவையும் விசுவாசித்து, உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று உங்கள் வாயினால் அறிக்கை செய்து, பாவ மன்னிப்புக்கென்று தண்ணீர் ஞானஸ்நானம் பெற்றால், கர்த்தர் தம்முடைய சபையிலே உங்களை சேர்த்துக் கொள்வார். நீங்கள் அப்படிச் செய்ய வேண்டுமென்பது தேவனிடத்தில் எங்கள் ஜெபமாயிருக்கிறது.

## பாடம் - 2

# ஏன் நாங்கள் கிறிஸ்துவை விசுவாசிக்கிறோம்?

*ஒருவர் ஏதோ ஒன்றை விசுவாசித்தால் அவர் அதை அப்படி விசுவாசிப்பதற்கான சில காரணங்கள் இருக்க வேண்டும். இது நானும், என் சகோதரர்களும் கிறிஸ்தவர்களாகவும், தேவனுடைய குடும்பமாகிய கிறிஸ்துவின் சபையில் அங்கத்தினர்களாகவும் இருக்கிற படியால் இது நிச்சயமாகவே உண்மையாயிருக்கிறது.*

*நாங்கள் ஏன் தேவனை விசுவாசிக்கிறோம் என்பதற்கு நான் ஏற்கனவே சில காரணங்களை உங்களிடத்தில் கொடுத்திருக்கிறேன். இப்போது நான் உங்களிடத்தில் இயேசு கிறிஸ்துவை ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நாங்கள் ஏன் விசுவாசிக்கிறோம் என்று சொல்ல விரும்புகிறேன்.*

*முதலாவது, இயேசு நம்மைப் போல ஒரு சாதாரண மனிதர் அல்ல என்பதை நான் உங்களுக்கு விளக்க ஆசைப்படுகிறேன். அவர் ஒரு கள்ளப் போதகரும் அல்ல. அவர் மறுபடியும் வாழாமலிருக்கும்படியாக மரிக்கவில்லை. இரண்டாவது, கிறிஸ்து ஆதியிலிருந்து தேவனோடு இருந்திருந்தாலும் (ஆதியாகமம் 1:1) அவர் மூலமாய் சகலமும் உண்டாயிருந்தாலும் (யோவான் 1:1-3) அவர் பிதாவாகப் பேசப்படவில்லை. மாறாக, அவர் தேவனுடைய குமாரனாகப் பேசப்பட்டிருக்கிறார். ரோமர் 1:20 ; அப் 17:39 ; கொலே 2:9 ஆகிய வசனங்களில் சொல்லப்பட்டுள்ள தேவத்துவம் என்ற வார்த்தையில் ஆள்தத்துவங்கள் அடங்கியிருக்கிறது என்பதை தயவு செய்து மனதில் கொள்ள வேண்டும். பிதாவாகிய தேவன், குமாரனாகிய கிறிஸ்து, தேவ வார்த்தைகளைத்தந்த பரிசுத்த ஆவியானவர் அல்லது வேத வாக்கியங்களின் ஆசிரியரான பரிசுத்த ஆவியானவர் (எபேசியர் 4:1-6). மறுபடியும், வேத வாக்கியங்கள் ஒரே தேவன் பற்றியும், மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள் என்பது பற்றியும்*

1தீமோத்தேயு 2:5 மற்றும் யோவான் 17 ஆம் அதிகாரத்தில் பேசுகிறது. சிலர், இது புரிந்து கொள்வதற்கு கடினமானதாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். இதை விளக்க முற்படும் போது, சிலர், இயேசு தேவன் என்றும், அதே இயேசு பரிசுத்த ஆவியானவர் என்றும் சொல்கிறார்கள். ஆனால், மறுபடியும், மறுபடியும் வேத வாக்கியங் கள் மூவரையும் வித்தியாசமான ஆள்தத்துவங்களை உடையவர்க ளாகவே காட்டுகிறது. ஒருவரோடு ஒருவர் பேசுவதையும், ஒருவ ரோடு ஒருவர் இணைந்து செயல்படுவதையும் நாம் வேத வசனங் களில் பார்க்க முடியும் (மத்தேயு 17:5; யோவான் 16:13). இன்னும் சிலர், கிறிஸ்து தேவனுடைய குமாரனாயிருந்தால் தேவனுக்கு திருமணம் ஆகியிருக்க வேண்டும் என்று வாதிடுகிறார்கள். இக்காரியத்தில், அவர்கள் மனிதப் பண்புகள் மற்றும் கோட்பாடு களை தேவத்துவத்தோடு பொருத்தப் பார்க்கிறார்கள். எனவே, இது சரியான பதிலைத் தராது. கிறிஸ்து குமாரனாக பேசப்பட்டி ருக்கும் போது, அவர் ஆதியில் தேவனோடிருந்தார், தேவனுக்குச் சமமாக இருந்தார். ஆனால், இந்த உலகத்திற்கு வருதற்கு தம்மை முற்றிலுமாகத் தாழ்த்தினார். அதுமாத்திரமல்ல, ஒரு கன்னியி னிடத்தில் பிறப்பதற்கும், மனிதன் இரட்சிப்படைந்து, நித்திய ஜீவனுக்கான நம்பிக்கையைப் பெற்றுக் கொள்வதற்கும் அவனு டைய பாவங்களுக்காக மரிக்கும் அளவிற்கு தம்மைத் தாழ்த்தினார். தேவத்துவம் பற்றிய இரகசியத்தை நாம் முழுமையாக புரிந்து கொள்ளாவிட்டாலும், இது குறித்த முழுமையான அறிவு நமக்கு இருக்க வேண்டுமென்கிற அவசியம் இல்லை. எப்படி தேவன் எப்போதும் இருக்கிறவராக இருக்க முடியும் என்பதை மற்றும் என்றென்றும் மனிதர்களாகிய நாம் நம்முடைய அறிவைக் கொண்டு புரிந்து கொள்ள முடியா விட்டாலும், விசுவாசத்தினாலே நாம் அதை ஏற்றுக் கொள்கிறோம். இதே கருத்தினடிப்படையில் தான் கிறிஸ்துதேவனுடைய குமாரனாயிருக்கிறார் என்பது உண்மையாயிருக்கிறது.

இரண்டாவது, நாங்கள் ஏன் தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துவில் விசுவாசம் வைக்கிறோம் என்பதற்கும், ஏன் உயிர்த் தெழுந்த கர்த்தர் மனிதனுடைய இரட்சகராக இருக்கும்படியாக பரலோகத்திலிருக்கிற தகப்பனிடத்திற்குத் திரும்பினார் என்பதற்கு

மான சில காரணங்களை உங்களுக்குக் கொடுக்கிறோம். அதன் பொருள், நாம் கிறிஸ்துவை ஒரு தீர்க்கதரிசியை விட, மாபெரும் போதகர் என்பதை விட மேலாகப் பார்க்க வேண்டும் என்பதே. ஏனென்றால், அவர் நம்மில் அன்பு கூர்ந்து, நாம் இந்த உலகத்தில் இரட்சிக்கப்படவும், வருகின்ற உலகத்தில் இரட்சிக்கப்படவும் நமக்காக மரிக்க முன் வந்தார்.

அவர் எப்போதும் இருக்கிறவராயிருக்கிறபடியால் நாங்கள் கிறிஸ்துவை விசுவாசிக்கிறோம். ஆதியாகமம் 1:1ன்படி இயேசு ஆதியிலே தேவனோடிருந்தார். கிறிஸ்துவைப் பற்றி யோவான் 1:1, 2 ல் நாம் இப்படியாக வாசிக்கிறோம். ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்து, அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அவர் ஆதியிலே தேவனோடிருந்தார் என்று.

கிறிஸ்து மூலமாகவும், கிறிஸ்துவைக் கொண்டும் எல்லாம் உண்டாக்கப்பட்ட படியினாலே நாங்கள் கிறிஸ்துவை விசுவாசிக் கிறோம். ஆதியாகமமம் 1:1 ல் பேசப்பட்டிருக்கிற சிருஷ்ப்பில், கிறிஸ்து ஈடுபடுத்தப்பட்டிருந்தார். ஆதியாகமம் 1:26, 27 வசனங் களின்படி, மனித சிருஷ்டிப்பில் அவர் ஈடுபட்டிருந்தார். யோவான் 1:3-ல் நமக்கு இப்படியாகச் சொல்லப்பட்டிருக்கிறது. சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவரா லேயல்லாமல் உண்டாகவில்லை. அதன் பொருள், நம்மைச் சுற்றிலும் இருக்கிறவைகளை நாம் பார்க்கும் போது இவைகள் எல்லாம் எங்கிருந்தோ வந்தது என்ற முடிவுக்கு வரவேண்டும். ஆனால், இவைகள் எல்லாம் எங்கேயிருந்து வந்தது? இவைக ளெல்லாம் சிருஷ்டிக்கப்பட்டது என்று சொல்லப்பட்டிருக்கி றோம். அப்படியானால், யாரால்? கிறிஸ்துவால். அது உண்மை யாக இருக்குமானால், நம்மைப்பற்றி எல்லாக் காரியங்களை பார்க்கும் போதும், நம்மைப் பற்றி ஆழ்ந்து யோசிக்கும் போதும், கிறிஸ்து வைப் பற்றி நாம் நினைப்பூட்டப்படுகிறோம். அப்படியானால், "நம்மால் எப்படி அவரை விசுவாசிக்காமல் இருக்க முடியும்? பவுல் கிறிஸ்துவைப் பற்றி இப்படியாக எழுதினார்" (குமாரனாகிய) அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே, பாவ மன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது. அவர் அதரிசனமான தேவனு டைய தற்சுரூபமும், சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர்.

ஏனென்றால், அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது; பரலோகத்திலுள்ளவைகளும், பூலோகத்திலுள்ளவைகளுமாகிய, காணப்படுகிறவைகளும், காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்களானாலும், துரைத்தனங்களானாலும், அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக் கொண்டும், அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது. அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர், எல்லாம் அவருக்குள் நிலை நிற்கிறது; (கொலோசெயர் 1:14-17).

மூன்றாவது, கிறிஸ்து வருவார் என்று தீர்க்கதரிசனங்களில் முன்னுரைக்கப்பட்டிருக்கிறபடியாலும், அந்த தீர்க்கதரிசனங்களெல்லாம் அவருடைய வருகையோடு நிறைவேற்றியுள்ளபடியாலும், நாங்கள் கிறிஸ்துவில் விசுவாசம் வைக்கிறோம். ஏதேன் தோட்டத்தில் மனிதனுடைய வீழ்ச்சிக்குப் பிறகு, அவன் தேவ சமூகத்திலிருந்து துரத்தப்பட்டபோது, கிறிஸ்து மனிதனை இரட்சிக்க வருவார் என்று சொல்லப்பட்டது (ஆதியாகமம் 3:15). பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் மேசியாவின் வருகை பற்றி அடிக்கடி பேசியிருக்கிறார்கள். உண்மையில், அவருடைய வருகைப் பற்றி அநேக காரியங்களை அவர்கள் துல்லியமாகச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அவர் எங்கே பிறப்பார், ராஜாவின் கோபத்திற்கு தப்பித்துக் கொள்ள அவர் எகிப்துக்கு எப்படி கொண்டு செல்லப்படுவார். தன்னுடையவர்களில் ஒருவரால் அவர் எப்படி காட்டிக் கொடுக்கப்படுவார் மற்றும் பொய்யான விசாரணை, அவர் சிலுவையிலறையப் பட்டு, அடக்கம் பண்ணப்பட்டு மூன்றாம் நாளில் உயிர்த்தெழுவது, கடைசியாக பரலோகத்திருக்கிற பிதாவினிடத்தில் திரும்புவது போன்றவற்றைப் பற்றியெல்லாம் தீர்க்கதரிசிகள் முன்னுரைத்துள் ளார்கள். உதாரணமாக, ஏசாயா 53 ஆம் அதிகாரம் கிறிஸ்துவைப் பற்றி பேசுகிறது. அப் 8-ஆம் அதிகாரத்தில் இதே பழைய ஏற்பாட்டு வசனப்பகுதியை முன்னிட்டு கிறிஸ்துவைப் பற்றி எத்தியோப்பி யாவிலிருந்து வந்த ஒரு மனிதனுக்கு பிலிப்பு போதித்ததாக நாம் வாசிக்கிறோம். நிச்சயமாக வே இது தற்செயலாக நடந்த ஒரு காரியம் அல்ல.

கிறிஸ்து மிகவும் அற்புதமான முறையில், இந்த உலகத்தில் பிறந்தபடியால் நாங்கள் அவரை விசுவாசிக்கிறோம். பழைய

ஏற்பாட்டு தீர்க்கதரிசி இப்படியாகச் சொன்னார். "ஆதலால் ஆண்டவர்தாமே உங்களுக்கு ஒரு அடையாளத்தைக் கொடுப்பார்; இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாக ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவாள் என்று " (ஏசாயா 7:14). இதன் நிறைவேறுதலைக் குறித்து, வேத வசனம் இப்படிச் சொல்கிறது. " இயேசு கிறிஸ்துவினுடைய ஜெநநத்தின் விவரமாவது: அவருடைய தாயாகிய மரியாள் யோசேப்புக்கு நியமிக்கப் பட்டிருக்கையில் அவர்கள் கூடிவருமுன்னே, அவள் பரிசுத்த ஆவியினாலே கர்ப்பவதியானாள் என்று காணப்பட்டது. அவள் புருஷனாகிய யோசேப்பு நீதிமானாயிருந்து, அவளை அவமானப் படுத்தமனதில்லாமல், இரகசியமாய் அவளைத் தள்ளி விட யோசனையாயிருந்தான். அவன் இப்படி சிந்தித்துக் கொண்டிருக்கையில், கர்த்தருடைய தூதன் சொப்பனத்தில் அவனுக்குக் காணப்பட்டு தாவீதின் குமாரனாகிய யோசேப்பே, உன் மனைவியாகிய மரியாளைச் சேர்த்துக் கொள்ள ஐயப்படாதே; அவளிடத்தில் உற்பத்தியாயிருக்கிறது பரிசுத்த ஆவியினால் உண்டானது. அவள் ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என்றான். தீர்க்கதரிசியின் மூலமாய்க் கர்த்தராலே உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இதெல்லாம் நடந்தது. அவள்; இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள்; அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவார்கள் என்று சொன்னான். இம்மானுவேல் என்பதற்குத் தேவன் நம்மோடிருக்கிறார் என்று அர்த்தமாம். யோசேப்பு நித்திரை தெளிந்து எழுந்து, கர்த்தருடைய தூதன் தனக்குக் கட்டளையிட்டபடியே தன் மனைவியைச் சேர்த்துக் கொண்டு அவள் தன் முதற்பேறான குமாரனைப் பெறுமளவும் அவளை அறியாதிருந்து, அவருக்கு இயேசு என்று பேரிட்டான்", (மத்தேயு 1:18-25). அப்படியென்றால், இயேசுவுக்கு பூமிக்குரிய தகப்பன் இல்லை, அவர் பரலோகத்திலிருக்கிற தன்னுடைய பிதாவினிடத்திலிருந்து வந்தவர். கிறிஸ்து மற்ற மனிதர்களைப் போல பூமிக்குரிய தகப்பனுக்கும், தாய்க்கும் பிறந்திருந்தால் அவரும் ஒரு இரட்சகராக இருக்கிறபடியால் மனிதனுடைய இரட்சகராக இருக்க முடியாது.

நான்காவது, கிறிஸ்து, தான் பிதாவினிடத்திலிருந்து வந்ததை நிருபிப்பதற்காக அற்புத அடையாளங்களைச் செய்தபடியால் நாங்கள் அவரை விசுவாசிக்கிறோம். அவர் வியாதியுள்ளவர்களைச் சுகப்படுத்தினார், குருடர்களுக்குப் பார்வை கொடுத்தார், செவிடர் கேட்கும்படி செய்தார், ஊமை பேசும்படி செய்தார், சப்பாணிகளை நடக்கச் செய்தார். இன்னும், அவர் திருமண விருந்தில் தண்ணீரை திரட்சரசமாக்கினார், கொந்தளித்த கடலை அமைதிப்படுத்தினார், தண்ணீரின் மேல் நடந்தார், மரித்தோரை உயிரோடு எழுப்பினார். புதிய ஏற்பாட்டின் மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் புத்த கங்களில் இந்த அற்புதங்களை ஒருவன் வாசிக்க முடியும். நாம் இப்படியாக வாசிக்கிறோம், "பஸ்கா பண்டிகையிலே அவர் எருசலேமிலிருக்கையில், அவர் செய்த அற்புதங்களை அநேகர் கண்டு அவருடைய நாமத்தில் விசுவாசம் வைத்தார்கள்", (யோவ ான் 2:23). யூதருக்குள்ளே அதிகாரியான நிக்கொதேமு இயேசுவைப் பார்த்து, "ரபீ, நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அறிந்திருக்கிறோம், ஏனெனில், ஒருவனும் தன்னுடனே தேவன் இராவிட்டால் நீர் செய்கிற இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்ய மாட்டான்" என்றான் (யோவான் 3:2). இறுதியாக, நாம் இப்படியாக வாசிக்கிறோம். இந்தப் புத்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீஷருக்கு முன்பாகச் செய்தார். இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவா சிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டி ருக்கிறது" (யோவான் 20:30,31)

தேவன், கிறிஸ்துவின் அப்போஸ்தலர்கள் மற்றும் அநேகர், ஏன் அவருடைய சத்துருக்கள், இன்னும் பிசாசுகள் அவரை தேவனு டைய குமாரன் என்று அறிக்கை செய்திருக்கிறபடியால் கிறிஸ்து வை நாங்கள் விசுவாசிக்கிறோம். கிறிஸ்து மறுரூபமான போது, தேவன் வானத்திலிருந்து இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன், இவருக்குச் செவிகொடுங்கள் என்று சொன் னார் (மத்தேயு 17:5). மற்றுமொரு சந்தர்ப்பத்தில் பேதுருவும், அப்போஸ்தலர்களும் கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கை செய்தார்கள் (மத்தேயு 16:16-18). நிச்சயமாகவே, அவர்

களும், மற்றவர்களும் இப்படியாகச் சொல்வதற்கு சிறப்பான காரணம் இருந்தது.

ஐந்தாவது, கிறிஸ்து பாவமற்ற வாழ்க்கையை வாழ்ந்து, மனிதன் இரட்சிக் கப்படும்படி மரித்து, கல்லறையிலிருந்து உயிர்த் தெழுந்தபடியால் நாங்கள் அவரை விசுவாசிக்கிறோம். I பேதுரு 2:22 - ல் அவர் பாவஞ்செய்யவில்லை என்று பேதுரு சொன்னார். பவுல் சொல்லும் போது, நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணுகிறார் (ரோமர் 5:8) என்றார். ஆனால், மன்னிப்பை நமக்கு உறுதிப்படுத்தும்படியாகவும், நம்முடைய இரட்சகராகும்படியும், நித்தியஜீவனில் நம்பிக்கையாயிருக்கும்படியாகவும் கிறிஸ்து கல்லறையை ஜெயித்து எழுந்தார் ( I கொரிந்தியர் 15:1-4).

நீங்கள் கிறிஸ்துவை விசுவாசிக்கிறீர்களா? அவர் தேவனுடைய குமாரன் என்பதை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? நாம் தேவனிடத்தில் விசுவாசமாயிருந்தால் நாம் கிறிஸ்துவினிடத்திலும் விசுவாசமாயிருக்க வேண்டும் என்று கிறிஸ்து சொன்னார் (யோவான் 14:1). மேலும் கிறிஸ்து, "மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கை பண்ணுவேன்" என்றார் (மத்தேயு 10:32). எனவே, நம்முடைய இரட்சிப்பு கிறிஸ்துவின் பேரில் நாம் வைத்திருக்கிற விசுவாசத்தை சார்ந்திருக்கிறது.

நீங்கள் கிறிஸ்துவை விசுவாசித்து, உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, இயேசுவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கை செய்து, பாவ மன்னிப்புக்கென்று முழுக்கு ஞானஸ்நானம் பெற வேண்டும் என நான் உங்களை உற்சாகப்படுத்துகிறேன். இப்படி நீங்கள் செய்தால் கர்த்தர் உங்களை இரட்சித்து தம்முடைய சபை யில் சேர்த்துக் கொள்ளுவார். (மாற்கு 16:10; அப் 2:47).

## பாடம் - 3

# ஏன் நாங்கள் பரிசுத்த ஆவியானவரை விசுவாசிக்கிறோம்?

நான் என்ன செய்கிறேனோ அதை நான் ஏன் செய்கிறேன் என்று நீங்கள் நம்பு வதற்கு என்னிடத்தில் நிச்சயமான காரணங் கள் உண்டு. அவைகளை உங்களிடத்தில் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். ஒருவேளை, நீங்கள் கிறிஸ்துவில் விசுவாசியாக இல்லாவிட்டால், நீங்களும் என்னைப் போல் ஒரு விசுவாசியாக மாறும்படி அவைகளை, உங்களிடத்தில் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். நிச்சயமாகவே, என்னுடைய விசுவாசத்தில் நான் தனி ஒருவனாக இல்லை. உலக முழுவதிலும் கிறிஸ்துவுக் குள் என்னைப் போல் விசுவாசிகளாயிருக்கிற சகோதர, சகோதரி கள் உண்டு. நாங்கள் எல்லோரும் ஒரே தேவனை, ஒரே கிறிஸ்து வை, ஒரே ஆவியை விசுவாசிப்பதால் நாங்கள் ஒரே விதமான விசுவாசத்தைப் பெற்றிருக்கிறோம். இவைகள் எல்லாமே வேதாகமத்தில் அடங்கியிருக்கிற தேவனுடைய வார்த்தைகளின் போதனைகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

நம்முடைய பாடத்திற்கான இந்த வேளையில், பரிசுத்த ஆவியானவரை நாங்கள் ஏன் விசுவாசிக்கிறோம் என்பது பற்றி யும், பரிசுத்த ஆவியானவரின் பணி பற்றியும் நாங்கள் உங்களுக் குச் சொல்லப்போகிறோம். பரிசுத்த ஆவியானவர் தேவத்துவத் தில் மூன்றாம் நபராயிருக்கிறார். பவுல் எபேசியர் 4:4-6 வசனங் களில் ஒரே தேவன், ஒரே கர்த்தர், ஒரே ஆவி என்று அறிவித்திருக் கிறார். பவுல் கிறிஸ்துவைப் பற்றி சொல்லும் போது இப்படி யாகச் சொன்னார். *"அந்தப்படியே நாம் இரு திறத்தாரும் ஒரே ஆவியினாலே பிதாவினிடத்தில் சேரும் சிலாக்கியத்தை அவர் மூலமாய்ப் பெற்றிருக்கிறோம்"* (எபேசியர் 2:18). மறுபடியும், தேவத்துவத்திலுள்ள மூவரும் தனித்தனியாகக் குறிப்பிடப்பட் டிருப்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். மத்தேயு 3:13-17

வசனங்களில் யோவான்ஸ்நானகனால் இயேசு ஞானஸ்நானம் பெறும் சம்பவம் விவரிக்கப்பட்டிருக்கிறது, அதை இப்போது வாசிக்கலாம்: "*அப்போது யோவானால் ஞானஸ்நானம் பெறுவதற்கு இயேசு கலிலேயாவை விட்டு யோர்தானுக்கு அருகே அவனிடத்தில் வந்தார். யோவான் அவருக்கு தடை செய்து; நான் உம்மாலே ஞானஸ்நானம் பெறவேண்டியதாயிருக்க, நீர் என்னிடத்தில் வரலாமோ என்றான். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக; இப்போது இடங்கொடு, இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது என்றார். அப்பொழுது, அவருக்கு இடங்கொடுத்தான். இயேசு ஞானஸ்நானம் பெற்று ஜலத்திலிருந்து கரையேறினவுடனே, இதோ வானம் அவருக்குத் திறக்கப்பட்டது; தேவ ஆவியானவர் புறாவைப் போல இறங்கி, தம்மேல் வருகிறதைக் கண்டார். அன்றியும், வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி; இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது*". இந்த சம்பவத்தை கவனித்துப் பாருங்கள். கிறிஸ்து ஞானஸ்நானம் பெற்ற போது, பரிசுத்த ஆவியானவர் புறாவைப் போல அவர் மேல் இறங்கி வந்தார். தேவன் தன்னுடைய குமாரனை அங்கீகரித்ததின் வெளிப்பாடாக வானத்திலிருந்து பேசினார். அப்படியானால், நாம் தேவன் பேரிலும், கிறிஸ்துவானவர் அவருடைய குமாரன் என்பதிலும் நாம் விசுவாசம் வைத்தால், பரிசுத்த ஆவியானவரையும் நாம் விசுவாசிக்க வேண்டும். நாம் மறுபடியும் இப்படியாக வாசிக்கிறோம். "*பரலோகத்திலே சாட்சியிடுகிறவர்கள் மூவர். பிதா, வார்த்தை பரிசுத்த ஆவி என்பவர்களே. இம்மூவரும் ஒன்றா யிருக்கிறார்கள்*" (யோவான் 5:7). இங்கே வார்த்தை என்பது கிறிஸ்துவைக் குறிக்கிறது (யோவான் 1:1)

மரியாள் பரிசுத்த ஆவியினாலே கர்ப்பவதியாகி இயேசுவைப் பெற்றெடுத்தபடியால் நாங்கள் பரிசுத்த ஆவியானவரை விசுவாசிக்கிறோம். நாம் மத்தேயு 1:18 ல் இப்படியாக வாசிக்கிறோம். இயேசு கிறிஸ்துவினுடைய ஜெநநத்தின் விவரமாவது: அவருடைய தாயாகிய மரியாள் யோசேப்புக்கு நியமிக்கப்பட்டிருக்கையில், அவர்கள் கூடி வருமுன்னே, அவள் பரிசுத்த ஆவியினாலே கர்ப்பவதியானாள் என்று. "*கர்த்தருடைய தூதன்*

சொப்பனத்தில் யோசேப்புக்குக் காணப்பட்டு, உன் மனைவியாகிய மரியாளைச் சேர்த்துக் கொள்ள ஐயப்படாதே; அவளிடத்தில் உற்பத்தியாயிருக்கிறது பரிசுத்த ஆவியினால் உண்டானது என்றான் " (மத்தேயு 1:20). மரியாள் தேவதூதனை நோக்கி, இது எப்படியாகும்? புருஷனை அறியேனே என்றாள். தேவ தூதன் அவளுக்குப் பிரதியுத்தரமாக: பரிசுத்த ஆவி உன்மேல் வரும்; உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும். ஆதலால், உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது. தேவனுடைய குமாரன் என்னப்படும் (லூக்கா 1:35). வேறு விதமாகச் சொன்னால், பரிசுத்த ஆவியின் கிரியையினால் தான் மரியாள் கர்ப்பவதியாகி தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை முதலில் பெற்றெடுத்தாள்.

வேதாகமத்தில் விவரிக்கப்பட்டிருக்கிற வேத வாக்கியங்கள் எல்லாம் ஆவியின் சாட்சியை பிரதிநிதித்துவப்படுத்துகிறது அல்லது அவைகள் எல்லாம் ஆவியின் வார்த்தைகளாயிருக்கிறது. எனவே, நாங்கள் பரிசுத்த ஆவியானவரை விசுவாசிக்கிறோம். நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கும் மேலாக, ஆவியானவர் பல் வேறுபட்ட தேவதாசர்களை மனிதனுக்கான தேவ னுடைய சித்தத்தை எழுதும்படி ஏவினார். அதனால் தான் நாம் II தீமோத்தேயு 3:16,17 வசனங்களில் இப்படியாக வாசிக்கிறோம். "வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது " என்று. வார்த்தையானது ஆவியும், ஜீவனுமாயிருக்கிறது; அது விடுதலையாக்குகிறது; (யோவான் 8:32) இது சத்தியத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

பரிசுத்த ஆவியானவர், கிறிஸ்துவின் காலத்திலும், அப்போஸ்தலர்களுடைய காலத்திலும் கிரியை செய்த விதத்தை வைத்து நாங்கள் பரிசுத்த ஆவியானவரையும், அவருடைய பணியையும் விசுவாசிக்கிறோம். கிறிஸ்து அளவில்லாமல் ஆவியைப் பெற்றிருந்ததாக சொல்லப்பட்டிருக்கிறது. "தேவனால் அனுப்பப்

பட்டவர் தேவனுடைய வார்த்தைகளைப் பேசுகிறார்; தேவன் அவருக்குத் தமது ஆவியை அளவில்லாமல் கொடுத்திருக்கிறார் " (யோவான் 3:34). இதன் பொருள், பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்துவுடன் வாசம் செய்தார் மற்றும் பரிசுத்த ஆவியை பயன்படுத்துவதற்கு கிறிஸ்துவுக்கு எல்லையேதும் இருக்கவில்லை. அதாவது, பரிசுத்த ஆவியானவரைக் கிறிஸ்து அளவில்லாமல் பெற்றிருந்தார் என்பதன் பொருள், மற்றவர்கள் பரிசுத்த ஆவியானவரை அளவுடன் தான் பெற்றிருந்தார்கள் என்று தெளிவாகிறது.

கிறிஸ்து தம்முடைய சீடர்களிடத்தில் ராஜ்யம் அல்லது சபை பலத்தோடே வரும் என்று வாக்குதத்தம் செய்திருந்தார் (மாற்கு 9:1). இது சபையானது பரிசுத்த ஆவியின் பலத்தோடே வரும் என்கின்ற உண்மையைத் தான் குறிக்கின்றது. பின்பு, கிறிஸ்து சீடர்களிடத்தில் தேற்றரவாளனை அனுப்புவதாக வாக்குத்தத்தம் செய்திருந்தார். இயேசு விரைவில் இந்த உலகத்தை விட்டு கடந்து செல்வதை அறிந்திருந்தார். மேலும், அப்போஸ்தலர்கள் மனிதர்களாக இருந்தபடியால் தவறு செய்வதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதையும் அறிந்திருந்தார். ஆகவே, அவர் சொன்ன யாவற்றையும் அவர்களுக்கு நினைப்பூட்டும்படி பரிசுத்த ஆவியானவரை அவர்களுக்கு அனுப்புவதாக வாக்குத்தத்தம் செய்தார். " சத்திய ஆவியாகிய அவர் வரும் போது, சகல சத்தியத்திற்குள்ளும் அவர்களை நடத்துவார்", அவர் அவர்களுக்கு அந்நிய பாஷைகளில் பேசும் வல்லமையைக் கொடுப்பார், அற்புத அடையாளங்கள் செய்யும் வல்லமையைக் கொடுப்பார். யோவான் 15:26 ல் கிறிஸ்து, சத்திய ஆவியானவரை தேற்றரவாளன் என்று குறிப்பிடுகிறார். யோவான் 16:13 ல், பரிசுத்த ஆவியானவரை சத்திய ஆவியானவர் என்று குறிப்பிடுகிறார். ஆகவே, பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலினால் எல்லா காரியங்களுமே சரியாக செய்யப்பட்டு அற்புதங்களினாலும், அடையாளங்களினாலும் வார்த்தை உறுதிப்படுத்தப்படும். இது கேட்கிறவர்களின் இருதயத்தில் விசுவாசத்தை உண்டாக்கும்.

கர்த்தருடைய மரணம், அடக்கம். உயிர்த்தெழுதலுக்குப் பின், பரலோகத்திலிருக்கிற தன் பிதாவினிடத்தில் திரும்பி செல்வதற்கு சற்று நேரத்திற்கு முன்பு, அவர் தம்முடைய அப்போஸ்தலர்களைப் பார்த்து இப்படியாகச் சொன்னார். "பரிசுத்த

ஆவி உங்களிடத்தில் வரும் போது, நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும் பூமியின் கடைசி பரியந்தமும் எனக்குச் சாட்சிகளா யிருப்பீர்கள் " (அப். 1:8) என்று. அதன் பின்பு, அப். 2:1-4 வசனங்களில், நாம் இப்படியாக வாசிக்கிறோம் "பெந்தெகொஸ்தெ என்னும் நாள் வந்தபோது, அவர் களெல்லாரும் ஒரு மனப்பட்டு ஓரிடத்தில் வந்திருந்தார்கள். அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம் போல, வானத்தி லிருந்து சடிதியாய் ஒரு முழக்கமுண்டாகி, அவர்கள் உட்கார்ந் திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று. அல்லாமலும் அக்கினி மயமான நாவுகள் போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்தது. அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ் வேறு பாஷைகளிலே பேசத் தொடங்கினார்கள்".

அங்கே வந்திருந்த ஜனங்கள் அப்போஸ்தலர்கள் தங்கள் மொழிகளில் பேசுவதைக் கேட்டு ஆச்சரியப்பட்டார்கள். முதலில், இவர்கள் அப்போஸ்தலர்கள் மதுபானம் குடித்திருந்ததாக நினைத் தார்கள். ஆனால், பேதுரு யோவேல் தீர்க்கதரிசியைக் கொண்டு இது கடைசி நாட்க ளில் மாம்சமான யாவர் மீதும் ஆவியை ஊற்றுவேன் என்று உரைத்த தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதல் என்று சொன் னார். அநேக அற்புதங்களும், அடையாளங்களும் அப்போஸ்தலர்க ளாலே செய்யப்பட்டது என்று வேதவசனம் சொல்கிறது (அப் 2:43). ஆனால், பரிசுத்த ஆவியின் வல்லமையை கர்த்தர் யாரிடத்தில் வாக்குத்தத்தம் செய்தார் என்று நாம் கவனிக்க வேண்டும். நிச்சய மாகவே, அப்போஸ்தலர்களிடத்தில்தான். ஆகையால்தான், அவர்கள் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்றார்கள் அல்லது அவர்கள் இப்படிப்பட்ட அற்புத அடையாளங்களைச் செய்யும்படி யாய் பரிசுத்த ஆவியானவர் அவர்கள் மேல் இறங்கினார். இதன் விளைவாகவும், இவர்களால் பிரசங்கிக்கப்பட்ட சுவிசேஷத்தைக் கேட்டதின் விளைவாகவும் மூவாயிரம் பேர் கர்த்தரில் விசுவாசம் வைத்து, தங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, பாவ மன்னிப்புக் கென்று ஞானஸ்நானம் பெற்று கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தார்கள். அவர்கள் இப்படிச் செய்ததினால் கர்த்தர் அவர்களை இரட்சித்து

பரிசுத்த ஆவியைக் கொடுத்து, சபையிலே சேர்த்துக் கொண்டார் (அப் 2:38, 40, 47).

ஆனால், அங்கே அப்போஸ்தலர்களால் தாங்கள் செய்ய வேண்டிய எல்லா வேலைகளையும் செய்ய முடியவில்லை. எனவே, கர்த்தர் தெரிந்தெடுக்கப்பட்ட நபர்களின் மீது அப்போஸ் தலர்கள் கைகளை வைக்கும்படி செய்தார். அதன்மூலம் அப்போஸ் தலர்கள் யார் மீது கைகளை வைத்தார்களோ அவர்களும் தேவனு டைய வார்த்தையை அறிவிக்கும்படி தேவனால் அனுப்பப்பட்ட வர்கள் என்பதை மக்கள் நம்பும்படியாகப் பற்பல பாஷைகளில் பேசும் வல்லமையும், அற்புத அடையாளங்களைச் செய்யும் வல்லமையும் அவர்களுக்கு கொடுக்கப்பட்டது (அப். 6:1-8).

அப்போஸ்தலர்களும் அவர்கள் யார் மீது கைகளை வைத் தார்களோ அவர் களைத் தவிர மற்ற எல்லோரும் பரிசுத்த ஆவியின் குறிப்பிட்ட அளவைத் தான் பெற்றிருந்தார்கள். இதற்கு ஒரே ஒரு விதிவிலக்கு அப்போஸ்தலர் 10, 11 அதிகாரங்களில் விவரிக்கப்பட் டிருக்கிறது. கொர்நேலியுவும் அவன் வீட்டாரும், "*புறஜாதிகள் கர்த்தராலும், யூதர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டார்கள்*" என்ப தை நிரூபிக்கும்படியாக பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைப் பெற்றார்கள்.

கடைசியாக, அப்போஸ்தலர்களும் அவர்கள் யார் மீது கைகளை வைத்தார்களோ அவர்களும் மரித்துப் போனார்கள். அதற்கு முன், பரிசுத்த ஆவியானவர் பல்வேறுபட்டவர்களை கர்த்த ருடைய வார்த்தையை எழுதும்படி வழிநடத்தினார். அப்பொழு திருந்து இன்று வரை தேவனுடைய வார்த்தையைப் படிப்பதி னாலும், பிரசங்கிக்கக் கேட்பதினாலும் மனிதனுடைய இருதயத் தில் விசுவாசம் உண்டாகிறது. அதன்மூலம் கர்த்தருக்கு கீழ்ப்படி கிறவர்கள் இரட்சிக்கப்பட்டு, அற்புத அடையாளங்கள் செய்ய முடியாத பரிசுத்த ஆவியின் அளவைப் பெறுகிறார்கள். தேவனு டைய வார்த்தை உறுதிப்படுத்தப்பட்டு விட்டதால் பற்பல பாஷை களில் பேசுவது உட்பட, எவ்வித அற்புத அடையாளங்கள் இனித் தேவையில்லை. ஆதலால், இன்று மனிதனிடத்தில் பரிசுத்த ஆவியானவர் அற்புத அடையாளங்கள் செய்யும் விதத்தில் கிரியை

செய்வதில்லை. ஒருவர் தேவனுடைய வசனங்களில் விவரிக்கப் பட்டிருக்கிற ஆவியின் வார்த்தையை விசுவாசியாவிட்டால், அவர் கள் ஓர் அற்புதத்தைக் கண்டாலும் அதனால் விசுவாசிக்கப் போவதில்லை.

ஆனால், பரிசுத்த ஆவியானவர் நமக்கு அற்புதங்களைச் செய்யும் வல்லமையைத் தராவிட்டால், நாம் பரிசுத்த ஆவியை பெற்றிருக்கிறோம் என்பதை எப்படி அறிந்து கொள்ள முடியும்? பரிசுத்த ஆவி நமக்குள் வாசம் செய்வதன் நோக்கம் என்ன? வேதாகமத்தில் விவரிக்கப்பட்டிருக்கிறபடி பரிசுத்த ஆவியின் சாட்சியை நாம் விசுவாசிக்கிறோம். நாம் கர்த்தரை விசுவாசித்து அவருக்கு அதாவது, அவருடைய சித்தத்திற்கு கீழ்ப்படியும் போது, அவர் நம்மை இரட்சிக் கிறார், நமக்கு பரிசுத்த ஆவி தரப்படுகிறது (அப் 2:38). அதன் பின்பு, ஆவியானவர் தம்முடைய வார்த்தையைக் கொண்டு நம்மை வழி நடத்துகிறார் (ரோமர் 8:1). நாம் தேவனு டைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர் தாமே நம்முடைய ஆவியுடனே கூடச் சாட்சி கொடுக்கிறார் (ரோமர் 8:16) என்று நமக்கு சொல்லப்பட்டிருக்கிறது. ஆவியானவர் தாமே நமக்காக வேண்டுதல் செய்கிறார் (ரோமர் 8:26) ஆவியானவர் நம்முடைய சுதந்திரத்தின் அச்சாரமாயிருக்கிறார் (எபேசியர் 1:14). மேலும், தேவனுடைய வார்த்தை ஆவியின் பட்டயமாயிருக்கிறது (எபேசியர் 6:17)

அநேக கள்ள ஆவிகள் உண்டு. ஆனால், தேவனுடைய மெய்யான ஆவி பரிசுத்த ஆவிதான். நீங்கள் அப்படிப்பட்ட பரிசுத்த ஆவியானவரை விசுவாசிக்கிறீர்களா? அவர் உங்களுக்குள் வாசம் செய்கிறாரா? அந்த ஆவியை நீங்கள் பெற்றிராவிட்டால் நீங்கள் தேவனுடையவர்களல்ல.

நீங்கள் கர்த்தரை விசுவாசித்து, உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கை யிட்டு, பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெறும்போது கர்த்தர் உங்களை இரட்சித்து, பரிசுத்த ஆவியைத் தந்து தம்முடைய சபையில் சேர்த்துக் கொள்வார். நீங்கள் இவைகளை ஏற்கனவே, செய்யவில்லை என்றால் நீங்கள் அப்படிச் செய்யும்படி நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## பாடம் - 4

# ஏன் நாங்கள் வேதாகமத்தை விசுவாசிக்கிறோம்?

வேதாகமம் மிகத் தொன்மையான ஒரு புத்தகம். இதை எழுதுவதற்கு நூற்றுக்கணக்கான வருடங்கள் பிடித்தது. இதன் ஆசிரியர்கள் பல்வேறுபட்ட பின்னணியைச் சேர்ந்தவர்கள். இருப்பினும், அவர்கள் எழுதினவைகளையெல்லாம் ஒன்று சேர்க்கும் போது, எவ்வித முரண்பாடும் இல்லாமல் ஒரே கருப் பொருளை உடைய ஒரு முழுமையான புத்தகமாக மாறிவிடுகிறது. இது சிருஷ்டிப்பின் தொடக்கத்தோடு ஆரம்பிக்கப்பட்டு, பூமியும் அதிலுள்ளவைகளும் அழிவதோடு முடிவடைகிறது. இப்புத்தகம் மனிதனைப் பற்றிச் சொல்லும் போது, மனிதனுடைய நல்ல குணம் பற்றியும், மோசமான குணம் பற்றியும், பேசி மனிதனுக்கு ஓர் இரட்சகர் அவசியம் என்று காட்டுகிறது. ஒப்பற்ற புத்தகம் என்னும் பொருளை உடைய வேதாகமம் இரண்டு முக்கிய பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது; பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடு என்று. பழைய ஏற்பாடு 39 புத்தகங்களை உள்ளடக்கியது, புதிய ஏற்பாடு 27 புத்தகங்களை உள்ளடக்கியது. எனவே, வேதாகமம் மொத்தமாக 66 புத்தகங்களைக் கொண்டது.

இன்னும், வேதாகமம் மூன்று முக்கிய காலங்களை உள்ளடக்கியுள்ளது. முதலாவது, முற்பிதாக்களின் காலம். இது ஆதாமில் தொடங்கி மோசேயின் நாட்கள் வரை, அதாவது 2500 ஆண்டு காலம் நீடித்தது. இந்த காலத்தில் தேவன் பிதாக்களிடத்தில் பேசினார். அவர்கள் தங்கள் குடும்ப அங்கத்தினர்களுக்கு தேவனுடைய சித்தத்தைத் தெரிவித்தார்கள். இரண்டாவது, மோசேயின் காலம். இது மோசேயில் தொடங்கி கிறிஸ்துவின் காலம் வரை சுமார் 1500 ஆண்டுகளை உள்ளடக்கியது. இந்தக் காலகட்டத்தில் தேவன் மோசேயின் பிரமாணம் என்றழைக்கப்படுகிற எழுதப் பட்ட பிரமாணத்தின் மூலமாகப் பேசினார். மூன்றாவது, கிறிஸ்தவ காலம் அல்லது கிறிஸ்துவின் பிரமாணத்தின் காலம். இது கிறிஸ்து

வின் மரணத்தோடு ஆரம்பித்து கிறிஸ்து திரும்ப வரும் வரை நீடிக்கும். இந்த காலத்தில் ஏற்கனவே 2000 வருடங்கள் உருண் டோடி விட்டன. இனிமேல் எத்தனை ஆண்டுகள் நீடிக்கும் என்பது தேவனைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது. ஒருவர் இந்தக் காலங்களை இப்படியாக விவரித்திருக்கிறார்; முற்பிதாக் களின் காலத்தை நட்சத்திர ஒளியை உடைய காலம் என்றும், மோசேயின் காலத்தை நிலவொளி உடைய காலம் என்றும், கிறிஸ்தவ காலத்தை சூரிய ஒளி உடைய காலம் என்றும் வர்ணித் திருக்கிறார். இதன் கருத்து என்னவென்றால், ஒவ்வொரு காலத்தி லும் ஒளி கூடிக் கொண்டே வருகிறது. சூரிய ஒளி காலம் என்பது முழுமையான வெளிச்சம் கொண்ட காலம் என்பதை அடை யாளப்படுத்துகிறது.

வேதாகமத்தில் இரண்டு முக்கிய ஏற்பாடுகள் வெளிப்ப டுத்தப்பட்டிருக்கிறபடியால், இவ்விரண்டிற்கும் இடையே உள்ள வேறுபாட்டை நாம் புரிந்து கொள்வது அவசியமாயிருக்கிறது. முதலாவது, தேவன் தம்முடைய சித்தத்தை தம் ஜனங்களுக்கு வெளிப்படுத்தினார். இது, முற்பிதாக்களின் காலத்திலும், மோசே யின் பிரமாண காலம் முழுவதிலும் தொடர்ந்தது. அதன் பின்பு, தேவன் தம் ஜனங்களுக்கு ஒரு புதிய பிரமாணத்தை ஏற்படுத் தினார். இந்தப் பிரமாணம் இயேசு கிறிஸ்துவால் கொடுக்கப்பட்டு இந்நாள் வரை நம்மைத் தொடர்ந்து கட்டுப் படுத்துகிறது. தேவன் ஒரு புதிய சித்தத்தைக் கொடுக்கும் போது, அது முதல் ஏற்பாட் டை அல்லது முந்தின சித்தத்தை பழையதாக்குகிறது. ஆகவே, அந்த முதல் ஏற்பாடு ஒரு சட்டமாக நம்மைக் கட்டுப்படுத்துவ தில்லை. ஆனால், இன்றும் அது வரலாறாக இருந்து, தேவனுக் குக் கீழ்ப்படிந்தவர்களை அவர் எப்படி ஆசீர்வதித்தார் என்றும், கீழ்ப்படியாதவர்களை அவர் எப்படித் தண்டித்தார் என்றும் அநேக உதாரணங்களைத் தருகிறது. அத்தோடு அது வாழ்க்கைக் கான அநேக நடைமுறைக் கொள்கைகளை உள்ளடக்கி, அதன் மூலம் நாம் எல்லோருமே எப்படிப் பயன்பெறலாம் என்று காட்டுகிறது. அதே வேளையில், ஒரு பிரமாணமாக இருந்து இன்று அது நம்மைக் கட்டுப்படுத்துவதில்லை. புதிய ஏற்பாட் டில் நாம் காணும் பிரமாணம் தான் இன்று நம்மைக் கட்டுப் படுத்துகிறது.

கிறிஸ்து சிலுவையில் மரித்தபோது, புதிதாய் ஒரு பிரமாணத்தைத் தரும்படி பழைய பிரமாணத்தை எடுத்துப் போட்டார். எபிரெய ஆசிரியரின் வார்த்தைகளை தயவு செய்து இங்கே கேளுங்கள். ஏனென்றால், "*எங்கே மரணசாசனமுண்டோ, அங்கே அந்தச் சாசனத்தை எழுதினவனுடைய மரணமும் உண்டாக வேண்டும். எப்படியெனில், மரணமுண்டான பின்பே மரணசாசனம் உறுதிப்படும்; அதை எழுதினவன் உயிரோடிருக்கையில் அதற்குப் பெலனில்லையே*" (எபிரெயர் 9:16,17). எபிரெய ஆசிரியர் தொடர்ந்து சொல்லும் போது, தேவனே உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ வருகிறேன் என்று சொன்னார். "*இரண்டாவதை நிலைநிறுத்துவதற்கு முதலாவதை நீக்கிப் போடுகிறார். இயேசு கிறிஸ்துவினுடைய சரீரம் ஒரே தரம் பலியிடப்பட்டதினாலே, அந்தச் சித்தத்தின்படி நாம் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம்*" (எபிரெயர் *10:9,10*).

முன்பு குறிப்பிடப்பட்டிருக்கிற காரியங்களை வைத்துப் பார்க்கும் போது, வேதாகமம் ஏன் மற்றுமொரு வரலாற்று புத்தகமாக இருக்கக் கூடாது?

உண்மை தான், இது வரலாற்று புத்தகம் தான். அத்தோடு, வேதாகமம் ஒரு புவியியல் புத்தகம், இது ஒரு அறிவியல் புத்தகம். இது ஒரு சிறந்த இலக்கிய புத்தகம். ஆனால், வேதாகமம் இப்படிப்பட்ட புத்தகங்களையெல்லாம் விட மேலானது. வேதாகமம், தேவனுடைய வார்த்தைகளைக் கொண்டுள்ள தேவனால் ஏவப்பட்ட ஒன்று என்று விசுவாசிக்கிறோம். இது கர்த்தருடைய வார்த்தைகளைக் கொண்டது என்று கூறுகிறது (எபிரெயர் 4:2) இது பற்றி பவுல் இப்படியாகச் சொன்னார். வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும் நீதியைப்படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது (II தீமோத்தேயு 3:16, 17) பேதுரு அப்போஸ்தலனும், வேதத்திலுள்ள எந்தத் தீர்க்கதரிசனமும் சுயதோற்றமான பொருளையுடையதாயிராதென்று நீங்கள் முந்தி அறிய வேண்டியது. தீர்க்கதரிசனமானது ஒரு காலத்திலும் மனுஷ

ருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள் (II பேதுரு 1:20,21) என்று வெளிப்படுத்தியுள்ளார்.

வேதாகமம் தேவனுடைய வார்த்தை அல்லது கர்த்தருடைய வார்த்தை என்றழைக்கப்படுவதால் நாங்கள் அதை விசுவாசிக்கிறோம். கிறிஸ்து பிதாவை நோக்கி ஜெபித்தபோது, "உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்" என்றார் (யோவான் 17:17). பவுலடியார் ரோமாபுரியாருக்கு இப்படியாக எழுதினார். "கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக. சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும், ஞானப் பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்துப் புத்தி சொல்லிக் கொண்டு, உங்கள் இருதயத்திலே கர்த்தரைப் பக்தியுடன்பாடி" என்று (கொலோ 3:16). மேலும், பவுல், "ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும் கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்" (ரோமர் 10:17) என்கிறார். இன்னும் பவுல் தீமோத்தேயுவுக்கு சொல்லும் போது, "சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம் பண்ணு; எல்லா நீடிய சாந்தத்தோடும், உபதேசத்தோடும், கண்டனம் பண்ணி, கடிந்து கொண்டு, புத்தி சொல்லு" என்கிறார். (II தீமோ 4:2). மேலும், யாக்கோபு ஆசிரியர் சொல்லும் போது, "அல்லாமலும், நீங்கள் உங்க ளை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதன்படி செய்கிறவர்களையும் இருங்கள்" (யாக்கோபு 1:22). பரிசுத்த வேதாகமம், தேவனுடைய வார்த்தை, கர்த்தரு டைய வார்த்தை, வேத வாக்கியங்கள், தேவனுடைய கட்டளை கள், சத்தியம் என்றும் அழைக்கப்படுகிறது. அது அப்படித்தா னென்று நாங்கள் விசுவாசிக்கிறோம்.

நாங்கள் வேதாகமத்தை விசுவாசிக்கிறோம். ஏனெனில், தொல்பொருள் ஆராய்ச்சி, வரலாறு, புவியியல், அறிவியல் போன்ற துறைகளின் இன்றைய தரத்தோடு வேதாகமம் வெளிப்படுத்தியிருக்கின்ற உண்மைகள் அப்படியே ஒத்துப்போகிறது. உதாரணத்திற்கு, தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களின் மகத்தான கண்டுபிடிப்புகளுக்கு பல நூறு ஆண்டுகள் முன்பாகவே, வேதாகமம்

இந்தக் காரியங்களனைத்தையும் வெளிப்படுத்தியிருக்கிறது. சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்ட மிகப்பெரிய கண்டுபிடிப்புகளில் ஒன்று சவக்கடல் தோல் சுருள். அவர்கள் அப்படிக் கண்டுபிடிப் பதற்கு முன்பாகவே பழைய ஏற்பாட்டு எழுத்துக்கள் கி.பி. 900 முதல் 1000-ம் ஆண்டுகளைச் சேர்ந்த தோல் சுருள்களை அடிப்ப டையாகக் கொண்டிருந்தது. எஸ்தர் புத்தகம் தவிர, பழைய ஏற்பாட்டு புத்தகங்களை உள்ளடக்கிய சவக்கடல், தோல் சுருள், கி.மு. 200 மற்றும் கி.பி. 68 காலத்தைச் சேர்ந்தவை. இந்த எழுத்துக்கள், பழைய ஏற்பாட்டு வசனங்களெல்லாம் உண்மை தான் என்பதை உறுதிப்படுத்த உதவி செய்கிறது. வரலாற்றைப் பொறுத்த வரை, வேதாகமமும், உலக வரலாறும் ஒன்றுக் கொன்று ஒத்துப்போகிறது. புவியியலில் இன்று நமக்கு பரிச்சய மான பட்டணங்கள், மலைகள், கடல்கள் எல்லாம் வேதாகமத் தின் மூலமாக நாம் அறிந்து கொள்கிறோம். சிலர், வேதாகமும், விஞ்ஞானமும் ஒத்துப்போவதில்லை என்று நினைத்தார்கள். ஆனால், இது உண்மையல்ல. விஞ்ஞானம் என்ற வார்த்தை, உண்மை என்கிற கருத்தை அடிப்படையாகக் கொண்டது. நிச்சயமாகவே, வேதாகமம் உண்மையோடு முரண்படுவதில் லை. வேத வாக்கியங்களும், தவறான அறிவியலும் அல்லது மனிதர்களுடைய கொள்கைகளும் ஒன்றுக்கொன்று முரண்ப டும். வேதாகமம், விஞ்ஞானமும் ஒத்துப்போகிறது என்பதற்கு ஓர் அருமையான உதாரணம் பூமி உருண்டை என்பது தான் (ஏசாயா 40:22; யோபு 26:7). இது தவிர, உங்களுக்குக் கொடுப்ப தற்கு எங்களிடம் ஏராளமான உதாரணங்கள் உண்டு. ஆனால், நேரம் தான் இல்லை.

வேதாகமம் தேவனுடைய வார்த்தை என நாங்கள் விசுவா சிப்பதற்குக் காரணம், இதில் இடம்பெற்றுள்ள தீர்க்கதரிசனங்க ளெல்லாம் தவறாமல் அப்படியே நிறைவேறியிருப்பது தான். அதில் ஒன்று, இயேசு கிறிஸ்து ஒரு கன்னியினிடத்தில் பிறப்பார் என்பதாகும் (ஏசாயா 7:14). மத்தேயு 1 ஆம் அதிகாரத்தில், கன்னி யாகிய மரியாளிடத்தில் கிறிஸ்து பிறந்ததின் மூலம் இந்த தீர்க்க தரிசனம் அப்படியே நிறைவேறியது. யோவேல் 2:28, 29 வசனங் களில், மாம்சமான யாவர் மேலும் கர்த்தருடைய ஆவி ஊற்றப் படும் என்று தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டது. இது, அப்போஸ்த

லருடைய நடபடிகள் 2 ஆம் அதிகாரத்தில் நிறைவேறியது. இவை தவிர அநேக தீர்க்கதரிசனங்கள் உரைக்கப்பட்டு, பின்பு நிறை வேறியதை நாம் காண முடியும்.

வாழ்க்கையின் மிகப்பெரிய கேள்விகளுக்கு வேதாகமம் பதில் அளிப்பதால் நாங்கள் அதை விசுவாசிக்கிறோம். வேதாகமம் மனிதன் எங்கே இருந்து வந்தான் என்றும், அவன் ஏன் இங்கே இருக்கிறான் என்றும், அவன் எங்கே போகிறான் என்றும் நமக்குச் சொல்கிறது. அதுமாத்திரமல்ல, இரட்சிக்கப்பட நான் என்ன செய்ய வேண்டும்? என்கின்ற கேள்விக்கு வேதாகமம் பதில் அளிக்கிறது (அப் 2:37,38; அப். 16:30-33).

வேதாகமம், மனிதனின் ஒட்டுமொத்த நன்மைக்காக அவன் மீது ஒரு மகத்தான செல்வாக்கை செலுத்துவதால் நாங்கள் அதை விசுவாசிக்கிறோம். வேதாகமம் பாவத்தைக் கண்டித்து, நீதியான வாழ்க்கையை ஊக்கப்படுத்துகிறது. இதன் காரணமாக, உலகம் ஒரு சிறந்த இடமாக மாறியிருக்கிறது.

கர்த்தருடைய வார்த்தை ஒரு போதும் ஒழிந்து போவதில்லை என்பதால் நாங்கள் வேதாகமத்தை விசுவாசிக்கிறோம். கிறிஸ்து இப்படியாகச் சொன்னார். “வானமும், பூமியும் ஒழிந்து போனாலும் என் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை” (மத்தேயு 24:35). மேலும், கர்த்தருடைய வசனமோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கும் என்று பேதுரு சொல்கிறார் (பேதுரு 1:25). இன்னும், கடைசி நாளில் தான் சொல்லிய வசனமே நம்மை நியாயந்தீர்க்கும் என்று கிறிஸ்து சொன்னார் (யோவான் 12:48).

வேதாகமத்திற்கு அநேக எதிரிகள் இருந்தார்கள் என்பது உண்மைதான். அவர்கள் வந்தார்கள், போனார்கள். ஆனால், வேதாகமம் இன்றும் நிலைத்து நிற்கிறது. இந்தப் புத்தகத்தைப் பற்றி உங்கள் மதிப்பீடு என்ன? இதை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? அநேகர் விசுவாசிக்கிறார்கள். உண்மையில், உலகிலேயே அதிகமாக மொழியாக்கம் செய்யப்படும் புத்தகம் வேதாகமம் தான். அது மாத்திரமல்ல, உலகிலேயே அதிகமாக விற்பனையாகும் புத்தகமும் இது தான்.

நீங்கள் ஒவ்வொருவரும் வேதாகமத்தை வாசிக்கும்படி நான் உங்களை உற்சாகப்படுத்துகிறேன். வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்க்கும்படி கிறிஸ்து சொன்னார். (யோவான் 5:39) நம்மை நாம் தேவனுக்கு முன்பாக உத்தமர்களாக நிறுத்தும்படி வேத வசனங்களைப் படிக்க வேண்டும் என பவுல் வலியுறுத்தினார் (II தீமோத்தேயு 2:15). மறுபடியும், கிறிஸ்து மனிதன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று சொன்னார் (மத்தேயு 4:4). யோவான் இப்படியாக எழுதியுள்ளார். " இந்தத் தீர்க்கதரிசன வசனங்களை வாசிக்கிறவர்களும், கேட்கிறவர்களும் இதில் எழுதியிருக்கிறவைகளைக் கைக்கொள்கிறவர்களும் பாக்கியவான்கள், காலம் சமீபமாயிருக்கிறது " என்று. (வெளி 1:3).

நீங்கள் தேவனுடைய வார்த்தையை வாசித்து, படித்து, அதை விசுவாசித்து தேவனில் நம்பிக்கை வைத்து, அதன் உபதேசத்துக்குக் கீழ்ப்படிந்து, கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று விசுவாசித்து, உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, கிறிஸ்துவில் நீங்கள் வைத்திருக்கிற விசுவாசத்தை அறிக்கைசெய்து, பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றால், அதாவது, தண்ணீரில் அடக்கம் பண்ணப்பட்டால் கர்த்தர் உங்களை இரட்சித்துத் தம்முடைய சபையில் சேர்த்துக் கொள்வார் (மாற்கு 16:16; அப் 2:38,47).

## பாடம் - 5

# ஏன் நாங்கள் நியாயப் பிரமாணத்தின் கீழ் இல்லை?

நாம் வேதாகமம் பற்றிப் படித்த போது வேதாகமம் எப்படி மூன்று பிரதான பிரமாணங்களைக் கொண்ட காலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளதென்று காட்டினோம். முதலாவது, முற்பிதாக்களின் காலத்தில் இருந்த பிரமாணம், இரண்டாவது மோசேயின் காலத்தில் இருந்த பிரமாணம், மூன்றாவது நாம் இன்று வாழ்ந்து கொண்டிருக்கும் கிறிஸ்துவின் பிரமாணம். வேதாகமம், பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என இரு பிரிவுகளாகப் பிரிந்து இந்த பிரமாணங்கள் இடையே உள்ள வித்தியாசத்தை நாம் காண உதவி செய்கிறது. முற்பிதாக்கள் மற்றும் மோசேயின் பிரமாணங்கள் வேதாகமத்தின் பழைய ஏற்பாட்டிலும், கிறிஸ்துவின் பிரமாணம் புதிய ஏற்பாட்டிலும் காணப்படுகிறது. பழைய ஏற்பாடு இன்று நம்மைக் கட்டுப்படுத்துவதில்லை. ஆனால், புதிய ஏற்பாடு இன்றும் நம்மை தொடர்ந்து கட்டுப்படுத்துகிறது. காலம் உள்ள வரை அது நம்மை கட்டுப்படுத்தும். நாம் மேலும் படிக்கும்போது, இதை வசனத்திலிருந்து நாங்கள் உங்களுக்கு எடுத்துக்காட்டுவோம்.

நீங்கள் அறிந்திருக்கிறீர்களோ அல்லது அறியாமலிருக்கிறீர்களோ, இன்று உலகத்தில் இருக்கும் மூன்று முக்கியமான மதங்கள், தங்கள் விசுவாசத்திற்காக பழைய ஏற்பாட்டிற்குச் செல்கிறது. அம்மதங்களைச் சார்ந்தவர்கள் பழைய ஏற்பாடு தங்களை கட்டுப்படுத்துகிறதாக எண்ணி, அதை விசுவாசித்து, மற்றவர்களையும் அதற்குக் கட்டுப்படுத்தத் தேடுகிறார்கள். அவர்கள் காரியங்களைத் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை வேதாகமத்திலிருந்து நாங்கள் உங்களுக்குக் காட்டுவோம்.

ஓர் ஏற்பாடு என்பது உயிலைக் குறிக்கிறது என்று நான் உங்களுக்கு விளக்க விரும்புகிறேன். உதாரணமாக, ஒரு மனிதனு

டைய உயில் அல்லது அவன் செய்து வைத்திருக்கும் ஏற்பாடு குறித்து நாம் பேசுகிறோம். இன்றைய நாட்களில் அநேகர் தங்கள் மரணத்திற்கு பிறகு தங்கள் சொத்து அல்லது பணம் என்ன செய்யப்பட வேண்டும் என்பது குறித்து உயில் எழுதி வைக்கிறார் கள். சிலர், தங்கள் மரணத்திற்கு முன்பு ஒன்றுக்கும் மேற்பட்ட உயிலைக் கூட எழுதி வைக்கிறார்கள். ஏனென்றால், வாழ்க்கை யின் அந்திய காலத்தில் தங்களுக்கு முதல் உயில் பிடிக்கவில்லை யென்றால், இரண்டாவது உயிலைப் பயன்படுத்த வேண்டும் என்பதற்காக அப்படிச் செய்கிறார்கள். அவர்கள் உயிரோடிக்கும் வரை தாங்கள் தெரிந்து கொள்ளுகிறபடி எத்தனை உயில்களை வேண்டுமானாலும் உண்டாக்கலாம். அவர்கள் வைத்திருக்கும் செல்வத்தை அவர்கள் என்ன வேண்டுமானாலும் செய்யலாம். ஆனால், அவர்கள் மரிக்கும் போது, அவர்களின் கடைசி உயில் தான் செல்லுபடியாகும், அது சட்டப்பூர்வமான உயிலாக இருந்தால். பணமும், சொத்தும் அந்த உயிலின் நிபந்தனைகளின்படி பகிர்ந்து கொடுக்கப்பட வேண்டும்.

அதுபோலவே, தேவன் தம்முடைய ஜனங்களுக்கு ஒரு ஏற்பாட்டை அல்லது உயிலை ஏற்படுத்திக் கொடுத்தார். அது நூற்றுக் கணக்கான வருடங்கள் தொடர்ந்தது. அந்த வருடங்களில் அது அவர் களைக் கட்டுப்படுத்தியது. ஆனால், தேவன் ஒரு புதிய ஏற்பாட்டை அல்லது உயிலை ஏற்படுத்தின நாள் ஒன்று வந்தது. தேவன் அந்த ஏற்பாட்டைக் கொடுத்த போது, கிறிஸ்துவின் மரணத் தினால் அது முத்திரைப்போடப்பட்டபோது, முதல் ஏற்பாடு பழைமையானது. அதனால் தான், நாங்கள் பழைய ஏற்பாடு என்றும், புதிய ஏற்பாடு என்றும் குறிப்பிடுகிறோம். எப்படி இந்த தேசத்தில் வாழும் ஒருவர், நூறு வருடங்களுக்கு முன்பு இந்த தேசத்தில் இருந்த சட்டத்தின்படி வாழமுடியாதோ, அது போலவே, நாமும் பக்தியின் பெயரால் செய்யும் காரியங்களுக்கு பழைய ஏற்பாட்டுக்குச் செல்ல முடியாது. மாறாக, இன்று வாழும் மக்கள் இன்று என்ன சட்டம் நடைமுறை யில் இருக்கிறதோ அதன்படி தான் வாழவேண்டும். அதுபோலவே, இன்றைய நாட்களில் வாழும் நாம் புதிய ஏற்பாட்டில் வெளிப்படுத் தப்பட்டிருக்கின்ற கிறிஸ்துவின் பிரமாணத்தின்படி ஆளப்படுவதில் திருப்திபட்டுக் கொள்ளவேண்டும்.

வேதவசனங்கள் அப்படித்தான் போதிக்கிறதா என்பதைக் காண நாம் இப்பொழுது வசனங்களிடத்தில் செல்வோம். புதிய ஏற்பாட்டின் எபிரெயர் புத்தகத்தை என்னோடு திருப்பிக் கொள் ளுங்கள். அங்கே கிறிஸ்துவைப் பற்றி சொல்லும் போது, இதன் ஆசிரியர் இப்படியாகச் சொல்கிறார். "ஆகையால் முதலாம் உடன்படிக்கையின் காலத்திலே நடந்த அக்கிரமங்களை நிவர்த்தி செய்யும் பொருட்டு அவர் மரணமடைந்து, அழைக்கப்பட்டவர் கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நித்திய சுதந்திரத்தை அடைந்து கொள்வதற்காக, புது உடன்படிக்கையின் மத்தியஸ் தராயிருக் கிறார். ஏனென்றால், எங்கே மரணசாசனமுண்டோ, அங்கே அந்தச் சாசனத்தை எழுதினவனுடைய மரணமும் உண்டாக வேண்டும். எப்படியெனில், மரணமுண்டான பின்பே மரணசா சனம் உறுதிப்படும்; அதை எழுதினவன் உயிரோடிருக்கையில் அதற்குப் பெலனில்லையே" (எபிரெயர் 9:15-17). கிறிஸ்து சிலுவை யில் மரித்த போது, முதலாம் ஏற்பாட்டின் கீழ் வாழ்ந்த உண்மை யுள்ளவர்களுக்கு அவர் இரட்சிப்பை சாத்தியமாக்கினார். ஆனால், அவர் மரித்த போது, பழைய ஏற்பாட்டை எடுத்துப் போட்டு, அதற்குப் பதிலாக புதிய ஏற்பாட்டை வைத்தார் என்பதை தயவு செய்து கவனியுங்கள். மரணமுண்டான பின்பே மரணசாசனம் உறுதிப்படும் என்று அவர் சொன்னதை மறுபடியும் உற்று கவனியுங்கள்.

நாம் தொடர்ந்து படிக்கும் போது, எபிரெய ஆசிரியர் இப்படியாகச் சொல்லிக் கொண்டு போகிறார். "இப்படியிருக்க, நியாயப் பிரமாணமானது வரப்போகிற நன்மைகளின் பொருளா யிராமல், அவைகளின் நிழலாய் மாத்திரம் இருக்கிறபடியால், வருஷந்தோறும் இடைவிடாமல் செலுத்தப்பட்டு வருகிற ஒரே விதமான பலிகளினாலே அவைகளைச் செலுத்த வருகிறவர் களை ஒருக்காலும் பூரணப்படுத்தமாட்டாது. பூரணப்படுத்து மானால், ஆராதனை செய்கிறவர்கள் ஒரு தரம் சுத்தமாக்கப்பட்ட பின்பு, இன்னும் பாவங்களுண்டென்று உணர்த்தும் மனச்சாட்சி அவர்களுக்கு இல்லாதிருப்பதினால், அந்த பலிகளைச் செலுத்து கிறது நிறுத்தப்படுமல்லவா? அப்படி நிறுத்தப்படாதபடியால், பாவங்கள் உண்டென்று அவைகளினாலே வருஷந்தோறும் நினைவுகூருதல் உண்டாயிருக்கிறது. அல்லாமலும் காளை,

*வெள்ளாட்டுக்கடா இவைகளுடைய இரத்தம் பாவங்களை நிவர்த்தி செய்யமாட்டாதே. ஆகையால், அவர் உலகத்தில் பிரவேசிக்கும் போது பலியையும், காணிக்கையையும் நீர் விரும்பவில்லை, ஒரு சரீரத்தை எனக்கு ஆயத்தம் பண்ணினீர்; சர்வாங்க தகன பலிகளும், பாவநிவாரண பலிகளும் உமக்குப் பிரியமானதல்ல என்றீர். அப்பொழுது நான்; தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ வருகிறேன், புஸ்தகச் சுருளில் என்னைக் குறித்து எழுதியிருக்கிறது என்று சொன்னேன் என்றார். நியாயப் பிரமாணத்தின்படி செலுத்தப்பட்டு வருகிற பலிகளைக் குறித்து மேற்சொல்லியபடி; பலியையும், காணிக்கையையும், சர்வாங்க தகன பலிகளையும், பாவநிவாரண பலிகளையும் நீர் விரும்பவில்லை. அவைகள் உமக்குப் பிரியமானதல்ல என்று சொன்ன பின்பு: தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ, வருகிறேன் என்று சொன்னார். இரண்டாவதை நிலை நிறுத்துவதற்கு முதலாவதை நீக்கிப் போடுகிறார். இயேசு கிறிஸ்துவினுடைய சரீரம் ஒரே தரம் பலியிடப்பட்டதினாலே, அந்தச் சித்தத்தின்படி நாம் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம் ” (எபிரெயர் 10:1-10).* பழைய ஏற்பாட்டில் விவரிக்கப்பட்டிருக்கிற பிரமாணமானது வரப்போகிறவைகளுக்கு நிழலாய் மாத்திரம் இருக்கிறது என்று எபிரெய ஆசிரியர் எடுத்துக்காட்டுவதை கவனியுங்கள். செலுத்தப்பட்ட பலிகளினாலே அவர்களுடைய பாவங்களை முற்றிலுமாக, நிரந்தரமாக எடுத்துப் போட முடிய வில்லை. ஏனென்றால், அவர்களுடைய பாவங்கள் வருடந்தோறும் நினைக்கப்படுகின்றன. அதன் பின்பு, கிறிஸ்துவினுடைய சரீரம் ஒரே தரம் பலியிடப்பட்டதென்றும் அந்த பலியின் மூலமாக கிறிஸ்து முதலாவதை அதாவது, பழைய ஏற்பாட்டை எடுத்துப் போட்டு, இரண்டாவதை அதாவது, புதிய ஏற்பாட்டை நிலை நிறுத்தினார் என்றும் எபிரெய ஆசிரியர் சொல்லுவதைக் கவனியுங் கள். இப்பொழுதும் சாத்தியமானதாக இருந்தால் கூட பழைய ஏற்பாட்டுக்குத் திரும்பிச் செல்ல யார் விரும்புவர்? சிலுவையில் கிறிஸ்து அடைந்த தியாக மரணத்தின் முக்கியத்துவத்தையும், நாம் பழையதை விட ஒரு சிறந்த மேலான பிரமாணத்தின் கீழ் இருக்கி றோம் என்பதையும் சரியாகப் புரிந்து கொண்டவர்கள் யாரும் நிச்சயமாக பழைய பிரமாணத்துக்கு திரும்பிச் செல்லமாட்டார்கள்.

பழைய ஏற்பாட்டில் விவரிக்கப்பட்டிருக்கிறபடி கிறிஸ்துவே மோசேயின் பிரமாணத்தின் கீழ் தான் வாழ்ந்தார். ஆனால், தன்னுடைய மரணத்துக்குப் பிறகு நடைமுறைக்கு வந்து, புதிய ஏற்பாடாக அதன் கீழ் இருந்து வாழ்பவர்களைக் கட்டுப்படுத்தும் சத்தியத்தையும், கொள்கைகளையும் உபதேசிப்பதில் தன்னுடைய நாட்களைச் செலவிட்டார். ஆகவே, கிறிஸ்து இந்த உலகத்தில் வாழ்ந்த போது, நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடித்து மற்றவர்களை அதன்படி செய்ய உற்சாகப்படுத்தினார். அவர் இப்படியாக விளக்கினார். *"நியாயப்பிரமாணத்தையானாலும், தீர்க்கதரிசனங்களையானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக் கொள்ளாதேயுங்கள்; அழிக்கிற தற்கு அல்ல, நிறைவேற்றுவதற்கே வந்தேன். வானமும், பூமியும் ஒழிந்து போனாலும், நியாயப்பிரமாணத்திலுள்ளதெல்லாம் நிறைவேறுமளவும், அதில் ஒரு சிறு எழுத்தாகிலும், ஓர் எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்து போகாது என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்"* (மத்தேயு 5:17,18). இங்கே கிறிஸ்து, நியாயப்பிரமாணம் அழிக்கப்பட மாட்டாது. ஆனால், அது நிறைவேற்றப்படும் என்று சொல்கிறார். அது நிறைவேறின பிறகு அதற்கு என்ன நடக்கும்? இயற்கையாகவே அது ஒழிந்து போகும் அல்லது யாரையும் தன்னுடைய பிரமாணங்களால் கட்டுப் படுத்தாது.

கிறிஸ்து சிலுவையில் மரித்தபோது தேவாலயத்தின் திரைச் சீலை மேல் தொடங்கி கீழ்வரைக்கும் இரண்டாகக் கிழிந்தது (மத்தேயு 27:50). இது தேவாலயமும், பழைய பிரமாணத்தின் எல்லா காரியங்களும் முற்றிலுமாக நீக்கப்பட்டு அவைகள் ஒரு போதும் மனிதனைக் கட்டுப்படுத்தாது என்பதற்கான அடையாளமாக இருந்தது.

II கொரிந்தியர் 3:6 ம் வசனத்தில் பவுல் சொல்லும் போது, *"புது உடன்படிக்கையின் ஊழியக்காரராயிருக்கும்படி, அவரே எங்களைத் தகுதியுள்ளவர்களாக்கினார்; அந்த உடன்படிக்கை எழுத்திற்குரியதாயிராமல், ஆவிக்குரியதாயிருக்கிறது; எழுத்து கொல்லுகிறது, ஆவியோ உயிர்ப்பிக்கிறது"*. இந்த வசனத்திலும் பின்வரும் வசனத்திலும் பவுல் கற்பலகைகளில் எழுதப்பட்டிருந்த மோசேயின் பிரமாணத்துக்கும், ஆவியின் பிரமாணமாகிய

கிறிஸ்துவின் பிரமாணத்துக்கும் இடையே உள்ள வித்தியாசத்தைக் காட்டுகிறார். எழுத்து எப்படிக் கொல்லுகிறது என்றும், அதே நேரத்தில் கிறிஸ்துவின் பிரமாணம் எப்படி ஜீவனைக் கொண்டு வருகிறதென்றும் காட்டுகிறார்.

அப்போஸ்தலனாகிய பவுல், மோசேயின் பிரமாணத்துக்கும், கிறிஸ்துவின் பிரமாணத்துக்கும் இடையே உள்ள வித்தியாசத்தை கலாத்தியா கிறிஸ்தவர்களுக்கு இப்படியாக எழுதுகிறார். அப்படி யானால், நியாயப் பிரமாணத்தின் நோக்கமென்ன? வாக்குத்தத் தத்தைப் பெற்ற சந்ததி வருமளவும் அது அக்கிரமங்களினிமித்த மாகக் கூட்டப்பட்டு, தேவதூதரைக் கொண்டு மத்தியஸ்தன் கையிலே கட்டளையிடப்பட்டது. மத்தியஸ்தன் ஒருவனுக்குரிய வனல்ல. தேவனே ஒருவர். அப்படியானால், நியாயப் பிரமாணம் தேவனுடைய வாக்குத்தத்தங்களுக்கு விரோதமா? அல்லவே; உயிரைக் கொடுக்கத்தக்க நியாயப்பிரமாணம் அருளப்பட்டிருந் தானால், நீதியானது நியாயப்பிரமாணத்தினால் உண்டாயிருக் குமே. அப்படியிராதபடியால், இயேசு கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கிற வாக்குதத்தம் விசுவாசமுள்ளவர் களுக்கு அளிக்கப்படும்படி வேதம் எல்லாரையும் ஏகமாய்ப் பாவத் தின் கீழ் அடைத்துப் போட்டது. ஆதலால், விசுவாசம் வருகிறதற்கு முன்னே, வெளிப்படப்போகிற விசுவாசத்திற்கு ஏதுவாக நாம் அடைக்கப்பட்டவர்களாய் நியாயப்பிரமாணத்தின் கீழ் காவல் பண்ணப்பட்டிருந்தோம். இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுவதற்கு நியாயப்பிரமாணம் நம்மைக் கிறிஸ் துவினிடத்தில் வழி நடத்துகிற உபாத்தியாய் இருந்தது. விசுவாசம் வந்த பின்பு நாம் உபாத்திக்குக் கீழானவர்களல்லவே. நீங்களெல் லாரும் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினால் தேவனு டைய புத்திரராயிருக்கிறீர்களே. ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக் குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேரோ, அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டீர்களே. யூதனென்றும், கிரெக்கனென்றுமில்லை, அடிமையென்றும், சுயாதீனனென்று மில்லை, ஆணென்றும், பெண்ணென்றுமில்லை; நீங்களெல் லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள். நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்திரராயும் இருக்கிறீர்கள்.

(கலா 3:19-29). கலாத்தியா கிறிஸ்தவர்களிடம் பவுல் நியாயப்பிர மாணம் அவர்களை கிறிஸ்துவினிடத்தில் கொண்டு வந்ததாகவும் அதற்கு பிறகு அவர்கள் ஒரு போதும் நியாயப் பிரமாணத்தின் கீழ் இல்லை என்றும் கூறுகிறார். வேறு விதமாகச் சொன்னால், நியாயப்பிரமாணம் அதன் நோக்கம் முடிந்த பிறகு எடுத்துப் போடப்பட்டது. இப்போது நாம் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிந்தவர் களாயிருந்தால் நாமெல்லாரும் கிறிஸ்துவுக்குள் ஒன்றாயிருக்கி றோம்.

நாம் மோசேயின் பிரமாணத்தின் கீழ் இல்லை அல்லது பழைய ஏற்பாட்டின் கீழ் இல்லை என்பதை தெளிவாகக் காட்டு வதற்கு ஏராளமான வேதவசனங்கள் இருக்கின்றன. நாம் எல்லோ ரும் இப்போது கிறிஸ்துவின் பிரமாணத்தின் கீழ் இருக்கிறோம். சிறந்ததும் மற்றும் பூரணமானதுமான பிரமாணத்தின் கீழ் இருப்ப தற்கு நாம் எவ்வளவு பாக்கியவான்களாயிருக்க வேண்டும்!.

என் நண்பர்களே, கிறிஸ்து நீங்கள் இரட்சிக்கப்படும்படி உங்களுக்காக மரித்தார். நீங்கள் அவரை விசுவாசித்து உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, அவரை தேவனுடைய குமார னென்று அறிக்கை செய்து, பாவமன்னிப்புக்கென்று ஞானஸ் நானம் பெற்றால் அவர் உங்களை இரட்சித்து தம்முடைய சபை யில் சேர்த்துக் கொள்வார்.

## பாடம் - 6

# ஏன் நாங்கள் இரட்சிக்கப்பட வேண்டும்?

நாம் ஏன் தேவனை, கிறிஸ்துவை, பரிசுத்த ஆவியானவரை, வேதாகமத்தை விசுவாசிக்கிறோம் என்று இதுகாறும் பார்த்தோம். இதற்கு முந்தின பாடத்தில், நாம் ஏன் மோசேயின் பிரமாணத்தின் கீழ் அல்லது பழைய ஏற்பாட்டின் கீழ் இல்லை என்பது பற்றிப் பேசினோம். நியாயப்பிரமாணத்தின் கீழ் இரட்சிப்பு சாத்தியமாயிருந்தால், கிறிஸ்து வருவதற்கு அவசியமே இருந்திருக் காது. கிறிஸ்து இந்த உலகத்துக்கு வந்ததே நியாயப்பிரமாணத் தினால் மனிதனை இரட்சிக்க முடியாது என்பதற்கு நிரூபணமாயி ருக்கிறது. நியாயப்பிரமாணம் அப்போது ஒரு மனிதனை இரட்சிக்க முடியவில்லையானால் இப்போதும் இரட்சிக்க முடியாது.

நாம் இரட்சிக்கப்படுவது ஏன் அவசியம் என்று நாம் பார்த்துக் கொண்டிருப்பது, இது மனிதன் இழந்த போன நிலையில் இருக்கிறான் என்பதைக் காட்டுகிறது. இது உண்மைதான். அப்போஸ்தலனாகிய பவுல் ரோமருக்கு எழுதும்போது, " எல்லோ ரும் பாவஞ்செய்து தேவ மகிமையற்றவர்களாகி " என்று எழுது கிறார் (ரோமர் 3:23). மறுபடியும், நாம் இப்படியாக வாசிக்கிறோம், "அந்தப்படியே! நீதிமான் ஒருவனாகிலும் இல்லை " (ரோமர் 3:10) நீதிமான் ஒருவனும் இல்லையென்பதில் சிறுபிள்ளைகளும் உள்ள டக்கமா? இல்லை. ஏனென்றால், ரோமர் 3 ஆம் அதிகாரத்தில் பாவிகள் பொய்யர்களாக, சபிக்கிறவர்களாக, கொலை செய்பவர் களாக, தேவனை எதிர்ப்பவர்களாக அடையாளப்படுத்தப்படுகி றார்கள். நன்மை, தீமை அறியாத சிறுபிள்ளைகள் வேத வசனங் களில் சுத்தமானவர்களாகவும், ஒன்றும் அறியாதவர்களாகவும் சொல்லப்பட்டிருக்கிறார்கள். இயேசு தம்முடைய நாட்களில் வாழ்ந்த ஜனங்களைப் பார்த்து சிறு பிள்ளைகளைப் போல மாறா விட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க முடியாது என்று

போதித்தார் (மத்தேயு 18:1-6). இயேசுவின் நாட்களில் இருந்த பாவிகள் சிறுகுழந்தைகள் போன்ற அறியாமை நிலைக்கு அப்பாற் பட்டவர்கள். எது சரி, எது தவறு என அறியும் பருவத்தை அடைந்த வர்கள். அவர்கள் தங்கள் செயல்களுக்கு பொறுப்பாளிகள். ஆகவே தான், பாவிகள், அநீதிமான்களென்றும், தேவ மகிமையற்றவர்க ளென்றும், தேவ பக்தியற்றவர்களென்றும் சொல்லப்பட்டிருக்கி றார்கள். பாவிகளைப் பற்றி மேலும் விவரிக்க யோவான் இப்படிச் சொல்கிறார். "பாவஞ் செய்கிற எவனும் நியாயப்பிரமாணத்தை மீறுகிறான்; நியாயப்பிரமாணத்தை மீறுகிறதே பாவம்" (I யோவான் 3:4) என்று. இங்கே, நாம் ஆரம்பத்திற்கு திரும்பிப்போய் மனிதன் ஏன் பாவியானான் என்று பார்ப்போம். தேவன் ஆணையும், பெண்ணையும் உண்டாக்கி ஏதேன் தோட்டத்தில் வைத்தபோது அவர்கள் பாவமில்லாமல் தான் இருந்தார்கள். அவர்களுடைய வேலை தோட்டத்தைச் சுத்தப்படுத்துவதும், பாதுகாப்பதும், தேவன் அவர்களைப் பார்த்து, " நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம். ஆனாலும், நன்மை, தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்க வேண்டாம். அதைப் புசிக்கும் நாளில் நீங்கள் சாகவே சாவீர்கள் " என்று சொன்னார். நாம் இப்போது ஆதியாகமம் மூன்றாம் அதிகாரத்திற்கு போய் அங்கே என்ன நடந்தது என்று கவனிப் போம். " தேவனாகிய கர்த்தர் உண்டாக்கின சகல காட்டு ஜீவன் களைப் பார்க்கிலும் சர்ப்பமானது தந்திரமுள்ளதாயிருந்தது. அது ஸ்திரீயை நோக்கி: நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்க வேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ என்றது. ஸ்திரீ சர்ப்பத்தைப் பார்த்து; நாங்கள் தோட்டத் திலுள்ள விருட்சங்களின் கனிகளைப் புசிக்கலாம். ஆனாலும், தோட்டத்தின் நடுவில் இருக்கிற விருட்சத்தின் கனியைக் குறித்து, தேவன், நீங்கள் சாகாதபடிக்கு அதைப் புசிக்கவும், அதைத் தொட வும் வேண்டாம் என்று சொன்னார் என்றான். அப்பொழுது சர்ப்பம் ஸ்திரீயை நோக்கி: நீங்கள் சாகவே சாவதில்லை; நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை, தீமை அறிந்து தேவர்களைப் போல் இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார் என்றது. அப்பொழுது ஸ்திரீயானவள், அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத்

*தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாயிருக்கிறது என்று கண்டு, அதன் கனியைப் பறித்துப் புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள்; அவனும் புசித்தான். அப்பொழுது அவர்கள் இருவ ருடைய கண்களும் திறக்கப்பட்டது; அவர்கள் தாங்கள் நிர்வாணி கள் என்று அறிந்து, அத்தி இலைகளைத் தைத்து தங்களுக்கு அரைக் கச்சைகளை உண்டு பண்ணினார்கள் " (ஆதியாகமம் 3:1-7).* தேவன் அவர்களை பிறகு சந்தித்த போது, அவர்கள் சாக்குபோக்கு சொன்ன தாகவும் வேதவசனம் கூறுகிறது. ஆதாம் ஏவாளை குற்றஞ்சாட்டி னான், ஏவாள் சர்ப்பத்தை குற்றஞ்சாட்டினாள். அதன் பின்பு தேவன் அவர்களுடைய கீழ்ப்படியாமைக்கு, நிச்சயமாகவே அதற் கான விளைவுகளைச் சந்திக்க வேண்டும் என்பதை வெளிப்படுத்தி னார். இந்தத் தண்டனை சாத்தான் அல்லது சர்ப்பத்துக்கும் பொருந் தும். தடைசெய்யப்பட்ட கனியைப் புசிக்கும் நாளிலே சாகவே சாவீர்கள் என்று அவர்களுக்கு சொல்லப்பட்டது, அப்படியே அவர் கள் ஆவிக்குரிய மரணத்தை சந்தித்தார்கள். அதாவது, அவர்களுக் கும், தேவனுக்கும் இடையில் பாவம் வந்தது. இதன் மூலம் அவர் களுக்கும் தேவனுக்கும் இடையே பிரிவு ஏற்பட்டது, அவர்கள் தேவனுக்கு சத்துருக்களாக மாறி விட்டார்கள்.

தேவன் பாவமில்லாதவர், தேவன் பூரணமானவர், தேவன் பரிசுத்தமானவர் என்று வேதாகமம் நமக்குப் போதிக்கிறது. தேவன் பொய்யுரையாதவர் என்றும், அவர் ஒருவனையும் சோதிக்கிற வருமல்ல என்றும் கூறுகிறது. (எபிரெயர் 6:18; யாக்கோபு 1:13). தேவ னுடைய குமாரனாகிய கிறிஸ்துவும் " பாவமில்லாதவர் " என்று சொல்லப்பட்டிருக்கிறது (I பேதுரு 2:22). தேவன் பூரணராயிருந் ததினாலும், அவர் பாவத்தை வெறுத்ததினாலும், பாவியாகிவிட்ட மனிதன், தொடர்ந்து தன்னுடைய பாவத்தில் இருந்து கொண்டு தேவனை அணுகுவதென்பது இயலாததாயிருந்தது. பழைய ஏற்பாட்டு தேவனுடைய தீர்க்கதரிசி இப்படியாகச் சொன்னார். *"இதோ, இரட்சிக்கக்கூடாதபடிக்கு கர்த்தருடைய கை குறுகிப் போகவுமில்லை; கேட்கக் கூடாதபடிக்கு அவருடைய செவி மந்த மாகவுமில்லை. உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும், உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினையை உண்டாக்குகிறது; உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவி கொடாதபடிக்கு அவரு டைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது*

*என்று. (ஏசாயா 59:12). " கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள் மேல் நோக்கமாயிருக்கிறது, அவருடைய செவிகள் அவர்கள் வேண்டுதலுக்குக்கவனமாயிருக் கிறது; தீமைசெய்கிறவர்களுக்கோ கர்த்தருடைய முகம் விரோதமா யிருக்கிறது " (I பேதுரு 3:12)*

பழைய ஏற்பாட்டுக் காலம் முழுவதும், தேவன், பாவமுள்ள மனிதன் தன்னுடைய பாவத்தை நிவர்த்தி செய்வதற்கு மிருகபலி செலுத்த வேண்டும் என்று கட்டளையிட்டிருந்தார். அப்படி இருந்த போதிலும் மனிதனுடைய பாவங்கள் வருடந்தோறும் நினைவு கூரப் பட்டபடியால் பலிகள் தொடர்ந்து செலுத்தப்பட வேண்டிய தாயிருந்தது. காளை வெள்ளாட்டுக்கடா இவைகளுடைய இரத்தம் பாவங்களை நிவர்த்தி செய்ய முடியவில்லை (எபியெர் 10:1-4). கடைசியாக, தேவன் மனித இனத்தின் பாவங்களுக்காக ஒரே தரம் பலியாக தம்முடைய சொந்தக் குமாரனையே இந்த உலகத்திற்கு அனுப்பிக் கொடுத்தார் (எபிரெயர் 10:5-10). *" இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டும் இருக்கிறீர்கள்; ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின் வைத்துப் போனார். அவர் பாவஞ்செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை, அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும் போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்பு செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார். நாம் பாவங்களுக் குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர் தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின் மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்"* என்று பேதுரு சொன் னார் (I பேதுரு 2:21-24). எனவே, மனிதன் இழந்து போன நிலையில் இருந்தான். அவன் பாவத்தில் இருந்தான், தேவ பக்தியற்றவனாக, அநீதிமானாகக் காணப்பட்டான். மனிதன் தன் சுயநீதியினாலோ, நற்கிரியைகளைச் செய்வதினாலோ இரட்சிக்கப்பட முடியாமல் இருந்தது. நியாயப்பிரமாணத்தினாலும் அவன் இரட்சிப்பைப் பெற முடியாமலிருந்தது. இது பற்றி பவுல் இப்படியாகச் சொல்கிறார். *"நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சி யாமல், தமது இரக்கத்தின்படியே மறுஜென்ம முழுக்கினாலும், பரி சுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார் "*

(தீத்து. 3:5). மறுபடியும் பவுல் சொல்லும் போது, " கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள், இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு; ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல". ஆகையால், கிறிஸ்து ஒரு பூரண மனிதனாக, பூரண பலியாக சிலுவையில் மரித்த போது அவர் மனிதனுடைய இரட்சகராக, நம்பிக்கையாகி விட்டார். ஆகையால் தான் நாம் இப்படி வாசிக்கிறோம், " தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்; உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார்" என்று (யோவான் 3:16, 17).

கிறிஸ்து மரித்ததினால் அவருடைய இரத்தம் சிந்தப்பட்டது. அவருடைய இரத்தத்தைக் கொண்டு நம்முடைய பாவங்கள் கழுவப்பட்டிருக்கிறது என்று நாம் வாசிக்கிறோம். பவுல் இப்படியாகச் சொன்னார். "அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது" (எபே. 1:7). " கிறிஸ்து தாமே இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது என்று சொன்னார் " (மத்தேயு 26:28). ஆனால், ஒருவருடைய பாவங்கள் இப்படியாக மன்னிக்கப்பட கிறிஸ்து, வைத்திருக்கிற நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ள வேண்டும். கிறிஸ்து நாம் அவரை தேவனுடைய குமாரன் என்று விசுவாசிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார் (யோவான் 14:1, அப். 8:37). நம்முடைய பாவங்களிலிருந்து நாம் மனந்திரும்ப வேண்டும் என்று அவர் கட்டளையிட்டிருக்கிறார் (லூக்கா. 13:3). அவரை நாம் மனிதருக்கு முன்பாக அறிக்கை செய்வது அவசியம் என்றும் சொல்லியிருக்கிறார் (மத்தேயு 10:32). கடைசியாக, அவர் ஞானஸ்நானத்தையும் கட்டளையிட்டுள்ளார். பேதுரு, தன்னிடம், இரட்சிக்கப்பட நாங்கள் என்ன செய்ய வேண்டும்? என்று கேட்ட மக்களைப் பார்த்து, " நீங்கள்

மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங் கள்" என்று சொன்னார் (அப். 2:38). ஒருவர் கர்த்தருக்குக் கீழ்ப்படியும் போதுதான் அவருடைய பாவங்கள் மன்னிக்கப்படுகிறது. அப்பொழுதுதான் ஒருவர் தேவனுடைய குடும்பத்தில் ஒரு பிள்ளையாக, அவருடைய சமூகத்தில் ஒரு சிநேகிதராகப் பிரவேசிப்பதை சாத்தியப்படுத்துகிறது. ஒருவர் தொடர்ந்து உண்மையுள்ளவராக இருக்கும் போது இயேசு கிறிஸ்துவின் இரத்தம் தொடர்ந்து அவருடைய பாவங்களைக் கழுவுகிறது (I யோவான் 1:7) இதை வேறுவிதமாகச் சொன்னால், மனிதன் ஒரு பாவியாக இருந்தாலும் கிறிஸ்துவின் இரத்தத்தினால் அவனுடைய பாவங்கள் தேவனுடைய முகத்திலிருந்து மறைக்கப்படுகிறது. அதாவது, தேவனுடைய சித்தத்தின்படி நடக்க அவன் முழுமையாக முயற்சி எடுத்துக் கொண்டிருக்கும் வரை மேற்சொல்லப்பட்ட காரியம் சாத்தியமாகிறது. இதற்கு மாறாக, மனிதன் தெரிந்தோ அல்லது வேண்டுமென்றோ பாவம் செய்து தேவனை எதிர்க்கும் போது தேவனுக்கும், மனிதனுக்கும் இடையே பாவம் மீண்டுமாக வந்துவிடுகிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் தேவனிடத்தில் திரும்புவதற்கான ஒரே வழி பாவங்களிலிருந்து மனந்திரும்பி, தவறுகளை அறிக்கையிட்டு கர்த்தரிடத்தில் மன்னிப்புக் கேட்பது தான் (யாக்கோபு. 5:16).

கிறிஸ்து மனிதனுக்காக மரித்தபோது, அவர் மனிதனுடைய மத்தியஸ்தராக, ஒப்புரவாக்குபவராக, பரிந்து பேசுகிறவராக, பிரதான ஆசாரியாராக மாறினதோடு தேவனிடத்தில் அவனைத் திரும்ப சேர்ப்பவராகவும், பிதாவுக்கு முன்பாக மனிதனுடைய பிரதிநிதியாகவும் ஆனார். (I தீமோத்தேயு 2:5; எபேசியர் 2:16; யோவான் 2:1, எபிரெயர் 8:1; எபிரெயர் 10:21)

என் நண்பர்களே, நாம் பாவிகள், நம்முடைய ஆத்துமாவை இழந்தவர்கள். நம்மை நாம் இரட்சிக்க முடியாது. அதுபோல எந்த ஓர் மனிதனோ அல்லது மனிதனால் உண்டாக்கப்பட சட்டமோ அல்லது எந்த ஒரு அமைப்போ நம்மை இரட்சிக்கவோ முடியாது. லஞ்சம் கொடுத்து நாம் பரலோகம் செல்லவும் முடியாது. ஆகையால், நாம் கர்த்தருடைய இரக்கத்தில்

இருக்கிறோம். அவரோடு நாம் பேரம் பேசும் நிலையில் கூட இல்லை. எனவே, எவ்வித நிபந்தனையுமின்றி அவரிடம் நம்மைத் தாழ்த்தி அவருடைய இரக்கத்திற்காக மன்றாட வேண்டும். ஆனால், கவனியுங்கள்; நமக்கு ஓர் நற்செய்தி இருக்கிறது. நாம் இரட்சிக்கப்படும்படிக்கும், தேவனோடு ஒப்புரவாகும்படிக்கும், ஒரு நாள் பரலோகம் சென்று தேவனோடு என்றென்றும் வாழும்படிக்கும் கிறிஸ்து நமக்காக மரித்தார். ஆனால், அதற்கு நாம் முன்பே குறிப்பிட்டபடி சில நிபந்த னைகள் இருக்கின் றன. நாம் கர்த்தரை எந்த அளவுக்கு விசுவாசிக் கிறோம் என்பதை அவர் பார்க்க விரும்புகிறார். அத்தோடு நாம் இரட்சிக்கப்பட எந்த அளவுக்கு செயல்பட விரும்புகிறோம் என்ப தையும் அவர் பார்க்க விரும்புகிறார். நாம் நம் இரட்சிப்பை சம்பா திப்பதற்கு சாத்தியமே இல்லை. கர்த்தர் நமக்கு செய்யப் போகிற எல்லாவற்றிற்காகவும் நாம் கிரயத்தை செலுத்துவதென்பது முடியாத காரியம். ஆனால், நாம் அவரில் விசுவாசம் வைத்து, அவரைப் பின்பற்றும்படி பாவங்களிலிருந்து திரும்பி, அவரை தேவ னுடைய குமாரன் என்று அறிக்கையிட்டு, இயேசுவின் இரத்தத் தோடு தொடர்பை ஏற்படுத்திக்கொள்ளவும், நம் பாவங்கள் கழுவப் படவும் ஞானஸ்நானம் பெறவேண்டும் (மாற்கு 16:16; அப்போஸ் தலர். 2:38; மத்தேயு 10:32; ரோமர் 6) இவைகளைச் செய்யும் போது, கர்த்தர் நம்மை மன்னித்து, இரட்சித்து, நம்முடைய எல்லா பாவங் களிலிருந்தும் நம்மைக் கழுவி, தம்முடைய சபையிலே நம்மை சேர்த்துக் கொள்வார். அங்கே நாம் அவரை சேவித்து, மரண பரியந்தம் அவருக்கு உண்மையாயிருக்கும் போது, ஒரு நாள் நாம் பரலோகம் சென்று அங்கே அவரோடு என்றென்றுமாய் வாழ முடியும்.



## பாடம் - 7

# ஏன் சுவிசேஷம் இரட்சிப்பதற்கு தேவபெலனாயிருக்கிறது?

ஏன் ஒருவர் இரட்சிக்கப்பட வேண்டும்? ஒருவர் இரட்சிக்கப்பட வேண்டும் என்று சொல்லும் போது, அவர் இழந்து போன நிலையில் இருக்கிறார், ஆபத்தில் இருக்கிறார், அப்படிப் பட்டவர் காப்பாற்றப்பட வேண்டும். ஏனெனில், மனிதன் தன்னைத் தானே மீட்டுக் கொள்ளும் நிலையில் இல்லை. இழந்து போன நிலையில் இருப்பதை நாம் சிலருக்குச் சுட்டிக் காட்டும் போது அவர்கள் கோபப்படுகிறார்கள். ஆனால், இப்படிப்பட்ட மக்கள் தான் எல்லாரைக் காட்டிலும் மிக மோசமான நிலையில் இருக்கி றார்கள். இழந்துபோன நிலையில் இருப்பதே மோசமான நிலை தான். அதிலும் எப்படி ஒருவர் இரட்சிக்கப்பட வேண்டும் என்பதை யும், இழந்து போனதை அறியாமலும், ஒத்துக் கொள்ளாமலும் இருந்தால், அப்படிப்பட்டவர்களுக்கு எப்படி உதவ முடியும்? அநேகர் இழந்துபோன நிலையில் இருந்து கொண்டு தாங்கள் இரட்சிக்கப்பட்டிருப்பதாக நினைக்கிறார்கள். இவர்களுக்கு இரட்சிப்புக்கான உதவி தேவை, ஆனால், இப்படிப்பட்டவர் களைச் சென்றடைவது கடினம்.

மறுபடியும், நாம் நமது கேள்விக்குத் திரும்புவோம். ஏன் மனிதன் இழந்து போன நிலையில் இருக்கிறான்? மனிதன் பாவத் தில் இருக்கிறபடியால் இழந்துபோன நிலையில் இருக்கிறான். ஆகையால், அவன் பாவியாயிருக்கிறான். நியாயப்பிரமாணத்தை மீறுவதே பாவம் (Iயோவான் 3:4). அநீதியெல்லாம் பாவம் (Iயோவான் 5:17). எனவே, ஒருவர் தேவனுடைய கட்டளையை மீறும் போதோ, தவறு செய்யும் போதோ பாவம் செய்கிறார். யோவான் இப்படியாகச் சொல்கிறார். "பாவஞ்செய்கிறவன் பிசாசினாலுண்டாயிருக்கிறான்; ஏனெனில், பிசாசானவன் ஆதி முதல் பாவஞ் செய்கிறான்" (I யோவான் 3:8). "எல்லாரும் பாவஞ்

செய்து, தேவ மகிமையற்றவர்களாகி என்றும், நீதிமான் ஒருவனாகிலும் இல்லை" என்றும் பவுல் சொல்கிறார் (ரோமர் 3:23; ரோமர் 3:10). நிச்சயமாகவே, இங்கே பவுல் தங்கள் செயல்களுக்கு கணக்குக் கொடுக்கக்கூடிய நிலையில் உள்ளவர்கள் பற்றித் தான் பேசுகிறார். யாக்கோபு இப்படியாகச் சொல்கிறார். " ஆதலால், ஒருவன் நன்மை செய்ய அறிந்தவனாயிருந்தும், அதைச் செய்யாமற் போனால், அது அவனுக்குப் பாவமாயிருக்கும் " என்று (யாக்கோபு 4:17).

மனிதன் பாவத்தில் இருந்துகொண்டு இழந்துபோன நிலையில் இருந்தால், அந்த பாவத்திலிருந்து விடுபட மனிதனால் என்ன செய்ய முடியும்? நிச்சயமாகவே, மனிதனால் தன்னைத் தானே இரட்சித்துக் கொள்ள முடியாது. பாவத்திலிருக்கும் வேறு யாரும் அவனை இரட்சிக்க முடியாது. ஒருவனுடைய நற்கிரியைகள் மட்டும் அவனை இரட்சிக்காது. அப்படியென்றால், மனிதனுக்கு நம்பிக்கையே இல்லையா? இல்லையில்லை, நம்பிக்கை இருக்கிறது. நம்மில் அன்பு கூர்ந்து, நாம் தப்பித்துக் கொள்ளும் போக்கை உண்டாக்க ஒருவர் விரும்பினபடியால் நிச்சயமாகவே நம்பிக்கை இருக்கிறது.

நூற்றுக்கணக்கான ஆண்டுகள், தேவன், மனிதன் தன் பாவங்களிலிருந்து நிவர்த்தியாகும் பொருட்டு மிருக பலிகளைச் செலுத்தும்படி கட்டளையிட்டார். இந்த பலிகளால் நிரந்தரமாக மனிதனுடைய பாவங்களை எடுத்துப் போட முடியவில்லை. ஏனென்றால், மனிதனுடைய பாவங்கள் வருடந்தோறும் நினைவு கூரப்பட்டது (எபிரெயர். 10:1-4). எனவே, தேவன் இந்த உலகத்தின் பாவத்திற்காக ஒரே தரம் மரிக்கும்படி தம்முடைய ஒரே பேறான குமாரனை சிலுவையில் பலியாகும்படி அனுப்பிக் கொடுத்தார் (யோவான் 3:16; ரோமர் 5:8). எபிரெய ஆசிரியர் கிறிஸ்துவைப் பற்றி இப்படியாகச் சொல்கிறார், " இவரோ பாவங்களுக்காக ஒரே பலியைச் செலுத்தி, என்றென்றைக்கும் தேவனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்து, இனித் தம்முடைய சத்துருக்களைத் தமது பாதபடியாக்கிப் போடும் வரைக்கும் காத்துக் கொண்டிருக்கிறார். ஏனெனில், பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை ஒரே பலியினாலே இவர் என்றென்றைக்கும் பூரணப்படுத்தியிருக்கிறார் " (எபிரெயர். 10:12-14).

மனிதனுடைய பாவங்களுக்காகக் கிறிஸ்து சிலுவையில் மரித்த போது, குறிப்பாக, அவர் தேவனுடைய குமாரன், தேவனிடத்திலிருந்து வந்தவர், மானிட இரட்சகர் என்பதை நிச்சயப்படுத்த, அவருடைய அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலுக்குப் பிறகு, மானிடர் எல்லோருக்கும் அது நற்செய்தியாகி விட்டது. மனிதன் இரட்சிக்கப்பட முடியும், நித்திய ஜீவனுக்கான நம்பிக்கையைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதால் இது நற்செய்தியாயிருக்கிறது. இது தான் சுவிசேஷம் எனப்படுகிறது. அதாவது, கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் தான் நற்செய்தி எனப் பொருள்படும் சுவிசேஷமாயிருக்கிறது. இது இன்றும் நற்செய்தியாகத்தான் இருக்கிறது. மனிதன் இதை விசுவாசித்து தன்னுடைய வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தும்படி இந்த நற்செய்தி அவனுக்கு தேவனால் அளிக்கப்பட்டிருக்கிறது.

பவுல் இப்படியாக எழுதினார், " *ஆதலால், கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான். அவரை விசுவாசியாதவர்கள் எப்படி அவரைத் தொழுது கொள்ளுவார்கள்? அவரைக் குறித்து கேள்விப்படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்? பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படிக் கேள்விப்படுவார்கள்? அனுப்பப்படாவிட்டால் எப்படி பிரசங்கிப்பார்கள்? சமாதானத்தைக் கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவிக்கிறவர்களுடைய பாதங்கள் எவ்வளவு அழகானவைகள் என்று எழுதியிருக்கிறதே* " (ரோமர் 10:13-15). மறுபடியும் பவுல் சொல்லும்போது, " *இப்படியிருக்க சகோதரரே, நீங்கள் எவைகளை அறியவேண்டுமென்றிருக்கிறேனென்றால்; நம்முடைய பிதாக்களெல்லாரும் மேகத்துக்குக் கீழாயிருந்தார்கள், எல்லாரும் சமுத்திரத்தின் வழியாய் நடந்து வந்தார்கள். எல்லாரும் மோசேக்குள்ளாக மேகத்தினாலும், சமுத்திரத் தினாலும் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள். எல்லாரும் ஒரே ஞான போஜனத்தைப் புசித்தார்கள் எல்லாரும் ஒரே ஞானபானத்தைக் குடித்தார்கள். எப்படியெனில், அவர்களோடே கூடச் சென்ற ஞானக் கன் மலையின் தண்ணீரைக் குடித்தார்கள்; அந்தக் கன்மலை கிறிஸ்துவே* " (I கொரிந்தியர் 10:1-4).

ஆனால், உண்மைகள் எப்படி ஒருவரை இரட்சிக்க முடியும்? பிரசங்கம் எப்படி அவர்களை இரட்சிக்கும்? அல்லது அவைகளை

விசுவாசிப்பதன் மூலமாக எப்படி அவைகள் ஒருவனை இரட்சிக்கும்? இதைப் புரிந்து கொள்ள வசனங்கள் என்ன சொல்கிறது என்று பார்ப்போம். கர்த்தருடைய மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலுக்குப் பிறகு, அவர் பரலோகத்திலிருக்கிற பிதாவினிடத்திற்கு திரும்புவதற்கு சற்று நேரத்திற்கு முன்பு அவர் அப்போஸ்தலர்களைப் பார்த்து இப்படியாகச் சொன்னார். " *பின்பு, அவர் அவர்களை நோக்கி; நீங்கள் உலகமெங்கும் போய்; சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான். விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்* " என்று (மாற்கு 16:15,16). மத்தேயு நற்செய்தியாளர் நம்முடைய கர்த்தரின் வார்த்தைகளை இப்படியாகப் பதிவு செய்திருக்கிறார். "*ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்டயாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றார்* " (மத்தேயு 28:19,20). லூக்கா நற்செய்தியாளர் இப்படியாக விவரிக்கிறார். எழுதியிருக்கிறபடி, " *கிறிஸ்து பாடுபடவும் மூன்றாம் நாளில் மரித்தோரிலிருந்தெழுந்திருக்கவும் வேண்டியதாயிருந்தது; அன்றியும் மனந்திரும்புதலும் பாவமன்னிப் பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியதாயிருந்தது* " (லூக்கா 24:46,47).

மத்தேயு, மாற்கு, லூக்கா ஆகிய புத்தகங்களில் கிறிஸ்து தம்முடைய அப்போஸ்தலர்களைப் பார்த்து உலகெங்கும் போய், ஒவ்வொரு தேசத்திற்கும் ஒவ்வொரு தனி நபருக்கும், சுவிசேஷத்தை பிரசங்கிக்க வேண்டும் என்று சொன்னார். சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும் போது, கர்த்தருடைய மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றை உள்ளடக்கிய நற்செய்தியை அவர்கள் அறிவிக்க வேண்டியதாயிருந்தது. அப்படியானால், வேறு எதுவும் பிரசங்கிக்கப்படவில்லையா? கர்த்தர் அப்போஸ்தலர்களிடம் வேறு எதையும் பிரசங்கிக்க கட்டளையிடவில்லையா? ஆம், அவர்கள் விசுவாசத்தையும், ஞானஸ்நானத்தையும் பற்றி

பேச வேண்டியதாயிருந்தது. அதுமட்டுமல்ல, அவர்கள் விசுவாசிகளுக்கு பிதா, குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுக்க வேண்டியதாயிருந்தது. ஆனால், இதற்கும் கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலுக்கும் உள்ள சம்மந்தம் என்ன? நாம் குறிப்பாக அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தை படிக்கும்போது அதில் சொல்லப்பட்டுள்ள எல்லா மனமாற்ற சம்பவங்களிலும் கிறிஸ்துவைப் பற்றிய பிரசங்கம் அல்லது சுவிசேஷம் இருந்தது. ஜனங்கள் சுவிசேஷத்தைக் கேட்டு, அதைப் புரிந்திருக்கிறார்கள். அடுத்ததாக, அதை விசுவாசித்து, தங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட்டு, கடைசியாக அவர்கள் ஞானஸ்நானம் பெற்றிருக்கிறார்கள்.

மறுபடியும், இவைகளெல்லாவற்றிற்கும் கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலுக்கும் என்ன சம்மந்தம் இருந்தது? கிறிஸ்துவானவர் மனிதன் இரட்சிக்கப்பட வேண்டும் என்பதற்காக மாத்திரம் மரிக்காமல், அந்த இரட்சிப்புக்கு முன்பாக அவர் சில நிபந்தனைகளையும் வைத்திருக்கிறார். கிறிஸ்து தேவனுடைய குமாரனாயிருப்பதாலும், மனிதன் இரட்சிக்கப்படும்படிக்கு சிலுவையில் மரித்தவராயிருப்பதினாலும், வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரத்தையும் உடையவராக இருப்பதாலும் சில குறிப்பிட்ட காரியங்களை மனிதன் செய்யும்படி கேட்பதற்கு அவருக்கு எல்லா உரிமையும் இருக்கிறது. மனிதன் இரட்சிக்கப்பட விரும்பினால், அவன் விசுவாசிக்க வேண்டும் என்று அவர் சொல்கிறார். அவன், தேவனையும் விசுவாசிக்க வேண்டும், கிறிஸ்துவையும் விசுவாசிக்க வேண்டும். அடுத்து, தன்னுடைய பாவங்களிலிருந்து மனந்திரும்ப வேண்டும் அல்லது தவறான அல்லது எல்லா கெட்ட நடக்கைகளிலிருந்தும் திருந்த வேண்டும். அடுத்ததாக, அவன் கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட வேண்டும். கடைசியாக, பாவங்கள் கழுவப்படும்படி அவன் ஞானஸ்நானம் பெற வேண்டும். இவைகளைச் செய்தால், அவன் இயேசுவின் மீது வைத்திருக்கும் விசுவாசத்தையும், இரட்சிக்கபட வேண்டும் என்கிற தன் விருப்பத்தையும் இயேசுவிடம் நிரூபிப்பதாக இருக்கும். சுவிசேஷத்தில் வல்லமை இருப்பதாக பவுல்

சொன்னார். அதாவது, கர்த்தர், மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் இவைகளின் மூலம் கிரியை செய்கிறார். " *கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன்; முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது. விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறபடி, விசுவாசத்தினால் உண்டாகும் தேவநீதி விசுவாசத்திற்கென்று அந்தச் சுவிசேஷத்தினால் வெளிப்படுத்தப்படுகிறது " (ரோமர் 1:16,17).*

ரோமர் ஆறாம் அதிகாரத்தில் பவுல், கிறிஸ்து மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்ததைக் காட்டுகிறார். மேலும், அவர், ஒருவர் கர்த்தருக்கு கீழ்ப்படியும் போது மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலை தன்னுடைய செயல்களின் மூலம் காட்டுகிறார். வேறுவிதமாகச் சொன்னால், ஒருவர் கிறிஸ்துவை விசுவாசித்து, பாவங்களிலிருந்து மனந்திரும்பி, பாவத்துக்கு மரிக்கும்போது, கிறிஸ்துவின் மரணத்தைப் படம் பிடித்துக் காட்டுகிறார். அவர் கர்த்தரோடு அடக்கம் பண்ணப்படுவதற்கு தண்ணீர் ஞானஸ்நானத்தில் மூழ்கும்போது கர்த்தருடைய மரணத்தின் தன்மைகளோடு தொடர்பை ஏற்படுத்திக்கொள்கிறார். இது கிறிஸ்துவின் அடக்கத்தை எடுத்துக்காட்டுகிறது. கடைசியாக, ஒருவர் புதிய மனிதனாக தண்ணீரிலிருந்து வெளியே வரும்போது, தன்னுடைய பழைய பாவங்கள் மன்னிக்கப்பட்ட நிலையில் வெளியே வருகிறார், இது கர்த்தருடைய உயிர்த்தெழுதலைக் குறிக்கிறது. பவுலின் இந்த வார்த்தைகளை கவனியுங்கள். " *இயேசு கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும், பிதாவின் மகிமையினாலே கிறஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம் பண்ணப்பட்டோம். ஆதலால், அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும்*

இணைக்கப்பட்டிருப்போம். நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ் செய்யாதபடிக்கு பாவசரீரம் ஒழிந்து போகும் பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடே கூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம் " (ரோமர் 6:3-6). தொடர்ந்த பவுலடியார் இப்படியாகச் சொல்கிறார், "முன்னே நீங்கள் பாவத்திற்கு அடிமைகளாயிருந்தும், இப்பொழுது உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேசசட்டத்திற்கு நீங்கள் மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிந்ததினாலே தேவனுக்கு ஸ்தோத்திரம், பாவத்தினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு நீதிக்கு அடிமைகளானீர்கள் " (ரோமர் 6:17,18). இங்கே உபதேசம் என்பது கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலாயிருக்கிறது. இங்கே இந்த ஜனங்கள் எந்த சட்டத்திற்கும் கீழ்ப்படிந்தார்களோ அது உபதேசமாயிருக்கிறது. ஏற்கனவே குறிப்பிட்டுள்ளபடி, இவர்கள் தங்கள் பாவங்களுக்காக மரித்து, தண்ணீர் ஞானஸ்நானத்தினாலே அடக்கம் பண்ணப்பட்டு, தண்ணீரிலிருந்து வெளியேவந்து, அதாவது, புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கும், புதிய சிருஷ்டியாயிருக்கும்படிக்கும், நித்திய ஜீவனுக்கான நம்பிக்கையோடு கிறிஸ்துவைப் பின்பற்றும் படிக்கும், அவர்கள் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலை தங்கள் செயலின் மூலம் காட்டியிருக்கிறார்கள்.

II தெசலோனிக்கேயர் 1:7-9 வசனங்களில் பவுலடியார் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு கர்த்தர் திரும்ப வருவார் என்று சொல் கிறார். சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியாதவர்கள் இழந்து போவார்கள் என்று பேதுருவும் சொல்கிறார் (I பேதுரு 4:17). எனவே, சுவிசேஷம் என்பது ஒருவர் விசுவாசிக்கின்ற ஒன்றாக மட்டு மல்லாமல் ஒருவர் கீழ்ப்படிய வேண்டிய ஒன்றாகவும் இருக்கிறது. ஒருவர் அதை விசுவாசித்து அதற்குக் கீழ்ப்படியும் போது கர்த்தர் அந்த நபரை தம்முடைய சபையில் சேர்த்துக் கொள்கிறார்.

சுவிசேஷம் வேத வாக்கியங்களில் தெளிவாக விவரிக்கப்பட்டிருக்கிறது. " சுவிசேஷத்தை நான் பிரசங்கியாயிருந்தால்,

எனக்கு ஐயோ " என்று பவுல் சொன்னார் (1கொரி 9:16). வேறொரு சுவிசேஷத்தை தான் பிரசங்கித்தால் தான் சபிக்கப்பட்டவனா யிருக்கக்கடவன் என்றும் அவர் சொல்கிறார் (கலாத்தியர் 1:6-9). இதையே வேறுவிதமாகச் சொன்னால், ஒன்றான மெய் சுவிசேஷத்தை அவர் ஏற்கனவே பிரசங்கித்துவிட்டார். வேறொரு சுவிசேஷம் இல்லாதபடியால், வேறொரு சுவிசேஷத்தை தான் பிரசங்கித்தால் தான் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன் என்றும் அவர் சொல்கிறார் (கலாத்தியர் 1:6-9). ஏனென்றால், உண்மை யான சுவிசேஷம் ஏற்கனவே பிரசங்கிக்கப்பட்டுவிட்டது என்று பவுல் சொல்கிறார்.

என் நண்பர்களே, கிறிஸ்துவின் நற்செய்திக்கு நீங்கள் கீழ்ப் படிந்துவிட்டார்களா? அதை நீங்கள் விசுவாசிக்கிறீகளா? அதற்குக் கீழ்ப்படிவீர்களா? நீங்கள் அப்படிச் செய்ய நான் ஜெபிக் கிறேன். உங்களை இரட்சிக்க கர்த்தருக்கு உகந்த வேறு வழி இல்லை.

## பாடம் - 8

# ஏன் விசுவாசம் முக்கியமானது?

விசுவாசம் என்றால் என்ன? அதை விளக்குவதற்கு ஏதாவது வழி இருக்கிறதா? இதற்கான விளக்கத்திற்கு பெரும்பாலும் எபிரெயர் 11:1க்கு நாம் செல்கிறோம். அங்கே அதன் எழுத்தாளர் இப்படியாகச் சொல்கிறார், *"விசுவாசமானது நம்பப் படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது"* என்று. இதை உதாரணத்துடன் விளக்குவதற்கு மாபெரும் மனிதர்களாகிய ஆபிரகாம், மோசே, தாவீது, எலிசா இன்னும் பலர் வாழ்ந்திருக்கிறார்கள். நான் அவர்களைப் பார்த்ததில்லை. ஆனால், அவர்கள் வாழ்ந்ததற்கான உண்மைகளும், ஆதாரங்களும் ஏராளமாக வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. வேதாகமத்தை சந்தேகப்பட எனக்கு எவ்வித காரணமும் இல்லை. ஆகையால், இது போன்ற சாட்சியங்களை ஏற்றுக் கொள்கிறேன். மேலும், வேத வாக்கியங்களின் மீது எனக்கு இருக்கிற நம்பிக்கையை அடிப்படையாக வைத்து, மேற் கூறப்பட்ட மனிதர்கள் வாழ்ந்தார்கள் என விசுவாசிக்கிறேன். அதுபோலவே, கிறிஸ்து, பவுல், பேதுரு மற்றும் பலர் முதல் நூற்றாண்டில் வாழ்ந்திருக்கிறார்கள் என விசுவாசிக்கிறேன். இந்தக் காரியத்தில் பவுல் எழுதினது சரியாகத் தோன்றுகிறது. *" ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும் " (ரோமர் 10:17).*

நான் முகமுகமாகப் பார்த்திராத உலகத்தின் மாபெரும் தலைவர்கள் இருக்கிறார்கள்; ஆனால், அவர்கள் இருக்கிறார்கள் என்று நான் விசுவாசிக்கிறேன். அவர்கள் இருப்பதை நான் விசுவாசிக்க சில குறிப்பிட்ட ஆதாரங்கள் என்னை வழி நடத்துகின்றன. அவர்களைப் பற்றிய அறிக்கைகளும், படங்களும் செய்தித் தாள்களில் வருகின்றன. அவர்களை தொலைக்காட்சிகளில் பார்த்

திருக்கிறேன், ரேடியோ ஒலிபரப்புகளில் அவர்களுடைய குரலைக் கேட்டிருக்கிறேன். நம்பத்தகுந்த ஆதாரங்களிலிருந்து கிடைத்த இந்த நிரூபணங்கள், சாட்சியங்கள் போன்றவை களினால் இந்த உலகத்தலைவர்கள் உண்மையானவர்கள் என்று விசுவாசிக்கிறேன்.

அது போலவே, நான் தேவனைப் பார்த்ததில்லை. ஆனால், தேவனை அப்படிப் பார்க்காமலிருப்பது நான் மட்டுமல்ல; யோவான் சொல்லும் போது, *"தேவனை ஒருவரும் ஒருபோதும் கண்டதில்லை; நாம் ஒருவரிடத்தில் ஒருவர் அன்பு கூர்ந்தால் தேவன் நமக்குள் நிலைத்திருக்கிறார்; அவருடைய அன்பும் நமக்குள் பூரணப்படும்"* என்றார். (1யோவான் 4:12). நான் தேவனை பார்த்திராவிட்டாலும் கூட, அவர் இருக்கிறார் என்று இன்றும் விசுவாசிக்கிறேன் ஏன்? அவர் உண்மையானவர் என்பதை நிரூபிக்க அநேக ஆதாரங்கள் இருக்கிறது. எல்லா சிருஷ்டிப்பும் இருக்கிறது (ஆதியாகமம் 1:1) பொய்யுரையாத வேதாகமம் அவர் பற்றிச் சொல்கிறது (II தீமோத். 3:16,17). அவர் நமக்கு எவ்வளவு தேவை என்பதையும் வேதாகமம் போதிக்கிறது (எரேமியா 10:23). எபிரெய ஆசிரியர் இப்படியாகச் சொன்னார். *"விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்"* (எபிரெயர் 11:6).

நாம் குருட்டு விசுவாசம் அல்லது வீணான விசுவாசத்தை உடையவர்களாய் இல்லாமல் இருப்போமாக; நாம் கர்த்தரையும், அவருடைய சித்தத்தையும் நன்றாய் அறிந்து கொள்ளும்படியாக அவர் நம்மிடம் பேசியிருக்கிறார். தேவன் தம்முடைய குமாரன் மூலமாக நம்மிடம் பேசுகிறார். கிறிஸ்து மறுரூபமானபேது, வானத்திலிருந்து இப்படியாக தேவன் பேசினார். *" இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன், இவருக்குச் செவி கொடுங்கள் என்று அந்த மேகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாயிற்று"* (மத்தேயு 17:5). எபிரெய ஆசிரியர் சொல்லும்போது, *" பூர்வ காலங்களில் பங்கு பங்காகவும், வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன், இந்தக்*

*கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம் பற்றினார்; இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார், இவரைக் கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார்"* (எபிரெயர் 1:1,2). ஆனால், தேவன் நம்மிடம் எப்படியாகப் பேசுகிறார்? கிறிஸ்துவின் மூலமாகவும், அவருடைய வார்த்தைகளின் மூலமாகவும் பேசுகி றார்; கிறிஸ்துவின் புதிய பிரமாணத்தைத்தான் யாக்கோபு சுயாதீனப் பிரமாணம் என்று சொல்கிறார் (யாக்கோபு 1:25). பவுல் சொல்லும் போது, *"வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப் பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ள வனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதே சத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்த லுக்கும், நீதியைப் படிப்பிக்குத லுக்கும் பிரயோஜனமுள்ளவை களாயிருக்கிறது"* (II தீமோத்தேயு 3:16,17) என்று கூறியுள்ளார்.

பேதுரு அப்போஸ்தலன் இப்படியாகச் சொல்லியுள்ளார். *"வேதாகமத்திலுள்ள எந்த தீர்க்கதசரினமும் சுயதோற்றமான பொருளையுடையதாயிரென்று நீங்கள் முந்தி அறிய வேண்டியது. தீர்க்கதரிசனமானது ஒரு காலத்திலும் மனுஷருடைய சித்தத்தி னாலே உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்"* (II பேதுரு 1:20,21). வேறொரு சந்தர்ப்பத்தில் பேதுரு இப்படியாகச் சொன்னார். *"அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவ வசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கறீர்களே. மாம்சமெல்லாம் புல்லைப் போலவும், மனுஷருடைய மகிமையெல்லாம் புல்லின் பூவைப் போலவுமிருக்கிறது; புல் உலர்ந்தது, அதின் பூவும் உதிர்ந் தது. கர்த்தருடைய வசனமோ என்றென்றைக்கும் நிலைத்திருக் கும். உங்களுக்குச் சுவிசேஷமாய் அறிவிக்கப்பட்டு வருகிற வசனம் இதுவே"* (I பேதுரு 1:23-25).

கர்த்தருடைய வார்த்தை நமக்கு எழுத்து வடிவத்தில் வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. தேவனுடைய வார்த்தையை வாசித்து, படித்து, தேவன் இன்று நம்மிடமிருந்து என்ன எதிர்பார்க்கிறார் என அறிந்து கொள்வது உங்கள் கையில் தான் இருக்கிறது. நாம் படிக்க வேண்டும் என்று சொல்கிறார்

(II தீமோத்தேயு 2:15) வேத வாக்கியங்களை நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்று இயேசு தாமே சொல்லியிருக்கிறார் (யோவான் 5:39). ஆனால், நாம் ஏன் தேவனுடைய வார்த்தையை வாசித்துப் படிக்க வேண்டும்? மறுபடியும், தேவனுடைய சித்தத்தை அறிந்து கொள்வதற்கும், அவர் சொல்லியிருக்கிறதை விசுவாசித்து அதற்கு கீழ்ப்படிவதற்கும் நாம் வசனங்களைப் படிக்க வேண்டும்.

தேவன் இருக்கிறார் என்பது உண்மையாக இருந்தாலும், அவர் நமக்காகத் தம்முடைய சித்தத்தை வெளிப்படுத்தியிருந் தாலும் கூட, நாம் இரண்டு காரணங்களால் இன்னும் இழந்து போனவர்களாக இருக்க போக முடியும். முதலாவது, அவர் என்ன சொல்லியிருக்கிறார் என்பதைப் பற்றி கவலைப்படாமல் தேவனை விசுவாசிக்க மறுப்பதன் மூலம். இரண்டாவது, மனரீதியாக, ஒருவர் தேவன் இருக்கிறார், கிறிஸ்து அவருடைய குமாரன், வேதாகமம் அவருடைய வார்த்தைகளை உள்ளடக்கியது என ஏற்றுக் கொண்டு கர்த்தருக்குக் கீழ்ப்படியாமல் இருப்பதன் மூலம். விசுவாசம் மாத்திரம் ஒருவனை இரட்சிக்கிறது என்கின்ற உபதேசத்துக்கு ஆதரவாக இந்த உலகத்தில் அநேகர் உள்ளனர். அவர்கள் விசுவாசம் மட்டும் குறிப்பிடப்பட்டுள்ள யோவான் 3:16 ம் வசனத்தை சுட்டிக் காட்டுகின்றனர். ஆனால், இங்கே கேள்வி இதுதான்; நாம் உண்மை யிலேயே கர்த்தரில் விசுவாசம் வைத்தால் நாம் என்ன செய்யும் படியாக அவர் கேட்டுக் கொண்டிருக்கிறாரோ அதைச் செய்யமாட் டோமா? அவருடைய உபதேசத்துக்கு கீழ்ப்படிய நாம் தவறினால் அவர் பிரியப்படுகிற விசுவாசத்தை நாம் பெற்றிருக்கிறோம் என்று எப்படிச் சொல்லமுடியும்?

யாக்கோபு விசுவாசத்தின் முக்கியத்துவத்தை இவ்விதமாக விவாதிக்கிறார். " என் சகோதரரே, ஒருவன் தனக்கு விசுவாசமுண் டென்று சொல்லியும், கிரியைகளில்லாதவனானால் அவனுக்குப் பிரயோஜனமென்ன? அந்த விசுவாசம் அவனை இரட்சிக்குமா? ஒரு சகோதரனாவது, சகோதரியாவது வஸ்திரமில்லாமலும், அனுதின ஆகாரமில்லாமலும் இருக்கும்போது உங்க ளில் ஒருவன் அவர்களை நோக்கி; நீங்கள் சமாதானத்தோடே போங்கள், குளிர் காய்ந்து பசியாறுங்கள் என்று சொல்லியும், சரீரத்திற்கு வேண்டிய வைகளை அவர்களுக்குக் கொடாவிட்டால் பிரயோஜனமென்ன?

அப்படியே விசுவாசமும் கிரியைகளில்லாதிருந்தால் தன்னில் தானே செத்தாயிருக்கும். ஒருவன் உனக்கு விசுவாசமுண்டு, எனக்குக் கிரியைகளுண்டு, கிரியைகளில்லாமல் உன் விசுவாசத்தை எனக்குக் காண்பி, நான் என் விசுவாசத்தை என் கிரியை களினாலே உனக்குக் காண்பிப்பேன் என்பானே. தேவன் ஒருவர் உண் டென்று விசுவாசிக்கிறாய் அப்படிச் செய்கிறது நல்லதுதான்; பிசாசுகளும் விசுவாசித்து நடுங்குகின்றன. வீணான மனுஷனே கிரியைக ளில்லாத விசுவாசம் செத்ததென்று நீ அறிய வேண்டுமோ? நம்முடைய பிதாவாகிய ஆபிரகாம் தன் குமாரன் ஈசாக்கைப் பலி பீடத்தின் மேல் செலுத்தினபோது, கிரியைகளினாலே அல்லவோ நீதிமானாக்கப்பட்டான். விசுவாசம் அவனுடைய கிரியைகளோ டேகூட முயற்சி செய்து கிரியைகளினாலே விசுவாசம் பூரணப்பட்ட தென்று காண்கிறாயே; அப்படியே ஆபிரகாம் தேவனை விசுவாசித் தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது என்கிற வேத வாக்கியம் நிறைவேறிற்று, அவன் தேவனுடைய சிநேகிதனென் னப்பட்டான். ஆதலால், மனுஷன் விசுவாசத்தினாலே மாத்திர மல்ல, கிரியைகளினாலேயும் நீதிமானாக்கப்படுகிறானென்று நீங்கள் காண்கிறீர்களே. அந்தப்படி ராகாப் என்னும் வேசியும் தூதர் களை ஏற்றுக்கொண்டு வேறு வழியாய் அனுப்பிவிட்ட போது கிரியைகளினாலே அல்லவோ நீதியுள்ளவளாக்கப்பட்டாள்? அப்படியே, ஆவியில் லாத சரீரம் செத்ததாயிருக்கிறது போல, கிரியைகளில்லாத விசுவாசமும் செத்ததாயிருக்கிறது" (யாக்கோபு. 2:14-26). இங்கே யாக்கோபு ஆசிரியர் கூறுவது போல், விசுவாசம் உண்டென்று கூறுவது ஒன்று. அப்படி விசுவாசமிருக்கிறதென்ப தை நிரூபிப்பது மற்றொன்று. விசுவாசம் மாத்திரம் என்ன செய்ய முடியும்? அதற்கு என்ன மதிப்பு உண்டு? அது செத்த விசுவாசமே. ஆனால், உயிருள்ள விசுவாசம், செயல்படும் விசுவாசம் மற்றும் கிரியை நடப்பிக்கும் விசுவாசம்.

இங்கே, விசுவாசம் கிரியை உடையதாக இருந்தால், இரட்சிப்பு கிருபையினால் வரவில்லை என்று பொருள்பட்டு விடுமா? பவுல் இதுபற்றி இப்படிச் சொல்கிறார். "கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு; ஒருவரும் பெருமை

பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல" என்று (எபேசியர் 2:8,9). நிச்சயமாகவே, மனிதனால் போதுமான அளவு நற்கிரியைகள் செய்து, அதனடிப்படையில் இரட்சிக்கப்பட்டு, பரலோகம் செல்ல முடியாது. அதுபோலவே, மனிதன் மோசேயின் பிரமாணத்தை கைக் கொள்வதினாலும் இரட்சிப்படைய முடியாது. இங்கே, அநேகர் ஏற்றுக்கொள்ள மறுக்கும் ஒரு கருத்தை பவுல் சொல்கிறார். கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் என்று. அப்படியானால் அதன் பொருள் என்ன? அதன் பொருள், கிருபை தேவனை அடையாளப் படுத்துகிறது, விசுவாசம் மனிதனை அடையாளப்படுத்துகிறது. தேவன் தம்முடைய கிருபையினாலே இரட்சிப்பை நமக்கு அளிக்கிறார், அந்த இரட்சிப்பை தன்னுடைய விசுவாசத்தைக் கொண்டு ஏற்றுக் கொள்வது மனிதனுடைய கையில்தான் இருக்கிறது. தேவன் அதைத் தரும் போது நாம் அதை ஏற்றுக் கொள்ள மறுத்தால், நாம் இரட்சிப்படையமுடியாது. மாறாக, தேவன் அதைத் தரும் போது நாம் அதை ஏற்றுக் கொண்டால், அவர் நம்மை இரட்சிக்கிறார். ஆனால், நாம் எப்படி அதை ஏற்றுக்கொள்கிறோம்? அவர் சொன்னதை விசுவாசிப்பதினாலும், நாம் என்ன செய்யும்படியாக சொல்லியிருக்கிறாரோ அதைச் செய்வதினாலும் ஏற்றுக் கொள்கிறோம். ஆனால், நாம் நம்முடைய பங்காக எதையாவது செய்தால், இரட்சிப்பு கிருபையினால் அல்ல என்று பொருள்பட்டு விடுமா? இல்லை, அப்படி இல்லை. எங்களுடைய இரட்சிப்பை நாங்கள் சம்பாதித்து விட்டோம் என்று சொல்லத்தக்க ரீதியில், நாம் ஒருபோதும் தேவனுக்குக் கீழ்ப்படிய முடியாது.

நாம் அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்திற்கு சென்று அதை வாசிக்கும் போது, வித்தியாசப்பட்ட மனமாற்ற சம்பவங்கள் அங்கே பதிவு செய்யப்பட்டிருக்கிறதைக் காண முடியும். ஒவ்வொரு சம்பவத்திலும் சுவிசேஷம் அல்லது கர்த்தருடைய சித்தமானது, இரட்சிப்பு தேவைப்படும்படியான நிலையிலிருந்தவர்களுக்கு போதிக்கப்பட்டது. தேவனுடைய வார்த்தையை கேட்டதின் விளைவாக அவர்கள் விசுவாசிகளானார்கள். ஆனால், அப்படிக் கேட்ட போது அவர்கள் இரட்சிக்கப்படவில்லை. மாறாக, அவர்களுடைய விசுவாசத்தை அடிப்படையாக வைத்து அவர்கள் தங்கள்

பாவங்களிலிருந்து மனந்திரும்பி, கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என அறிக்கை செய்து, பாவமன்னிப்புக்கென்று ஞானஸ் நானம் பெற்றதினால் இரட்சிப்படைந்தார்கள். இதை அவர்கள் செய்தபோது, கர்த்தர் அவர்களை இரட்சித்து தம்முடைய சபையில் சேர்த்தார். குறிப்பாக, அப்போஸ்தலர். 2,8,9,10 மற்றும் 16 அதிகாரங் களை வாசியுங்கள். அங்கே விசுவாசத்தினால் மாத்திரம் அவர்கள் இரட்சிக்கப்பட்டிருக்க முடியுமா? இல்லை, அப்படி ஒருவரும் இரட்சிக்கப்பட்டதாக சொல்லப்படவில்லை. அவர்களுடைய விசுவாசம் அவர்களை கர்த்தருக்குக் கீழ்ப்படிய ஏவும் அளவுக்கு உறுதியாக இருந்தபடியால் தான் அவர்கள் இரட்சிக்கப்பட்டார்கள். இது இன்றும் உண்மையாயிருக்கிறது. ஒருவர் இரட்சிக்கப்பட விசுவாசித்து, ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று கிறிஸ்து சொன்னார் (மாற்கு 16:16). ஒருவேளை ஒருவர் விசுவாசித்து ஞானஸ்நானம் பெற மனதில்லாதவராக இருந்தால் அவர் இரட்சிக் கப்பட முடியுமா? மாற்கு. 16:16ன் படி அப்படி முடியவே முடியாது. இந்தக் காரியத்தில் அவர் அவிசுவாசியாகத்தான் கருதப்படுவார். ஒருவர் விசுவாசிக்கவில்லையென்றால் அவர் ஆக்கினைக்குள் ளாகத் தீர்க்கப்படுவார். நாம் கர்த்தரை விசுவாசிக்கும் போது, நமக்கு இரட்சிக்கும் விசுவாசம் இருக்கிறபடியால் ஒவ்வொரு காலத்திலும் அவர் என்ன சொல்கிறாரோ அதன்படி செய்வோம்.

உங்களிடத்தில் எவ்வகையான விசுவாசம் இருக்கிறது? உங்கள் விசுவாசம் கிரியை செய்கிற விசுவாசமா? உங்கள் விசுவாசத் தின்படி செயல்பட விருப்பமுள்ளவர்களாயிருக்கிறீர்களா? நீங்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தால், அவர் உங்களை இரட்சித்து தம்மு டைய சபையில் சேர்த்துக் கொள்ளுவார்.

## பாடம் - 9

# ஏன் மனந்திரும்புதல் மிகவும் அவசியமானது?

மனந்திரும்புதல் ஒரு வேதாகம பாடம். இதன் பொருள், மனதை மாற்றுவது. அதாவது ஜீவிய மாற்றத்திற்கு வழிவகுக்கும் ஒரு நடைமுறை. அதே நேரத்தில்,மனந்திரும்புதல் என்பது செய்யப்பட்ட தவறுக்கு வருந்துவதென்பதை விட ஒருபடி மேலான செயல். மனந்திரும்புதலில் செய்த செயலுக்கு துக்கப்படுவது ஒரு பகுதியாக சேர்க்கப்பட்டிருந்தாலும், ஒருவர் தான் பிடிபட்டதினால் செய்த பாவத்திற்காக வருத்தப்பட வாய்ப்புண்டு. ஆகையால், வெறுமனே துக்கப்படுதல் போதாது. மாறாக, ஒருவர் தன்னுடைய வாழ்க்கையில் தவறான மற்றும் கெட்ட காரியங்களிலிருந்து முற்றிலும் விடுபட்டு அவைகளை விட்டு விடுவதும் அவசியம். அப்போஸ்தலனாகிய பவுல் இப்படியாகச் சொன்னார். *"தேவனுக்கேற்ற துக்கம் பின்பு மனஸ்தாபப்படுகிறதற்கு இடமில்லாமல் இரட்சிப்புக்கேதுவான மனந்திரும்புதலை உண்டாக்குகிறது; லௌகிக துக்கமோ மரணத்தை உண்டாக்குகிறது"* (II கொரிந்தியர் 7:10).

கர்த்தர் மனந்திரும்புதல் என்கின்ற பதத்திற்கான விளக்கத்தை இரண்டு குமாரர்களை உடைய ஒரு மனிதனுடைய உவமையில் சொல்லியிருக்கிறார். *"ஆயினும், உங்களுக்கு எப்படித் தோன்றுகிறது? ஒரு மனுஷனுக்கு இரண்டு குமாரர் இருந்தார்கள்; மூத்தவனிடத்தில் அவன் வந்து; மகனே, நீ போய் இன்றைக்கு என் திராட்சை தோட்டத்தில் வேலை செய் என்றான். அதற்கு அவன் மாட்டேன் என்றான்; ஆகிலும், பின்பு அவன் மனஸ்தாபப்பட்டுப் போனான். இளையவனிடத்தில் அவன் வந்து, அப்படியே சொன்னான்; அதற்கு அவன் போகிறேன் ஐயா என்று சொல்லியும் போகவில்லை. இவ்விருவரில் எவன் தகப்பனுடைய சித்தத்தின்படி செய்தவன் என்று கேட்டார்; அதற்கு அவர்கள் மூத்தவன் தான்*

என்றார்கள். அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி; " ஆயக்காரரும், வேசிகளும் உங்களுக்கு முன்னே தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கிறார்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனென்றால், யோவான் நீதிமார்க்கமாய் உங்களிடத்தில் வந்திருந்தும் நீங்கள் அவனை விசுவாசிக்கவில்லை; ஆயக்காரரும், வேசிகளுமோ அவனை விசுவாசித்தார்கள்; அதை நீங்கள் கண்டும், அவனை விசுவாசிக்கும்படியாகப் பின்பாகிலும் மனஸ்தாபப்படவில்லை என்றார் " (மத்தேயு 21:28-32). இங்கே, இயேசு பிரதான ஆசாரியர்களிடமும் அவருடைய நாட்களிலிருந்த மூப்பர்களிடமும் இவைகளைச் சொன்னார். இவர்கள் மத சம்மந்தமான மக்கள். ஆயினும், பக்தி காரியங்களில் தவறைச் செய்தார்கள். எனவே, இயேசு அவர்கள் மனந்திரும்பும்படி சொன்னார். அதன் பின்பு, மனந்திரும்புதல் என்றால் என்ன என்பதை உதாரணத் துடன் விளக்கினார். இங்கே இயேசு மனந்திரும்புகிற நபரைப் பற்றிச் சொல்லும் போது, தகப்பனிடம் முதலில் மாட்டேன் என்று சொல்லி விட்டு பின்பு தன் மனதை மாற்றிப் போக தீர்மானித்தவன் தான் என்று சொல்கிறார். வேறொரு குமாரன் போய் தன் தகப்பனுடைய திராட்சைத் தோட்டத்தில் வேலை பார்ப்பேன் என்று சொல்லியும் பின்பு போகவில்லை. கிறிஸ்து யாரிடம் இந்த உவமையைச் சொன்னாரோ அவர்களைப்பார்த்து, இவர்களுள் எந்த குமாரன் தன் தகப்பனுடைய சித்தத்தைச் செய்தான் என்று கேட்டார். அவர்கள் முதலில் போகமாட்டேன் என்று சொல்லி பின்பு போகத் தெரிந்து கொண்ட மூத்தவன் தான் என்று பதிலளித்தார்கள். கர்த்தர், ஆயக்காரரும், வேசிகளும் உங்களுக்கு முன்னே தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கிறார்கள் என்று அந்நாட்களில் வாழ்ந்த மத சம்மந்தமான மக்களிடம் சொன்னார். ஏனென்றால், ஆயக்காரரும், வேசிகளும் மனந்திரும்புவார்கள். ஆனால், ஆசாரியர்களும், மூப்பர்களும் மனந்திரும்ப மாட்டார்கள்.

மனந்திரும்புதல் ஏன் மிகவும் அவசியமானது? ஏனென்றால், இந்த உலகமானது பாவம், அநீதி, தேவபக்தியின்மை, ஒழுக்கக் கேடு, மாம்சத்தின் கிரியைகள் போன்றவைகளினால் நிறைந்திருக்கிறது. பாவம், மனதில் இருந்தாலும், பேச்சில் இருந்தாலும், ஒருவருடைய ஜீவியத்தில் இருந்தாலும் அது அழிவை ஏற்படுத்தும்.

பவுல் இப்படிச் சொன்னார். " பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன்" (ரோமர் 6:23). மறுபடியும், பவுல் இப்படிச் சொல்கிறார். " மோசம் போகாதிருங்கள், தேவன் தம்மைப் பரியாசம் பண்ணவொட்டார்; மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான். தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான்; ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்திய ஜீவனை அறுப்பான்" (கலாத்தியர் 6:7,8).

பாவம் அழிவை உண்டாக்கக் கூடிய ஒன்றாக இந்த உலகத்தில் இருந்தால், யார் தங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்ப வேண்டும்? எதுசரி, எது தவறு என அறிந்து கொள்ளும் திறன் உடைய யாவரும் பாவம் செய்திருக்கிறபடியால், கணக்கொப்புவிக்க வேண்டிய யாவரும் மனந்திரும்ப வேண்டும் (ரோமர் 3:23). அவர்கள் தேவனுடைய பிரமாணத்தை மீறியிருக்கிறார்கள் அல்லது தேவனுடைய சித்தத்தை அசட்டை பண்ணியிருக்கிறார்கள்.

பழைய ஏற்பாட்டின் காலத்தில் உலகம் அக்கிரமத்தினால் நிறைந்து காணப்பட்ட போது, மனுஷனை உண்டாக்கினதற்காக தேவன் மனஸ்தாபப்பட்டார். மனிதன் மிகவும் துன்மார்க்கமாக நடந்தபடியால் அவனை உண்டாக்கினதற்காக தேவன் வருத்தப்பட்டார். அதன் பின்பு தேவன், நீதியுள்ள மனுஷனாகிய நோவாவிட ஜனங்கள் மனந்திரும்பும்படி பிரசங்கிக்கவும் அப்படி அவர்கள் மனந்திரும்பாவிட்டால் ஜலப்பிரளயத்தில் அழிந்து போவீர்கள் என்று எச்சரிக்கவும் அனுப்பினார். அவர்கள் அதைக் கேட்டுத் தங்கள் துன்மார்க்கத்திலிருந்து திரும்பியிருந்தால் அவர்கள் தப்புவிக்கப்பட்டிருப்பார்கள். ஆனால், அதற்கு செவிகொடாமல் போனபடியால், நோவா, அவருடைய மனைவி, அவர்களுடைய மூன்று குமாரர்கள் மற்றும் அவர்களுடைய மனைவிகள் தவிர மற்ற எல்லாரும் ஜலப்பிரளயத்தில் அழிந்து போனார்கள் (ஆதியாகமம் 6-8).

யோனாவின் சம்பவம் உங்களுக்கு நினைவிருக்கலாம். "அமித்தாயின் குமாரனாகிய யோனாவுக்கு கர்த்தருடைய வார்த்தை உண்டாகி அவர்; நீ எழுந்து மகா நகரமாகிய நினிவேக்குப் போய் அதற்கு விரோதமாகப் பிரசங்கி; அவர்களுடைய அக்கிரமம்

என் சமூகத்தில் வந்து எட்டினது என்றார். அப்பொழுது யோனா கர்த்தருடைய சமூகத்தினின்று விலகி, தர்ஷீசுக்கு ஓடிப் போகும்படி எழுந்து யோப்பாவுக்குப்போய், தர்ஷீசுக்குப் போகிற ஒரு கப்பலைக் கண்டு, கூலி கொடுத்து, தான் கர்த்தருடைய சமூகத்தினின்று விலகும்படி, அவர்களோடே தர்ஷீசுக்குப் போகக் கப்பல் ஏறினான்" (யோனா 1:1-3). அப்போது கடலில் பெருங்காற்று உண்டானது. கப்பற்காரர் யோனா தான் இந்நிலைக்குப் பொறுப்பாளி என தீர்மானித்து உடனடியாக அவனை தூக்கி கடலில் போட்டார்கள் என்று தொடர்ந்து வேத வசனம் சொல்கிறது. அதன்பின்பு யோனாவை விழுங்கும்படி ஒரு பெரிய மீனைக் கர்த்தர் ஆயத்தப்படுத்தியிருந்தார்; அந்த மீன் வயிற்றிலே யோனா இராப்பகல் மூன்று நாள் இருந்தான். கர்த்தர் மீனுக்குக் கட்டளையிட்டார், அது யோனாவைக் கரையிலே கக்கிவிட்டது. தொடர்ந்து வேத வசனங்களில் நாம் இப்படியாக வாசிக்க முடியும். " இரண்டாந்தரம் கர்த்தருடைய வார்த்தை யோனாவுக்கு உண்டாகி, அவர்; நீ எழுந்து மகா நகரமாகிய நினிவேக்குப் போய்; நான் உனக்குக் கற்பிக்கும் வார்த்தையை அதற்கு விரோதமாய்ப் பிரசங்கி " என்றார். " யோனா எழுந்து, கர்த்தருடைய வார்த்தையின்படியே நினிவேக்குப் போனான்; நினிவே மூன்று நாள் பிரயாண விஸ்தாரமான மகா பெரிய நகரமாயிருந்தது. யோனா நகரத்தில் பிரவேசித்து, ஒரு நாள் பிரயாணம் பண்ணி; இன்னும் நாற்பது நாள் உண்டு, அப்பொழுது, நினிவே கவிழ்க்கப் பட்டுப்போம் என்று கூறினான். அப்பொழுது நினிவேயிலுள்ள ஜனங்கள் தேவனை விசுவாசித்து உபவாசம் பண்ணும்படி கூறினார்கள்; பெரியோர் முதல் சிறியோர் மட்டும் இரட்டுடுத்திக் கொண்டார்கள். இந்தச் செய்தி நினிவேயின் ராஜாவுக்கு எட்டினபோது, அவன் தன் சிங்காசனத்தை விட்டு எழுந்து, தான் உடுத்தியிருந்த உடுப்பைக் கழற்றிப்போட்டு, இரட்டை உடுத்திக் கொண்டு, சாம்பலிலே உட்கார்ந்தான். மேலும், ராஜா, தானும், தன் பிரதானிகளும் நிர்ணயம் பண்ணின கட்டளையாக, நினிவேயிலெங்கும் மனுஷரும், மிருகங்களும், மாடுகளும், ஆடுகளும் ஒன்றும் ருசிபாராதிருக்கவும், மேயாமலும் தண்ணீர் குடியாமலும் இருக்கவும், மனுஷரும், மிருகங்களும் இரட்டினால் மூடிக் கொண்டு, தேவனை நோக்கி உரத்த சத்தமாய்க் கூப்பிடவும், அவரவர் தம்தம் பொல்லாத வழியையும் தம்தம் கைகளிலுள்ள

கொடுமையையும் விட்டுத் திரும்பவுங்கடவர்கள். யாருக்குத் தெரியும்; நாம் அழிந்து போகாதபடிக்கு ஒருவேளை தேவன் மனஸ் தாபப்பட்டு, தன்னுடைய உக்கிர கோபத்தை விட்டுத் திரும்பி னாலும் திரும்புவார் என்று கூறச்சொன்னான். அவர்கள் தங்கள் பொல்லாத வழியை விட்டுத் திரும்பினார்களென்று தேவன் அவர் களுடைய கிரியைகளைப் பார்த்து, தாம் அவர்களுக்குச் செய்வேன் என்று சொல்லியிருந்த தீங்கைக் குறித்து மனஸ்தாபப் பட்டு, அதைச் செய்யாதிருந்தார்" (யோனா 3 ஆம் அதிகாரம்). இங்கே, யோனா கர்த்தரை விட்டு ஓடிப்போவதிலிருந்தும், தனக்கு கொடுக்கப்பட்ட பொறுப்பைத் தட்டிக் கழிப்பதிலிருந்தும் மனந்திரும்பியதைக் காணலாம். தேவகட்டளைப்படி துன்மார்க்கமான மகா பெரிய நகரமாகிய நினிவேக்குச் சென்று பிரசங்கித்தபோது அந்த பட்டணத் தார் மனந்திரும்பி, தங்கள் பாவத்தை விட்டுத் திரும்பினார்கள். கடைசியாக, தேவன் நினிவே பட்டணத்தை அழிக்கலாமென்ற தன் மனதை மாற்றி, அந்தப் பட்டணத்தார் மனந்திரும்ப முன்வந்தபடி யால் அவர்களைத் தப்புவித்தார். தேவனுடைய வார்த்தை அறிவிக் கப்பட்ட போது அது மனந்திரும்பு தலை உண்டாக்கினது. இது சம்மந் தப்பட்டவர்களை தேவன் தப்புவிக்க வழிவகுத்தது. ஆனால், அங்கே மனந்திரும்புதல் ஏற்படாமல் இருந்திருந்தால் அவைகள் எல்லாம் அழிந்து போயிருக்கும்.

பழைய ஏற்பாடு காலம் முழுவதும் தேவன் இஸ்ரவேலர் களிடம் துன்மார்க்கத்திலிருந்து திரும்பும்படி மறுபடியும் மறுபடி யும் கேட்டுக் கொண்டார். அவர்கள் அப்படிச் செய்தால் தான் அவர்களுக்கு தான் தேவனாயிருப்பதாகச் சொன்னார். மேலும், அவர்களுக்காக யுத்தம் செய்வதாகவும், அவர்களை ஆசீர்வதிப் பதாகவும் சொன்னார். ஆனால், இஸ்ரவேல் தொடர்ந்து தவறான பாதையில் சென்றும், தங்களைச் சுற்றிலும் இருந்த தெய்வங்களை ஏற்றுக் கொண்டும், துன்மார்க்கமான பாதையில் சென்று கொண் டும் இருந்தது. அதன் விளைவாக, தேவன் அவர்களை தண்டித்து, சத்துருக்கள் வந்து இவர்களைச் சிறைபிடித்துச் செல்லும்படி அனுமதித்தார். இவைகளெல்லாம் மனந்திரும்ப தவறியதின் நேரடி விளைவுகளாயிருந்தது. ஞானி இப்படிச் சொன்னார். "நீதி ஜனத்தை உயர்த்தும்; பாவமோ எந்த ஜனத்துக்கும் இகழ்ச்சி" (நீதி மொழிகள் 14:34).

மத்தேயு 3:1-3 வசனங்களில், யோவான் ஸ்நானகன், மனந் திரும்புங்கள் பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங் கித்ததை நாம் வாசிக்கிறோம். கிறிஸ்து தன்னுடைய நாட்களில் வாழ்ந்த ஜனங்க ளிடத்தில் மனந்திரும்பாமற்போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப் போவீர்கள் என்று எச்சரித்தார் (லூக்கா 13:3). பெந்தெகொஸ்தே நாளிலே எருசலேம் பட்டணத்தில் திரளான மக்களிடத்தில் பேதுருவும், மற்ற அப்போஸ்தலர்களும் பிரசங்கம் பண்ணினார்கள். அந்தக் கூட்டத்தில் கிறிஸ்துவை சிலுவையி லறைந்தவர்களும் இருந்தார்கள். அவர்கள் தாங்கள் கேட்ட காரியங்க ளைக் குறித்து தங்கள் இருதயங்களில் குத்தப்பட்டார்கள்; அதாவது, அவர்கள் விசுவாசிகளாகி, என்ன செய்ய வேண்டும் என்பதை அறிந்து கொள்ள விரும்பினார்கள். " பேதுரு அவர்களை நோக்கி; நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொரு வரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறு வீர்கள் " என்றார் (அப். 2:38). இதன் பொருள், அவர்கள் பாவங்கள் மன்னிக்கப்படவேண்டுமென்றால், தங்கள் பாவங்களிலிருந்து திரும்ப வேண்டும் அல்லது பாவங்களை விட்டுவிட வேண்டும் என்பது. மேலும், மனந்திரும்புதல், மன்னிப்பதற்கான நிபந்தனை களுள் ஒன்றாக இருக்கிறது என்கிற பொருளையும் கொடுக்கிறது. ஒருவேளை அவர்கள் மனந்திரும்ப விருப்பமில்லாதிருந்தால் கிறிஸ்துவை விசுவாசிக்க விருப்ப முடையவர்களாயிருந்தாலும், ஞானஸ்நானம் பெற விரும்பி யிருந்தாலும் அவர்கள் இரட்சிக்கப் பட்டிருக்க முடியாது. வெறுமனே மனந்திரும்புதல் மாத்திரம் அவர்களை இரட்சித் திருக்காது. இரட்சிக்கப்பட அவர்கள் தேவனுடைய சத்தியத்தைக் கேட்க வேண்டியதாயிருந்தது, கிறிஸ்துவை விசுவா சிக்க வேண்டியதாயிருந்தது, தங்கள் பாவங்களிலிருந்து மனந் திரும்ப வேண்டியதாயிருந்தது, கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கைசெய்ய வேண்டியதாயிருந்தது, பாவமன்னிப்புப் பெற ஞானஸ்நானம் பெறவும் வேண்டியதாயிருந்தது. (அப். 2:37,38; அப். 8:36-39).

அப்போஸ்தலர். 17:30 ல் நாம் இப்படியாக வாசிக்கிறோம், "அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர் போலிருந் தார்; இப்பொழுதோ மனந்திரும்பவேண்டுமென்று எங்குமுள்ள

மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார் ". இங்கே, இவர் சொல்கிறது என்னவென்றால், ஒரு கால கட்டத்தில் தேவன் சில குறிப்பிட்ட காரியங்களைக் கண்டு கொள்ளாமல் இருந்திருக்கலாம் அல்லது சில காரியங்களை சகித்திருக்கலாம், ஆனால், இப்பொழு தோ மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லா ருக்கும் கட்டளையிடுகிறார் ". பின்பு 17:31ல் லூக்கா சொல்லும் போது, " மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக் கொண்டு பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்; அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பின தினாலே அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப் பண்ணி னார்". எனவே, அவரைச் சந்திக்க ஆயத்தமாக வேண்டுமென்றால், நாம் மனந்திரும்பி கர்த்தர் நமக்குக் கட்டளையிட்டிருக்கிற யாவையும் செய்தால் இந்த உலகத்திலும், இனி வரும் உலகத்திலும் இரட்சிக் கப்படுவோம்.

வழிவிலகிச் செல்கிற அல்லது பாவம் செய்கிற கிறிஸ்த வனின் நிலை என்ன? பாவமானது அவனிடமிருந்து கர்த்தருடைய முகத்தை மறைத்து விட்டது (I பேதுரு 3:12). பாவத்தில் மீண்டும் விழுந்து விட்ட ஒரு கிறிஸ்தவனின் பாவம் நீக்கப்பட வேண்டும், அல்லது மன்னிக்கப்பட வேண்டுமென் றால், அதற்கான ஒரே வழி அப்படிப்பாவம் செய்தவன் பாவத்திலிருந்து மனந்திரும்பி, அறிக்கையிட்டு, பிதாவினிடத்தில் மன்னிப்பு கேட்பதுதான். (அப். 8:14,25; யாக்கோபு 5:16).

இப்போது உங்களைப் பற்றி எப்படி? உங்கள் பாவங்களி லிருந்து மனந்திரும்பி விட்டீர்களா? இது உங்கள் நன்மைக்கானது என்பதை உணருங்கள். கிறிஸ்துவில் விசுவாசம் வைத்து, உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என அறிக்கை செய்து, பாவங்கள் கழுவப்பட ஞானஸ் நானம் பெற்று, தேவனுக்குக் கீழ்ப்படியும் போது உங்களால் நல்ல தேவ பக்தியுள்ள வாழ்க்கையை நடத்த முடியும், அப்போது நீங்கள் மாற்றமடைந்த நபராக இருப்பீர்கள். இவைகளையெல்லாம் செய்து முடிக்கும் போது உங்களைச் சுற்றியிருக்கிறவைகள் நன்மைக்காக மாறத் தொடங்கும். இப்பொழுது சொல்லப்பட்டவைகளின்படி காரியங்கள் நடக்கிறதா என்று முயற்சி செய்து பாருங்கள்.

## பாடம் - 10

# ஏன் நாங்கள் ஞானஸ்நானம் பெறுகிறோம்?

ஞானஸ்நானம் ஒரு வேதாகம பாடம். எனவே, நாம் வேதாகமத்திற்குச் சென்று திருமுழுக்கு என்னவென்பதையும், அதன் நோக்கத்தையும், அதன் முக்கியத்துவத்தையும் கண்டு பிடிக்க வேண்டும்.

வேத வசனங்களுக்கு நாம் போகும்போது, தன் ஊழிய நாட்களில் ஞானஸ்நானம் கொடுத்த யோவான் என்னும் ஒரு மனிதர் பற்றி வாசிக்கிறோம். இவர் அநேகருக்கு ஞானஸ்நானம் கொடுத்தபடியால் யோவான் ஸ்நானகன் என்று அழைக்கப்பட்டிருக்கிறார். மத்தேயு 3:1-6 வசனங்களில் நாம் இப்படியாக வாசிக்கிறோம். *"அந்நாட்களில் யோவான் ஸ்நானகன் யூதேயாவின் வனாந்தரத்தில் வந்து; மனந்திரும்புங்கள், பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கம் பண்ணினான். கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள்; அவருக்குப் பாதைகளைச் செவ்வை பண்ணுங்கள் என்று வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தம் உண்டென்று ஏசாயா தீர்க்கதரிசியினால் சொல்லப்பட்டவன் இவனே. இந்த யோவான் ஒட்டக மயிர் உடையைத் தரித்து தன் அரையில் வார்க்கச் சயைக் கட்டிக் கொண்டிருந்தான்; வெட்டுக்கிளியும், காட்டுத் தேனும் அவனுடைய ஆகாரமாயிருந்தது. அப்பொழுது எருசலேம் நகரத்தாரும், யூதேயா தேசத்தாரும், யோர்தானுக்கு அடுத்த சுற்றுப்புறத்தார் யாவரும் அவனிடத்திற்குப் போய், தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு, யோர்தான் நதியில் அவனால் ஞானஸ்நானம் பெற்றார்கள்".* மறுபடியும் நாம் யோவான் 3:23, ல் இப்படியாக வாசிக்கிறோம். *" சாலிம் ஊருக்குச் சமீபமான அயினோன் என்னும் இடத்திலே தண்ணீர் மிகுதியாயிருந்தபடியினால், யோவானும் அங்கே ஞானஸ்நானம் கொடுத்து வந்தான்; ஜனங்கள் அவனிடத்தில் வந்து ஞானஸ்நானம் பெற்றார்கள்"*

யோவானின் ஊழியத்தை நாம் தொடர்ந்து பார்க்கும்போது, அவர் இயேசு வுக்கே ஞானஸ்நானம் கொடுத்ததாக வாசிக்கிறோம். *"அப்பொழுது, யோவானால் ஞானஸ்நானம் பெறுவதற்கு இயேசு கலிலேயாவை விட்டு யோர்தானுக்கு அருகே அவரிடத்தில் வந்தார். யோவான் அவருக்குத் தடை செய்து; நான் உம்மாலே ஞானஸ்நானம் பெறவேண்டியதாயிருக்க, நீர் என்னிடத்தில் வரலாமா என்றான். இயேசு அவனுக்குப் பிரதியுத்திரமாக; இப்பொழுது இடங்கொடு, இப்படி எல்லா நீதியையும் நிறை வேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது என்றார். அப்பொழுது அவருக்கு இடங் கொடுத்தான். இயேசு ஞானஸ்நானம் பெற்று, ஜலத்திலிருந்து கரையேறினவுடனே இதோ வானம் அவருக்குத் திறக்கப்பட்டது; தேவ ஆவி புறாவைப் போல இறங்கி, தம்மேல் வருகிறதைக் கண்டார். அன்றியும், வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி; இவர் என்னுடைய நேச குமாரன் இவரில் பிரியமாயி ருக்கிறேன் என்று உரைத்தது" (மத்தேயு. 3:13-17).*

இப்போது, யோவானின் ஞானஸ்நானத்தின் முக்கியத்துவம் என்ன? யோவான் கிறிஸ்துவுக்கு முன்னோடி. கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்தும்படி அனுப்பப்பட்டவர். இவருக்கு தன்னுடைய நாட்களில் வாழ்ந்த மக்களிடத்தில் ஞானஸ்நானத்தை அறிமுகப் படுத்தும் பொறுப்பு கொடுக்கப்பட்டிருந்தது; இவர் இப்படிச் செய்ததால் கிறிஸ்துவுக்கும், அப்போஸ்தலர்களுக்கும் ஞானஸ் நானம் பற்றி போதிக்க எளிதாக அமைந்தது. யோவானின் ஞானஸ் நானம் இயேசுவின் நாமத்தில் செய்யப்படவில்லை அல்லது கொடுக்கப்படவில்லை. எனவே, அதற்கு பரிசுத்த ஆவியின் வாக்குத்தத்தம் இல்லை. எனவே தான், பவுல் எபேசு பட்டணத் துக்கு வந்து அங்கே யோவானின் ஞானஸ்நானத்தைப் பெற்றிருந்த மக்களிடம், பரிசுத்த ஆவியைப் பெற்றீர்களா? என்று கேட்டார். அதற்கு அவர்கள் பரிசுத்த ஆவி உண்டென்பதை நாங்கள் கேள்விப் படவே இல்லை என்றார்கள், பின்பு, கிறிஸ்து அவர்களிடம் என்ன எதிர்பார்க்கிறார் என்பது சம்மந்தமான சத்தியத்தை போதித்த பிறகு அவர்கள் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றார்கள் (அப்போஸ்தலர் 19:1-5). அதன் பொருள், யோவானின்

ஞானஸ்நானம் கிறிஸ்துவின் மரணம் வரை நீடித்தது என்பதே. அதன் பின்பு, கிறிஸ்து போதித்த ஞானஸ்நானம் நடைமுறைக்கு வந்தது.

கிறிஸ்துவின் மரணத்திற்குப் பின் தான் பரமப் பிதாவிடம் திரும்பிச் செல்வதற்கு முன்பாக இயேசு அப்போஸ்தலர்களைப் பார்த்து, *" நீங்கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள், விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான். விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான் "* என்று சொன்னார் (மாற்கு 16:15,16). மத்தேயு ஆசிரியர் இப்படிச் சொல்கிறார். *" ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக் கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்"* என்றார். (மத்தேயு 28:19,20). மேற் சொல்லப்பட்ட வசனங்கள் தான் *" பிரதான கட்டளை "* என்றழைக்கப்படுகிறது. இந்தக் கட்டளை கிறிஸ்து மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, உயிர்த்தெழுந்தார் என்கின்ற நற்செய்தியாகிய சுவிசேஷத்தை உலகெங்கும் எடுத்துச் செல்வதைக் குறிக்கிறது. அதில் பிரசங்கிக்க வேண்டிய சில குறிப்பிட்ட நிபந்தனைகளும் இருந்தன. குறிப்பாக, கிறிஸ்துவில் விசுவாசம் மற்றும் ஞானஸ்நானம் போன்ற நிபந்தனைகள் இருந்தன. இதுபோன்ற கட்டளைகளுக்கு ஒருவர் கீழ்ப்படிவதன் மூலமாகத்தான் இரட்சிக்கப்பட முடியும். கிறிஸ்து சொன்னதைக் கவனியுங்கள். *"விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்"* (மாற்கு 16:16).

ஞானஸ்நானம் இரட்சிப்பின் நிபந்தனைகளுடன் ஒன்றாக இருக்கிறது. 1பேதுரு 3:21 ல் *" ஞானஸ்நானம் இரட்சிக்கிறது"* என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதனால் இந்த வசனமோ அல்லது வேதாகமத்தில் வேறு எந்த வசனமோ ஞானஸ் நானம் மாத்திரம் இரட்சிக்கிறது என்று போதிக்கவில்லை. ஒருவர் இரட்சிக்கப் படுவதற்கு முன்பாகச் செய்ய வேண்டிய கடைசி நிபந்தனையாக ஞானஸ்நானம் இருக்கிறது.

அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகம் முழுவதையும் நாம் வாசிக்கும் போது ஜனங்கள் கர்த்தருக்கு கீழ்ப்படிவதை நாம் கவனிக்க முடியும். ஒவ்வொரு மனமாற்ற சம்பவத்திலும் ஜனங்கள் தேவனுடைய வார்த்தை பிரசங்கிக்க கேட்டிருக்கிறார்கள், அதை விசுவாசித்திருக்கிறார்கள், ஞானஸ்நானம் பெற்றிருக்கிறார்கள். பல மனமாற்றச் சம்பவங்களில் கர்த்தருக்கு கீழ்ப்படிந்தவர்கள் தங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட்டது நேரடியாகவும், மறைமுகமாக வும் சொல்லப்பட்டிருக்கிறது. இவைகள் எல்லாவற்றையும் சேர்த்துப் பார்த்தால், விசுவாசம் உண்டாக தேவனுடைய வார்த்தை பிரசங்கிக்கப்பட வேண்டும் என்று போதிக்கின்ற தேவனுடைய வார்த்தைகள் இருக்கிறது. அப்போஸ்தலருடைய நடபடிகள் இரண்டாம் அதிகாரத்தை நாம் வாசிக்கும் போது, பேதுருவும் மற்ற அப்போஸ்தலர்களும் திரளான ஜனங்களுக்குப் பிரசங்கித்தார்கள். அதைக்கேட்ட பிறகே அவர்கள் கர்த்தருக்கு கீழ்ப்படிந்திருக்கிறார்கள்.

அப்போஸ்தலர் 16:30-ல் சிறைச் சாலைக்காரன் பவுலையும், சீலாவையும் பார்த்து, ஆண்டவமாரே இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும்? என்று கேட்டான். அதற்கு பவுலும், சீலா வும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி என்று சொன்னார் கள். ஆனால், இந்த மனிதன் விசுவாசிப்பதற்கு அவனுக்கு கிறிஸ்து வைப் பற்றி எதுவும் தெரியாது. இங்கே, இந்த மனிதனுக்கும், அவன் குடும்பத்தாருக்கும் பிரசங்கமே தீர்வாயிருந்தது. அது முடிந்த பிறகு, அவர்கள் கிறிஸ்துவில் விசுவாசம் வைத்து ஞானஸ்நானம் பெற்றார் கள். அடுத்ததாக, அப்போஸ்தலர் 2:38-ல் அந்த ஜனங் கள் அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை அறிய விரும்பினார் கள். அவர்கள் மனந்திரும்பி பாவமன்னிப்புக் கென்று ஞானஸ் நானம் பெறும்போது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவார்கள் என அவர்களுக்கு சொல்லப்பட்டது (அப்போஸ்தலர் 2:38). அவர் கள் ஏற்கனவே சுவிசேஷம் பிரசங்கிக்க கேட்டு அதை விசுவாசித் திருக்கிறார்கள் (அப்போஸ்தலர் 2:37), ஆனால், வேறு எதையாவது செய்ய வேண்டுமா என அறிய விரும்பினார்கள். இப்போது அவர் கள் மனந்திரும்பி ஞானஸ்நானம் பெறுவது அவசியம் என அவர்களுக்குச் சொல்லப்பட்டது.

அடுத்ததாக, அப்போஸ்தலர் 8:29-39 வசனங்களில், எத்தியோப்பியாவிலிருந்து வந்த மந்திரியின் மனமாற்ற சம்பவம் இடம் பெற்றுள்ளது. பிலிப்பு கிறிஸ்துவை அவருக்கு எப்படி பிரசங்கித்தார் என வேத வசனம் சொல்கிறது. அவர்கள் தண்ணீரண்டை வந்தபோது, அந்த எத்தியோப்பிய மந்திரி ஞானஸ்நானத்தின் மூலம் கர்த்தருக்குக் கீழ்ப்படிய விரும்பினான். பிலிப்பு மந்திரியிடம் முழுமனதோடு விசுவாசித்தால் அப்படிச் செய்ய முடியும் என்று விளக்கினார். அதற்கு மந்திரி, இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறேன் என்று பதிலளித்தான் (அப்போஸ்தலர் 8:37). பின்பு பிலிப்பும், மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கி னார்கள்; பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானம் கொடுத்தான். கடைசியாக, அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் இடம் பெற்றுள்ள எல்லா மனமாற்றச் சம்பவங்களிலும் கர்த்தருக்குக் கீழ்ப்படிய விரும்பியவர்கள் ஞானஸ்நானம் பெற்றிருக்கிறார்கள் என்று காண முடியும். நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு 'கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள் என்று ஜனங்களுக்கு சொல்லப்பட்டதை நாம் வாசிக்கிறோம். அப்போஸ்தலர் 8-ம் அதிகாரத்தில் பிலிப்பு எத்தியோப்பிய மந்திரிக்கு ஞானஸ்நானம் கொடுத்ததாக நமக்கு சொல்லப் பட்டிருக்கிறது.

அப்போஸ்தலருடைய நடபடிகள் பத்தாம் அதிகாரத்தில், கொர்நேலியும் அவன் வீட்டாரும் ஞானஸ்நானம் பெற்றார்கள். அப்போஸ்தலர் 9 மற்றும் 22-வது அதிகாரங்களில், சவுல் எப்படி கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தார் என்று வேத வசனம் நமக்குச் சொல்கிறது. அங்கே அவன் எழுந்து, பாவங்கள் போகக் கழுவப் பட ஞானஸ்நானம் பெறும்படி சொல்லப் பட்டது. அப்போஸ்தலர் 16 ஆம் அதிகாரத்தில் சிறைச்சாலைக்காரனும் அவன் வீட்டாரும் இராத்திரியிலே அந்நேரத்திலே தானே ஞானஸ் நானம் பெற்றார்கள்.

ஞானஸ்நானம் ஓர் அடக்கம் என்று நமக்கு போதிக்கப் பட்டிருக்கிறது. பவுல் இப்படிச் சொன்னார். " ஞானஸ்நானத்திலே அவரோடேகூட அடக்கம் பண்ணப்பட்டவர்களாகவும், அதிலே

அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலே அவரோடே கூட எழுந்தவர்களாக வும் இருக்கிறீர்கள்" (கொலோசெயர் 2:12) ரோமர் 6:3,4 வசனங் களையும் வாசியுங்கள். அங்கே, ஞானஸ்நானம் தண்ணீரில் அடக்கம் பண்ணப்படுதல் என்று வேத வசனம் சொல்கிறது. பிலிப்பு அந்த எத்தியோப்பிய மந்திரிக்கு ஞானஸ்நானம் கொடுத்த போது, தண்ணீருக்குள் அழைத்து சென்று, தண்ணீரிலிருந்து வெளியே அழைத்து வந்தார் (அப்போஸ்தலர் 8:29-39). ஞானஸ் நானம் ஒருவரை கிறிஸ்துவுக்குள் வரச் செய்கிறது (ரோமர் 6:3,4; கலாத்தியர் 3:26,27). ஞானஸ்நானம் ஒருவரை சபைக்குள்ளாக் குகிறது (I கொரிந்தியர் 12:13). யோவான் 3:3-5 வசனங்களில், ஒருவர் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க ஜலத்தினாலும், ஆவியினா லும் பிறக்க வேண்டும் என்று வாசிக்கிறோம். இங்கே தண்ணீர் என்பது ஞானஸ்நானத்தையும், தேவனுடைய ராஜ்யம் என்பது கர்த்தருடைய சபையையும் குறிக்கிறது. அச்சமயத்தில் ராஜ்யம் அல்லது சபை ஸ்தாபிக்கப் பட்டிருக்கவில்லை, எனவே, ஒருவர் அதில் பிரவேசிக்கக் கூடாதிருந்தது, ஆனால், கிறிஸ்து விரைவில் வரப்போகிற ஒன்றைப் பற்றி பேசிக் கொண்டிருக்கிறார். இன்று நிச்சயமாகவே ஒருவர் சபையில் பிரவேசிக்க ஜலத்தினாலும், ஆவி யினாலும் பிறக்க வேண்டும். இதன் பொருள், ஒருவன் இரட்சிக் கப்பட்டு, சபையில் சேர்க்கப்பட ஆவியின் வார்த்தைகளைக் கொண்ட வேதாகமத்திலுள்ள சுவிசேஷத்தின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும்.

நாம் ஏன் ஞானஸ்நானம் பெறுகிறோம்? நாம் இரட்சிக்கப் பட வேண்டுமென்றால் ஞானஸ்நானம் பெறவேண்டும் என இயேசு கட்டளையிட்டிருக்கிறார். எனவே, நாம் ஞானஸ்நானம் பெறுகிறோம். இது கர்த்தருடைய மரணம், அடக்கம், உயிர்த் தெழுதலுக்கு அடையாளமாயிருக்கிறது. இது பற்றி ரோமர் 6 ஆம் அதிகாரத்தில் வாசிக்க முடியும். அதாவது, கிறிஸ்து சிலுவையில் மரித்தார், நாம் நம்முடைய பாவங்களுக்கு மரிக்க வேண்டும். கிறிஸ்து உண்மையான கல்லறையில் அடக்கம் பண்ணப்பட்டார், நாம் தண்ணீரில் ஞானஸ்நானத்தின் மூலம் அடக்கம் பண்ணப் படுகிறோம். கிறிஸ்து கல்லறையிலிருந்து மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தவராய், கல்லறையையும், நரகத்தையும், மரணத்

தையும் ஜெயித்து வெளியே வந்தார், நாம் தண்ணீரிலிருந்து வெளியே வரும் போது பாவமன்னிப்புடன், புதிய சிருஷ்டியாக, புதிதான ஜீவனுள்ளவர்களாக நடந்து கொள்ளும்படிக்கு வெளியே வருகிறோம். எனவே, நாம் ஞானஸ்நானத்தில் கர்த்தருக்கு கீழ்ப் படிவதினால் கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் போன்றவற்றை விசுவாசிக்கிறோம் என்று சொல்கிறோம்.

வேதாகம போதனையின்படி ஞானஸ்நானம் பெற்று விட்டீர்களா? இல்லையென்றால் நீங்கள் இந்த காரியங்களைத் தொடர்ந்து படித்து, கர்த்தருக்குக் கீழ்ப்படிய துரிதமாக முடிவு எடுப்பீர்கள் என்ற நம்பிக்கையுடன் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## பாடம் - 11

# ஏன் நாங்கள் கீழ்ப்படிதலில் விசுவாசம் வைக்கிறோம்?

*கீழ்ப்படிதல் கற்றுக் கொள்ள வேண்டிய மிக முக்கியமான பாடமாயிருக்கிறது. எனவே, தொடர்ந்து சொல்லப்படப் போகின்ற காரியங்கள் குறித்து மிகக் கருத்தாய் சிந்திப்பீர்கள் என நான் நம்புகிறேன். மேலான அதிகாரத்திற்கு பெரும்பாலானவர்கள் சிறிதளவே மரியாதை வைத்திருக்கும் இந்தக் கால கட்டத்தில், அரசாங்கத்திற்குக் கீழ்ப்படியாத இந்த நாட்களில், வேதாகமத்தில் தேவன் கீழ்ப்படிதலைக் கட்டளையிட்டிருக்கிறார் என்றும், கீழ்ப்படிந்தவர்களுக்கு அவர் பலனளித்திருக்கிறார் என்றும் வாசிப்பது நமக்கு உற்சாகத்தைக் கொடுக்கிறது. மத உலகில் அநேகர் பிடிவாதமாக இருந்து தாங்கள் விரும்புகிறபடி செய்து, மனுஷருடைய போதனைகளை உயர்த்துகின்ற இந்த நாட்களில், வேதவாக்கியங்களில் தேவனுடைய வார்த்தைகளின்படி செய்வதை வலியுறுத்தியும், பரலோகத்திற்கு அழைத்துச் செல்கின்ற அந்த நேரான, குறுகிய பாதையில் பயணம் செய்வதை வலியுறுத்தியும் வேதவாக்கியங்கள் போதிப்பதைப் பார்க்கும் போது உற்சாகமாக இருக்கிறது.*

தேவன் தமக்குக் கீழ்ப்படிந்தவர்களை எப்படி ஆசீர்வதித்தார் என்றும், தமக்கு கீழ்ப்படியாதவர்களை எப்படி தண்டித்தார் என்பது பற்றியும் படிக்க என்னோடு பரிசுத்த வேதாகமத்திற்கு வாருங்கள். இதை மனதில் கொண்டவராகத்தான் அப்போஸ்தலனாகிய பவுல் இப்படிச் சொன்னார். *"ஆகையால், தேவனுடைய தயவையும், கண்டிப்பையும் பார்; விழுந்தவர்களிடத்திலே கண்டிப்பையும், உன்னிடத்திலே தயவையும் காண்பித்தார்; அந்தத் தயவிலே நிலைத்திருப்பாயானால் உனக்குத் தயவு கிடைக்கும்; நிலைத்திராவிட்டால் நீயும் வெட்டுண்டுபோவாய் " (ரோமர் 11:22).*

முதலாவது, கர்த்தருக்கு கீழ்ப்படிந்த சில உதாரணங்கள் பற்றி நாம் கவனிப்போம். பழைய ஏற்பாட்டில் கீழ்ப்படிதலுக்கு ஒரு மிகச்

சிறந்த உதாரணம் நோவா தான். இந்த உலகத்திலிருந்த துன்மார்க் கரை அழிக்கும்படி தேவன் ஜலப் பிரளயத்தை அனுப்பியபோது தன்னையும், தன் குடும்பத்தில் உள்ளவர்களையும் இரட்சிப்பதற்கு நோவா ஒரு பேழையை உண்டு பண்ணினார். *"மனுஷருடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும், அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும், கர்த்தர் கண்டு, தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காகக் கர்த்தர் மனஸ்தாபப்பட்டார்; அது அவர் இருதயத்துக்கு விசனமா யிருந்தது. அப்பொழுது கர்த்தர்; நான் சிருஷ்டித்த மனுஷனைப் பூமியின் மேல் வைக்காமல், மனுஷன் முதற்கொண்டு, மிருகங்கள், ஊரும் பிராணிகள், ஆகாயத்துப் பறவைகள் பரியந்தமும் உண்டா யிருக்கிறவைகளை நிக்கிரகம் பண்ணுவேன்; நான் அவர்களை உண்டாக்கினது எனக்கு மனஸ்தாபமாயிருக்கிறது என்றார். நோவா வுக்கோ கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைத்தது"* (ஆதியா கமம் 6:5-8). துன்மார்க்கரை அழிக்க ஜலப்பிரளயத்தை அனுப்பத் தான் உத்தேசித்திருந்ததை நோவாவுக்கு தேவன் எப்படி வெளிப்ப டுத்தினார் என்று வேதவசனம் தொடர்ந்து சொல்கிறதை நாம் வாசிக்க முடியும். அதே நேரத்தில், தேவன், நோவா, நோவாவின் மனைவி, அவர்களுடைய மூன்று குமாரர்கள், அவர்களுடைய மனைவிகள், மற்றும் குறிப்பிடப்பட்ட எண்ணிக்கையிலான மிருகங்கள் அந்த ஜலப்பிரளயத்திலிருந்து காப்பாற்றும்படியாக எல்லாத் திட்டங்களையும் கொடுத்து ஒரு பேழையை உண்டு பண்ணும்படி தேவன் நோவாவுக்கு கட்டளையிட்டார். வேத வசனத்தை நாம் தொடர்ந்து வாசிக்கையில், *"நோவா அப்படியே செய்தான்; தேவன் தனக்குக் கட்டளையிட்டபடியெல்லாம் அவன் செய்து முடித்தான்"* (ஆதியாகமம் 6:22) என்றுள்ளது. அதன் விளை வாக, நோவாவும் அந்தப் பேழையிலிருந்த எல்லோரும் ஜலப்பிரள யத்திலிருந்து காப்பாற்றப்பட்டார்கள். ஆனால், எல்லா துன்மார்க்க ரும், கீழ்ப்படியாதவர்களும் ஜலப்பிரளயத்தினால் அழிக்கப்பட்டார்கள்.

II இராஜாக்கள் ஐந்தாம் அதிகாரத்தில் நாகமான் பற்றிய சம்பவம் இடம் பெற்றிருக்கிறது. *" சீரிய ராஜாவின் படைத்தலை வனாகிய நாகமான் என்பவன் தன் ஆண்டவனிடத்தில் பெரிய*

மனுஷனும் எண்ணிக்கையுள்ளவனுமாயிருந்தான்; அவனைக் கொண்டு கர்த்தர் சீரியாவுக்கு இரட்சிப்பைக் கட்டளையிட்டார்; மகா பராக்கிரமசாலியாகிய அவனோ குஷ்டரோகியாயிருந்தான் ” (II இராஜாக்கள் 5:1). ஆம், அவன் ஒரு குஷ்டரோகியாயிருந்தான். அங்கே அவனுக்கு உண்மையாகவே பிரச்சினை இருந்தது. சீரியர் களுக்கும், இஸ்ரவேலர்களுக்கும் இடையே யுத்தம் நடந்த போது இஸ்ரவேல் தேசத்திலிருந்து ஒரு சிறு பெண்ணைச் சிறைபிடித்துக் கொண்டு வந்திருந்தார்கள். அவள் நாகமானின் மனைவிக்குப் பணிவிடை செய்து கொண்டிருந்தாள். ஒருநாள், அவள் தன் எஜமானியைப் பார்த்து “ என் ஆண்டவன் மோரியாவிலிருக்கிற தீர்க்கதரிசியினிடத்தில் போவாரானால் நலமாயிருக்கும். அவர் இவருடைய குஷ்டரோகத்தை நீக்கிவிடுவார் என்றாள்” (II இராஜ ாக்கள் 5:3). இந்தச் செய்தியை யாரோ நாகமானிடத்தில் எடுத்துச் சென்றார்கள், பின்பு, ராஜா சில வெகுமதிகளுடன் இஸ்ரவேலின் ராஜாவுக்கு ஒரு நிருபத்தையும் கொடுத்து விட்டான். ஆனால், இஸ்ரவேலின் ராஜாவோ, சீரிய ராஜா தன்னையும், இஸ்ரவேலை யும் தண்டிப்பதற்கான ஒரு சாக்காக இதை எடுத்துக் கொள்வான் என கலங்கினான். ஆனால், தேவனுடைய தீர்க்கதரிசியாகிய எலிசா இதைக் கேள்விப்பட்டு, நாகமானைத் தன்னிடம் அனுப்புமாறு இஸ்ரவேலின் ராஜாவுக்குச் சொல்லி அனுப்பினான். அதன் பின்பு, நாகமான் எலிசாவின் வாசற்படியிலே வந்து நின்றான். அப்பொழுது எலிசா அவனிடத்தில் ஆள் அனுப்பி, நீ போய், யோர்தானில் ஏழு தரம் ஸ்நானம்பண்ணு; அப்பொழுது உன் மாம்சம் மாறி, நீ சுத்த மாவாய் என்று சொல்லச் சொன்னார். தீர்க்கதரிசி ஒரு மரியாதைக் காவது வெளியே வந்து தன்னை சந்திக்காதது நாகமானுக்கு கடுங் கோபத்தை ஏற்படுத்தியது. மேலும், எலிசா வெளியே வந்து நின்று, தன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைத்தொழுது தன் கையி னால் அந்த இடத்தைத் தடவி, இவ்விதமாய்க் குஷ்டரோகத்தை நீக்கி விடுவான் என்று தனக்குள் நினைத்திருந்தான். மேலும், நாகமான், நான் ஸ்நானம்பண்ணிச் சுத்தமாகிறதற்கு இஸ்ரவேலின் தண்ணீர்கள் எல்லாவற்றைப் பார்க்கிலும் தமஸ்கு வின் நதிகளாகிய ஆப்னாவும், பர்பாரும் நல்லதல்லவோ என்று சொல்லி, உக்கிரத் தோடே திரும்பிப் போனான். நாகமானின் ஊழியக்காரர் அவனை நோக்கி அந்தத் தீர்க்கதரிசி ஒரு பெரிய காரியத்தைச் செய்ய

உமக்குச் சொல்லியிருந்தால் அதை நீர் செய்வீர் அல்லவா? ஆகையால், ஸ்நானம் பண்ணும் அப்பொழுது சுத்தமா வீர் என்று சொன்னார்கள். சற்று யோசித்த பிறகு, யோர்தான் நதியில் ஒரு முறை, இரண்டு முறைகள், ஐந்து முறைகள், ஆறு முறைகள் மூழ்கினான். ஆனாலும் குஷ்டரோகியாகவே இருந்தான். ஆனால், அவன் ஏழாவது முறை மூழ்கி தண்ணீரிலிருந்து வெளியே வந்த போது அவன் மாம்சம் ஒரு சிறுபிள்ளையின் மாம்சத்தைப் போல் மாறி, அவன் சுத்தமானான், (II இராஜாக்கள் 5:14). இப்போது நாகமனை குணமாக்கியது யார்? தேவன் தான் குணப்படுத்தினார். ஆனால், எப்போது அவனை குணப்படுத்தினார்? தீர்க்கதரிசியின் வார்த்தைகளை அவர் நிறைவேற்றின பிறகுதான் குணப்படுத்தினார். அவன் கீழ்ப்படியாமற்போயிருந்தால் என்ன நடந்திருக்கும்? அவன் சுகம் பெற்றிருக்கமாட்டான். அங்கே கீழ்ப்படிதல் பெரிய வித்தியாசத்தை ஏற்படுத்தியது.

கீழ்ப்படிந்தபோது தேவனுடைய ஆசீர்வாதங்கள் பின் தொடர்ந்தன என்று காட்டுவதற்கு எண்ணற்ற உதாரணங்களை எங்களால் மேற்கோள் காட்டமுடியும். அதுபோலவே, தேவனுக்குக் கீழ்ப்படியாதவர்கள் தேவனால் எப்படி தண்டிக்கப்பட்டார்கள் என்பதற்கும் அநேக உதாரணங்கள் உண்டு. ஆதாம், ஏவாள் சம்பவத்தை நினைத்துக் கொள்ளுங்கள். சர்ப்பத்திற்கு செவி கொடுத்து, தடைசெய்யப்பட்ட கனியைப் புசித்து தேவனுக்குக் கீழ்ப்படியாமல் போனார்கள். அதன் விளைவாக அவர்கள் ஆவிக்குரிய பிரகாரமாக மரித்தார்கள். அதுமட்டுமல்ல, சரீரப்பிரகாரமாக வேறுவழிகளில் அவர்கள் தண்டிக்கப்பட்டார்கள், இதனால் சரீர மரணம் அவர்களுக்கும், மனித இனம் முழுமைக்கும் வந்தது (ஆதியாகமம் 3). I சாமுவேல் 15 ஆம் அதிகாரத்தில், சாமுவேல் மூலமாக சவுலுக்கு தேவன் தம்முடைய ஜனங்களுக்கு சத்துருக்களாயிருந்த அமலேக்கியர்களை அழிக்கும்படி கட்டளையிட்டார். சவுல் தன் சேனையை திரட்டிக் கொண்டு கர்த்தருடைய சொல்லுக்குக் கீழ்ப்படியப் போனான். ஆனால், அமலேக்கின் ராஜாவாகிய ஆகாகைத் தப்புவித்தான். சவுலும், ஜனங்களும் ஆகாகையும், ஆடுமாடுகளில் முதல் தரமானவைகளையும், இரண்டாந்தரமானவைகளையும், ஆட்டுக்குட்டிகளையும் நலமான எல்லாவற்றையும்

அழித்துப் போட மனதில்லாமல் தப்ப வைத்து, அற்பமானவைகளும், உதவாதவைகளுமான சகல வஸ்துகளையும் முற்றிலும் அழித்துப்போட்டான் (I சாமுவேல் 15:9). பின்பு அவர்கள் திரும்பிப் போனார்கள், "சாமுவேல் சவுலினிடத்தில் போனான்; சவுல் அவனை நோக்கி; நீர் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவர்; கர்த்தருடைய வார்த்தையை நிறைவேற்றினேன் என்றான். அதற்குச் சாமுவேல் அப்படியானால் என் காதுகளில் விழுகிற ஆடுகளின் சத்தமும் எனக்குக் கேட்கிற மாடுகளின் சத்தமும் என்ன என்றான் ". அதற்குச் சவுல், ஜனங்கள் ஆடு மாடுகளில் நலமானவைகளை; உம்முடைய தேவனாகிய கர்த்தருக்குப் பலியிடும்படிக்குத் தப்ப வைத்தார்கள் மற்றவைகளை முற்றிலும் அழித்துப் போட்டோம் (Iசாமுவேல் 15:13,14) என்று தன் தவறுக்குத் சவுல் விளக்கமளித்தான். தொடர்ந்த விவாதத்திற்குப் பிறகு நாம் இப்படியாக வாசிக்கிறோம் "அதற்குச் சாமுவேல் கர்த்தருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும், சர்வாங்க தகனங்களும், பலிகளும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்குமோ? பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப்பார்க்கிலும் செவிகொடுத்தலும் உத்தமம்" என்றான். (I சாமு வேல் 15:22). அதன் பின்பு, தான் பாவம் செய்ததை சவுல் ஒத்துக் கொண்டான். ஆனால், காலம் கடந்து விட்டது. சவுலின் கீழ்ப்படியாமையின் விளைவாக இஸ்ரவேலின் ராஜாவாக இராதபடி கர்த்தரால் புறக்கணிக்கப்பட்டான். கர்த்தருக்கு கீழ்ப்படிவது அவனுக்கு மிகவும் எளிதாக இருந்தது, ஆனால், அவன் கீழ்ப் படியவில்லை என்பது மிகவும் துக்ககரமானது.

ஜனங்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படியாத போது அதன் விளைவுகளை அனுபவித்தே ஆக வேண்டும். நாம் செய்து கொண்டிருக்கிறது போலவே, பவுல் பழைய ஏற்பாட்டிற்கு சென்று அந்நாட்களில் தேவன் தம்முடைய ஜனங்களோடு எப்படி இடைப்பட்டார் என்பது பற்றிய சில உதாரணங் களைத் தருகிறார். "தேவ வசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும், ஆறுதலினாலும் நாம் நம்பிக்கையுள்ளவர்களாகும்படிக்கு முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது" (ரோமர் 15:4). நிச்சயமாகவே, நாம் இது போன்ற பழைய ஏற்பாட்டு சம்பவங்களிலிருந்து விலையேறப் பெற்ற பாடங்களைக் கற்றுக் கொள்ள வேண்டும்.

நாம் கிறிஸ்துவைப் பற்றி இப்படியாக வாசிக்கிறோம். "*அவர் குமாரனாயிருந்தும் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக் கொண்டு, தாம் பூரணரான பின்பு தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராகி*" (எபிரெயர் 5:8,9) என்று. ஆகையால், கிறிஸ்து எல்லாக் காரியங்களிலும் தேவனுக்குக் கீழ்ப்படிந்தது போலவே, நாமும் கீழ்ப்படிய வேண்டும் என தேவன் எதிர்பார்க்கிறார். மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் ஆகிய புத்தகங்களில் இடம் பெற்றிருக்கிற கிறிஸ்துவின் ஜீவியம் முழுவதும் பார்த்தால் அவர் எப்போதும் தம்மைப் பின் பற்றுபவர்கள் கீழ்ப்படிய வேண்டும் என்று கட்டளையிட்டிருக்கிறார். இது, தம்மைப் பின்பற்றுபவர்களுடைய தாழ்மை, நேர்மை போன்றவற்றை சோதிக்கும் வழியாக இருந்தது. கர்த்தருக்கு கீழ்ப்படியாதவர்களை அவர் ஆசீர்வதித்தாக எந்த ஒரு உதாரணத்தையும் நாம் பார்க்க முடியாது.

கிறிஸ்து இப்படியாகச் சொன்னார். *பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல் என்னை நோக்கி; கர்த்தாவே! கர்த்தாவே என்று சொல்லுகிறவன் அதில் பிரவே சிப்பதில்லை*" (மத்தேயு 7:21). அவர் மறுபடியும் சொல்லும் போது, "*ஆகையால், நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு இவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவனை கன் மலையின் மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன்*" (மத்தேயு 7:24). யாக்கோபு இப்படியாகச் சொன் னார், "*அல்லாமலும், நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதன்படி செய்கிறவர்களாயும் இருங்கள்*" (யாக் கோபு 1:22). I பேதுரு 1:22-ல் பேதுரு, நாம் சத்தியத்திற்கு கீழ்ப்படிந்ததினாலே ஆத்துமாக்க ளைச் சுத்தமாக்கிக் கொண்டதாகக் கூறுகிறார். பவுல் சொல்லும் போது, நாம் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியத் தவறினால் நம்மீது ஆக்கினைத் தீர்ப்பைச் செலுத்தும்படிக்கு கர்த்தர் வருவார் (II தெசலோனிக்கேயர் 1:7-9). நாம் அவருடைய கற்பனைகளின்படி செய்து, மரண பரியந்தம் உண்மையுள்ளவர்களாயிருந்தால் நாம்

நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வோம் என்று கிறிஸ்து வாக்குத்தத்தம் செய்திருக்கிறார் (வெளி 22:14, 2:10).

ஜனங்கள் இழந்து போவதற்குக் காரணம் அவர்கள் கர்த்தருக்கு கீழ்ப்படிவதை தெரிந்து கொள்ளாமல் இருப்பது தான். மனிதன் தன்னைத் தானே இரட்சிக்க முடியாது. அல்லது மத சம்மந்தமாக தன் விருப்பப்படி காரியங்களை செய்வதினால் இரட்சிக்கப்பட முடியாது. ஒருவரால், தான் விரும்புகின்றதை விசுவாசிக்க முடியும், ஒருவரால் மனிதனால் உண்டாக்கப்பட்ட சபைகளில் அங்கத்தினராக இருக்க முடியும், மனிதர்களின் பெயர்களை தெரிந்து கொண்டு தேவனைத் தன் விருப்பத்தின்படி ஆராதிக்க முடியும், ஆனால், அவர் இரட்சிக்கப்பட்டு பரலோகத்திற்குப் போக முடியாது. ஒருவர் இரட்சிக்கபடவேண்டுமெனில் கர்த்தர் என்ன செய்யும் படி விரும்புகிறாரோ அதைச் செய்ய வேண்டும். அதற்கு விதிவிலக்கு இல்லை.

நீங்கள் கர்த்தருக்கு கீழ்ப்படிந்து விட்டீர்களா? நீங்கள் அவருக்கு கீழ்ப்படிவீர்களா? கிறிஸ்து சொன்னார், " பின்பு அவர் அவர்களை நோக்கி: நீங்கள் உலகமெங்கும் போய் சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி, ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான் " (மாற்கு 16:15,16) என்று. நீங்கள் அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தை முழுவதுமாக வாசித்தால், ஒவ்வொரு மனமாற்ற சம்பவத்திலும் ஜனங்கள் எல்லோரும் ஒரே காரியத்தைச் செய்திருக்கிறார்கள். அவர்கள் சுவிசேஷத்தைக் கேட்டு, கிறிஸ்துவை விசுவாசித்து, பாவங்களிலிருந்து மனந்திரும்பி, கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என அறிக்கையிட்டு, பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றார்கள். அவர்கள் அதைச் செய்தபோது கர்த்தர் அவர்களை இரட்சித்து தம்முடைய சபையிலே சேர்த்துக் கொண்டார். இது தவிர மாற்று வழி ஏதுவுமே இல்லை.

## பாடம் - 12

# ஏன் நாங்கள் கிறிஸ்துவின் சபை அங்கத்தினர்களாயிருக்கிறோம்?

"சபை" என்னும் வார்த்தை "எக்லீசியா" என்ற கிரேக்க பதத்திலிருந்து வருகிறது. இதன் பொருள், "அழைக்கப் பட்டவர்கள்" என்பதாகும். இங்கே கிறிஸ்து தம்மைப் பின்பற்றும் படி மக்களை உலகத்திலிருந்து வெளியே அழைத்திருக்கிறார். இயேசு தம்முடைய சீஷர்கள் பற்றிச் சொல்லும் போது, " *நான் உம்முடைய வார்த்தையை அவர்களுக்குக் கொடுத்தேன்; நான் உலகத்தானல்லாதது போல அவர்களும் உலகத்தாரல்ல; ஆதலால் உலகம் அவர்களைப் பகைத்தது என்று சொன்னார்*" (யோவான் 17:14). இயேசுவானவர் பிடிக்கப்பட்டு, விசாரிக்கப்பட்டு சிலுவை யில் அறையப்படுவதற்கு முன்பாக தம்மைச் சுற்றிலும் இருந்தவர் களைப் பார்த்து இப்படிச் சொன்னார். "*என் ராஜ்யம் இவ்வுலகத்திற் குரியதல்ல, என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதானால், நான் யூதரி டத்தில் ஒப்புக்கொடுப்படாதபடிக்கு என் ஊழியக்காரர் போராடி யிருப்பார்களே; இப்படியிருக்க என் ராஜ்யம் இவ்விடத்திற்குரிய தல்ல என்றார்*" (யோவான் 18:36). இங்கே இயேசு பேசுகின்ற ராஜ்யம், சபையாகிய ராஜ்ஜியம். அப்போது சபை தோற்றுவிக்கப்ப டவில்லை. ஆனாலும், சபையாகிய ராஜ்யம் சமீபமாயிருந்தது.

வேதாகமத்தில் "சபை" என்பது உள்ளூர் அளவில் பேசப்பட் டுள்ளது. உதாரணமாக, கொரிந்து சபை (I கொரி 1:2), தெசலோனிக் கே சபை (I தெச 1:1) என்று. இப்படிப் பல சபைகள் உண்டு. மற்றும், சபையானது உலகளாவிய அளவிலும் பேசப்பட்டிருக்கிறது. இந்த காரியத்தில் எல்லா உள்ளூர் அல்லது பிராந்திய சபைகள் சேர்ந்து ஒரு சபையாகிறது. அதாவது, கிறிஸ்துவின் சபையாகிறது (மத்தேயு 16:18; ரோமர் 16:16). நிச்சயமாகவே, உள்ளூர் சபையாக இருந்தாலும் சரி, உலகளாவிய சபையாக இருந்தாலும் சரி, சபை ஒன்று தான்; அது கிறிஸ்துவினுடையது. ஏனெனில், அது கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்திருக்கிறது.

கிறிஸ்துவின் சபையானது வேதவாக்கியங்களில் தேவனுடைய ராஜ்யமாகவும் (லூக்கா 21:31), கிறிஸ்துவின் ராஜ்யமாகவும் (எபேசியர் 5:5), பரலோக ராஜ்யமாகவும் (மத்தேயு 5:19), தேவனுடைய சபையாகவும் (அப்போஸ்தலர் 20:28), கிறிஸ்துவின் சபையாகவும், (ரோமர் 16:16), கிறிஸ்துவின் சரீரமாகவும் (1 கொரி. 12:27), தேவனுடைய வீடாகவும் (1 தீமோத்தேயு 3:15) பேசப்பட்டிருக்கிறது. கர்த்தருடைய வார்த்தை, சபையை கிறிஸ்துவின் மணவாட்டியாகவும் (யோவான் 3:29), மந்தை என்றும் (யோவான் 10:1-18) பேசுகிறது. வேறுவிதமாகச் சொன்னால் சபை கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமாயிருக்கிறது (1 கொரிந்தியர் 12), சபையானது கிறிஸ்தவர்களால் ஆனது (அப்போஸ்தலர் 11:26) சபை இரட்சிக்கப்பட்டவர்களை உள்ளடக்கியது (அப்போஸ் தலர் 2:47).

வேதவாக்கியங்களில் நீங்கள் வாசிக்கக்கூடிய ஒரே சபை கிறிஸ்துவின் சபை மாத்திரம் தான். மனிதனால் உண்டாக்கப்பட்ட அநேக போலி சபைகள் இன்று உலகில் இருக்கின்றன. ஆனால், மெய்யான சபை ஒன்றே ஒன்று தான் இருக்கிறது.

இப்போது நானும், என் சகோதரர்களும் வேறு சபைகளில் அங்கமாக இல்லாமல் கிறிஸ்துவின் சபையில் ஏன் அங்கத்தினர்களாக இருக்கிறோம் என்று சொல்ல விரும்புகிறேன்.

நாங்கள் கிறிஸ்துவின் சபையில் அங்கத்தினர்களாக இருப்பதற்குக் காரணம் இச்சபை பற்றி தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டிருக்கிறது. கர்த்தர் தம்முடைய ராஜ்யம் அல்லது வீட்டை எருசலேமில் ஸ்தாபிப்பார் என்று ஏசாயா சொன்னார் (ஏசாயா 2:1-3). அது வல்லமையுடன் வருவதாக யோவேல் சொன்னார் (யோவேல் 2:28,29). அது ஒருபோதும் அழிக்கப்படாமல் என்றென்றும் நிலைத்து நிற்கும் என்று தானியேல் கூறியுள்ளார். (தானியேல் 2:44). அப்போஸ்தலருடைய நடபடிகள் இரண்டாம் அதிகாரத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கிறபடி, அந்த தீர்க்கதரிசனங்கள் எல்லாம் சபை ஸ்தாபிக்கப்பட்ட போது நிறைவேறின.

கிறிஸ்து சபையைக் கட்டுவதாக வாக்குத்தத்தம் பண்ணினபடியால் நாங்கள் கிறிஸ்துவின் சபையில் அங்கத்தினர்களாக இருக்கிறோம். கிறிஸ்து, அந்நாட்களில் அதாவது, முதல்

நூற்றாண்டில் வாழ்ந்து கொண்டிருந்த சிலருடைய வாழ்நாளி லேயே ராஜ்யம் பலத்தோடே வருமென்று சொன்னார் (மாற்கு 9:1). மறுபடியும், அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவை தேவனுடைய குமார னென்று அறிக்கை செய்த பின்பு இப்படிக் கூறினார். "மேலும் நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல் கள் அதை மேற்கொள்வதில்லை " (மத்தேயு 16:18). அப்போது சபை இன்னும் ஸ்தாபிக்கப்படவில்லை. ஆயினும், இயேசு இந்த வார்த் தைகளைச் சொன்னபிறகு குறுகிய காலத்திலேயே சபை ஆரம்பிக் கப்பட விருந்தது. ஒருவர் வேறு ஏதாவது சபையில் அங்கமாக இருந்தால், கிறிஸ்து தான் கட்டுவேன் என்று சொன்ன சபையைக் காட்டிலும் சிறந்த தொருசபையை ஒருவனால் எப்படி கண்டு பிடிக்க முடியும்?

எருசலேம் பட்டணத்தில், கி.பி. 33 ல் சபையானது ஸ்தாபிக் கப்பட்டபடியால் நாங்கள் கிறிஸ்துவின் சபையில் அங்கத்தினர் களாக இருக்கிறோம். தீர்க்கதரிசனங்களில் பேசப்பட்டு கிறிஸ்து வால் வாக்களிக்கப்பட்ட ஒரே சபை கிறிஸ்துவின் சபை தான். யூதர் களின் பண்டிகையான பெந்தொகொஸ்தே நாளில் உலகின் பல்வேறுபட்ட பகுதிகளிலிருந்து எருசலேமுக்கு வந்திருந்தார்கள். சபையை ஏற்படுத்தும் ஒரு நாளாக கர்த்தர் அந்த நாளைத் தெரிந்து கொண்டார். அந்த நாளில் தான் பரிசுத்த ஆவி அப்போஸ்தலர்கள் மீது ஊற்றப்பட்டு, அவர்கள் தேவமனிதர்கள் என மற்றவர்கள் நம்பும்படியாக அந்நிய பாஷைகளில் பேசினார்கள். மற்றும் அற்புத அடையாளங்களைச் செய்தார்கள். பிறகு, அவர்கள் கிறிஸ்து வைப் பிரசங்கித்த பின் ஏறக்குறைய மூவாயிரம் பேர் கிறிஸ்துவை விசுவா சித்து, தங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, பாவ மன்னிப்பைப் பெறும்படியாய் ஞானஸ்நானம் பெற்று கிறிஸ்துவுக்குக் கீழ்ப் படிந்தார்கள்; பரிசுத்த ஆவியின் வரத்தையும் பெற்றுக் கொண்டார் கள். இரட்சிக்கப்பட்டவர்களை கர்த்தர் சபையிலே சேர்த்தார் என்று வேதவசனம் சொல்கிறது. இவைகள் எல்லாமே அப்போஸ்தலரு டைய புத்தகம் இரண்டாம் அதிகாரத்தில் எழுதிக் கொடுக்கப்பட் டுள்ளது. இப்படிச் சொல்லப்பட்டிருக்கும் யாவும் உண்மையாக இருக்கிறபடியால், கி.பி.33-ல் எருசலேமில் தொடங்கப்படாத,

இப்போது நூற்றுக்கணக்கில் இருக்கிற எந்த ஒரு சபையும் கர்த்தருடைய சபையாக இருக்க முடியாது. இந்தக் காரியத்தில் எங்களுடைய சபை மட்டும் தான் கிறிஸ்துவுக்குச் சொந்தமான சபை என்று நாங்கள் சொல்லுகிறதாக ஒருவேளை நீங்கள் சொல்லலாம். இல்லை, நான் இங்கே எங்களுடைய சபையைப் பற்றி பேசவில்லை. மாறாக, நாம் கர்த்தருடைய சபை பற்றி பேசிக் கொண்டிருக்கிறோம். எங்களுக்கென்று சபை இல்லை. சபை எங்களுடையதாக இருந்தால் அதைப் பற்றி பேசுவதே நேரத்தை வீணடிப்பதாகும். மாறாக, சபை கிறிஸ்துவினுடையது என்றும், பெந்தெகொஸ்தே நாளில் கி.பி. 33-ல் எருசலேம் பட்டணத்தில் அது ஸ்தாபிக்கப் பட்டது என்பதும் அதன் அடையாளமாயிருக்கிறது. இந்த சபை கி.பி. 33-ல் இருந்தே இருந்து வருகிறது. கிறிஸ்துவுக்குச் சொந்தமான சபை இந்த ஒரு சபை தான். இது சரி தானா என்பதை நீங்கள் சோதித்துத் தெரிந்து கொள்ளுங்கள்.

கிறிஸ்துவின் மீது சபை கட்டப்பட்டிருக்கிறபடியால், நாங்கள் கிறிஸ்துவின் சபை அங்கத்தினர்களாயிருக்கிறோம். பேதுரு வும், அப்போஸ்தலர்களும் கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கை செய்தபோது, இந்தக் கல்லின் மீது, அதாவது, "தேவனுடைய குமாரன் என்கின்ற உண்மை மீது", சபையைக் கட்டுவதாக இயேசு சொன்னார் (மத்தேயு 16:18). அந்த உண்மையின் மீது தான் சபை இன்றளவும் இருந்து வருகிறது. கிறிஸ்து தேவனுடைய குமாரன் இல்லை என நிரூபிக்கப் பட்டிருந்தால் சபை எப்போதோ இல்லாமல் போயிருந்திருக்கும். எனவே தான், பவுல் இப்படிச் சொல்கிறார் "போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசு கிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப்போட ஒருவனாலும் கூடாது" என்று. (I கொரி 3:11). பேதுரு கிறிஸ்துவை அந்த அஸ்திபாரத்தின் மூலைக்கல் என்று விவரிக்கிறார் (I பேதுரு 2:4-8). கிறிஸ்து அல்லாத வேறெந்த அஸ்திபாரமும் நிலைத்திராது (மத்தேயு 7:24-27). சபையானது, கிறிஸ்துவின் மீது கட்டப்பட்டிருக்கிறபடியால் சபை சத்தியத்திற்குத் தூணும், ஆதாரமுமாயிருக்கிறது (I தீமோத்தேயு 3:15). அதாவது, சபையானது கிறிஸ்துவின் மீது கட்டப்பட்டிருக்கிறபடியால் சபை சத்தியத்தை தாங்கக் கூடியதாக அல்லது சத்தியத்தை உலகிற்கு பறை சாற்றக்கூடியதாக இருக்கிறது.

சபையானது கிறிஸ்துவின் இரத்தத்தினால் வாங்கப்பட்டிருக் கிறபடியால், நாங்கள் கிறிஸ்துவின் சபையில் அங்கத்தினர்களாயி ருக்கிறோம். பவுல் எபேசு சபையின் மூப்பர்களிடம் இப்படிச் சொல்கிறார், "*ஆகையால் உங்களைக் குறித்தும் தேவன் தம்மு டைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக் கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங் குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள்*" (அப்போஸ்தலர் 20:28). எபேசியர் 5:25-ல், பவுல், கிறிஸ்து தம்மைத்தாமே சபைக்காக ஒப்புக்கொடுத்தார் என்று சொல்கிறார். அதன் பொருள், சபைக்காக அவர் மரித்தார் என்பது தான். மத்தேயு 16:18-ல், கிறிஸ்து தம்முடைய சபையைக் கட்டுவதாகச் சொன்னார். இதை வேறு விதமாக விளக்க வேண்டுமென்றால், மனிதனுடைய பாவங்களிலி ருந்து மனிதனை இரட்சிக்கும்படி இயேசு சிலுவையில் மரித்தார். ஒருவரோ அல்லது அதற்கு மேலானவர்களோ அவருக்குக் கீழ்ப் படியும் போது, அவர் அவர்களை இரட்சித்து தம்முடைய இரத்தம் சிந்துதல் மூலமாக சுத்திகரிக்கப்பட்டவர்களோடு சேர்த்துக்கொள் கிறார். அவர் சிலுவையில் மரித்ததினால், தன் ஜீவனையே கிரய மாகச் செலுத்தியிருக்கிறார். இவைகள் எல்லாவற்றையும் மனித னை இரட்சிக்கும் படியாகத்தான் அவர் செய்தார். இரட்சிக்கப்பட்ட வர்கள் தான் சபை என்று அழைக்கப்படுகிறார்கள். அப்போஸ்தல ருடைய நடபடிகள் 2:47-ல், இரட்சிக்கப்பட்டவர்கள் சபையில் சேர்க்கப்படுகிறதை நாம் வாசிக்கிறோம். கிறிஸ்து சபைக்காக மரிக்க முன் வந்ததினாலும், தம்முடைய இரத்தத்தை சபைக்காகச் சிந்தினபடியாலும் சபை மிகவும் முக்கியமானதென்பது இதன் மூலம் உறுதியாகிறது.

கிறிஸ்துவின் சபை, கிறிஸ்துவின் பெயரைத் தரித்திருக்கிற படியால் நாங்கள் அந்த சபையின் அங்கத்தினர்களாயிருக்கிறோம். கிறிஸ்து, சபை தன்னுடையது என்று சொல்லியிருக்கிறார், அவரே சரீரமாகிய சபைக்கு இரட்சகராயிருக்கிறார் (மத்தேயு 16:18; எபே சியர் 5:23). இது உண்மையாயிருக்கிறபடியால், சபை கிறிஸ்து வுக்குச் சொந்தம் என்பது தெளிவாகிறது. ஒருவர் ஓர் உடைமைக்கு சொந்தக்காரர் என்றால், அது அவருடைய பெயரில் தான் இருக்கும். வேதவாக்கியங்களில் இதற்கான அடையாளங்கள் கொடுக்

கப்பட்டுள்ளன. உதாரணமாக, கிறிஸ்துவின் சபையார் (ரோமர் 16:16) கிறிஸ்துவின் சரீரம் (I கொரி. 12:27), தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யம் (கொலோ. 1:13) என்று இப்படி இவைகள் எல்லாமே கிறிஸ்துவின் சபையைத்தான் குறிக்கின்றன. அது மாத்திரமல்ல, கிறிஸ்துவின் நாமத்தை தரித்துக் கொண்டிருக்கும் எல்லா அங்கத்தினர்களும் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள் (அப்போஸ்தலர் 11:26; I பேதுரு 4:16). பேதுரு கிறிஸ்துவின் நாமத்தில் தான் இரட்சிப்பு இருக்கிறது என்று அறிவித்தார் (அப்போஸ்தலர் 4:12).

கிறிஸ்து சபைக்கு இரட்சகராயிருக்கிறபடியால் நாங்கள் கிறிஸ்துவின் சபையில் அங்கத்தினர்களாயிருக்கிறோம் (எபேசியர் 5:23), அவரே சபைக்குத் தலையாயிருக்கிறார் (கொலோசெயர் 1:18). ஒரே சபையாகிய கிறிஸ்துவின் சபையில் நாம் அங்கத்தினர்களாயிருக்க வேண்டும் (எபேசியர் 4:4; எபேசியர் 1:22,23).

இப்படிப்பட்ட சபையில் நீங்கள் அங்கத்தினராக இருக்கிறீர்களா? அல்லது வேறு ஏதாவது சபையில் அங்கத்தினராக இருக்கிறீர்களா? கிறிஸ்துவுக்கு ஒரே ஒரு சபை தான் உண்டு என்பதை மனதில் வையுங்கள். ஆகவே, இந்த ஒரே சபையில் நீங்கள் பிரவேசிப்பது அவசியமாயிருக்கிறது. நீங்கள் கிறிஸ்துவை விசுவாசித்து, உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என அறிக்கை செய்து, உங்கள் பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெறும்போது கர்த்தர் உங்களை இரட்சித்து, தம்முடைய சபையில் சேர்த்துக் கொள்வார் (மாற்கு 16:16; அப்போஸ்தலர் 2:38,47) சபை இரட்சிப்பதில்லை. ஆனால், கிறிஸ்து சபைக்கு இரட்ச கராயிருக்கிறார். ஆதலால், நாம் இரட்சிக்கப்படவும், கிறிஸ்தவ ஜீவியத்தை நடத்தவும் இந்த சபையில் நாம் அங்கத்தினர்களாக இருக்க வேண்டுவது அவசியம். கடைசியாக, கர்த்தர் ஒரு நாளில் திரும்ப வந்து இந்த சபையை ஏற்றுக் கொண்டு இதை பரலோகத் திற்கு எடுத்துச் செல்வார்.

## பாடம் - 13

# ஏன் நாங்கள் கிறிஸ்தவர்களாக மாத்திரம் இருக்கிறோம்?

நீங்கள் அறிந்திருக்கிறபடி உலகம் முழுவதும் லட்சக்கணக்கான மக்கள் தாங்களும் கிறிஸ்துவை விசுவாசிப் பதாக சொல்லிக் கொண்டு, ஆனால், அவருடைய பெயரைத் தரித்துக் கொள்ளாமலிருக்கிறார்கள். கிறிஸ்துவின் பெயரைத் தரித்துக்கொள்வதற்கு பதிலாக, அவர்கள் மனிதர்களுடைய பெயர் களை, அவரவர் உபதேசங்கள் அல்லது கொள்கைகளின் பெயர் களை அல்லது வாரத்தில் ஏதோ ஒரு நாளின் பெயரை தரித்துக் கொள்கிறார்கள். இது வேதாகம உபதேசத்திற்கு எதிரானது என்று நாங்கள் நம்புகிறோம். அதே நேரத்தில், உலகம் முழுவதிலும் எங்களைப் போன்ற லட்சக்கணக்கான மக்கள் மனித உபதேசத்தை நிராகரிக்கிறவர்களாகவும் இருக்கிறார்கள். நாங்கள் விசுவாசி களாகி, கிறிஸ்துவின் உபதேசங்களுக்குக் கீழ்ப்படிந்தபோது அது எங்களை கிறிஸ்தவர்களாக, கிறிஸ்தவர்களாக மாத்திரம் ஆக்கியது.

நாம் தேவனுடைய வார்த்தைக்குச் செல்லும் போது, இரட் சிப்பு கிறிஸ்துவின் நாமத்தில் தான் இருக்கிறது என்று சொல்லப் பட்டிருக்கிறது. நாம் இப்படியாக வாசிக்கிறோம், "அவரா லேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப் படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவரு டைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை" என்று (அப். 4:12). உண்மைதான், இன்று உலகில் மிகப் பெரிய மனிதர்கள் இருக்கிறார்கள். அவர்கள் யார் என்பதற்காகவும், என்னவாயிருக்கிறார்கள் என்பதற்காகவும் அவர்களைப் பாராட்டு கிறோம், அவர்களுக்கு மரியாதை கொடுக்கிறோம். மிகப்பெரிய மனிதர்கள் எப்போதுமே இருந்து வருகிறார்கள். காலம் உள்ளவரை பெரிய மனிதர்கள் தொடர்ந்து இருப்பார்கள். எந்த சந்தேகமும் இல்லை. ஆனால், ஒரு மனிதனுடைய பெயரைத் தரித்துக்

கொண்டு நாம் அவரைக் கனப்படுத்தும் அளவுக்கு ஒரு பெரிய மனிதர் அல்லது முக்கியமான மனிதர் அல்லது மகத்தான மனிதர் என்று யாருமில்லை. ஏனென்றால், எந்த ஒரு மனிதனாலும் நம்மை இரட்சிக்க முடியாது. கிறிஸ்து மாத்திரமே நம்மை இரட்சிக்க முடியும். அவர் நம் இரட்சகராயிருக்கிறார் என்பதற்கு அத்தாட்சியாக, அவர் நாமத்தை மாத்திரம் நாம் தரித்துக் கொள்கிறோம்.

நாம் கிறிஸ்துவில் விசுவாசம் வைத்து, நம்முடைய பாவங்களிலிருந்து மனந்திரும்பி, இயேசுவை தேவனுடைய குமாரன் என அறிக்கை செய்து, நம் பாவங்கள் கழுவப்பட ஞானஸ்நானம் பெறும் போது, அவர் நம்மை இரட்சித்து, தம்முடைய சபையில் நம்மை சேர்க்கிறார். எனவே, நாம் அவருடையவர்கள். அவர் நம் உரிமையாளர் என்பதை அறிவிக்கும் விதத்தில் நாம் அவருடைய பெயரைத் தரித்துக் கொள்கிறோம். கிறிஸ்து இப்படிச் சொன்னார், *"விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்"* (மாற்கு 16:16).

அதன் பின்பு, ஒரு கூட்ட மக்கள் தேவனுடைய வார்த்தையைக் கேட்டு அதை சந்தோஷமாக ஏற்றுக் கொண்டு ஞானஸ்நானம் பெற்றார்கள் (அப் 2:41). இதன் விளைவாக, *"இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார்"* என்று அப்போஸ்தலர் 2:47-ல் நாம் வாசிக்கிறோம். ஆனால், அவர்கள் யாருடைய சபையில் சேர்க்கப்பட்டார்கள்? கிறிஸ்துவின் சபையில் சேர்க்கப்பட்டார்கள். கிறிஸ்து தம்முடைய சபையைக் கட்டுவதாகச் சொல்லியிருந்தார் (மத்தேயு 16:18), அது தான் இந்த சபை. மறுபடியும், நாம் அப்போஸ்தலர் 20:28-ல், கிறிஸ்து தம்முடைய இரத்தத்தினாலே சபையை வாங்கினார் என்று வாசிக்கிறோம். அதாவது, ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட அவசியமான கிரயத்தை அவர் செலுத்தினார். அப்படி இரட்சிக்கப்பட்டவர்களனைவரையும் கொண்டது தான் சபை. எபேசியர் 5:23-ல், பவுல், கிறிஸ்துவானவர் சபை அல்லது சரீரத்திற்கு இரட்சகராயிருக்கிறார் என்று சொல்கிறார். இவைகளெல்லாம் இரட்சிக்கப்பட்டவர்களும், சபையில் சேர்க்கப்பட்டவர்களும் கிறிஸ்துவுக்கு சொந்தமானவர்கள் என்று சொல்கிறது. ஏனெனில், கிறிஸ்து தான்

சபைக்கு இரட்சகராக இருக்கிறார். இதன் பொருள், நாம் கிறிஸ்துவுக்குச் சொந்தமானவர்கள் என்பதைக் காட்ட தனிநபரா கவும், சபையாகவும் கிறிஸ்துவின் பெயரைத் தரித்துக் கொள்ள வேண்டும். நாம் அவருக்குச் சொந்தமானவர்களாக இல்லை யானால், அவருடைய நாமத்தை தரித்துக் கொள்ளும் உரிமை நமக்கு இயல்பாகவே இருக்காது. நாம் மற்றவர்களுடைய பெயர்களைத் தரித்துக் கொண்டால், நாம் கிறிஸ்துவினுடைய வர்கள் அல்ல என்பதையே காட்டுகிறது. ஏதாவது ஒன்று என்னுடையதானால், அது என் பெயரில் தான் இருக்க வேண்டும்.

எனக்கு ஏதாவது செல்வமோ, வீடோ இருந்தால் அது என் பெயரில் பதிவு செய்யப்படுகிறது. எனக்கு ஒரு மனைவி இருந்தால் என் பெயரை தரித்துக் கொள்வதால் என்னை கனப்படுத்துகிறாள். எனக்கு பிள்ளைகள் இருந்தால், என் பெயரை தரித்துக் கொண்டு நான் அவர்களுடைய தகப்பன் என அடையாளப்படுத்துகிறார்கள். மாறாக, என்னுடையவைகள் எல்லாம் மற்றவர்களுடைய பெயரில் இருந்தால் சம்மந்தப்பட்டவைகள் என்னுடைய வைகள் என்பதை நான் எப்படி நிரூபிக்க முடியும்? இக்கருத்து கிறிஸ்துவுக்கும், கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களுக்கும் அப்படியே பொருந்தும். இதனால் தான், நாங்கள் கிறிஸ்துவின் பெயரைத் தரித்திருக்கி றோம், மற்றும் கிறிஸ்தவர்களாக மாத்திரம் இருக்கிறோம்.

கிறிஸ்தவன் என்கிற வார்த்தை புதிய ஏற்பாட்டில் மூன்று முறைகள் காணப்படுகிறது. அவைகளில் முதலாவது, அப்போஸ் தலர் 11:26-ல் உள்ளது. "...முதல் முதல் அந்தியோகியாவிலே சீஷர் களுக்குக் கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கிற்று ". அதற்கு முன்பாக, அவர்கள் எப்படி இருந்தார்கள்? அவர்கள் கிறிஸ்தவர் களாக, இயேசுவைப் பின்பற்றினவர்களாகத்தான் இருந்தார்கள். ஆனால், கர்த்தருடைய ஜனங்கள், முதல் முதல் அந்தியோகியாவில் தான் கிறிஸ்தவர்கள் என்றழைக்கப்பட்டார்கள். அடுத்ததாக, கிறிஸ்தவன் என்கின்ற பெயர் அப்போஸ்தலர் 26:28-ல் இடம் பெற்றிருக்கிறது. இந்த சந்தர்ப்பத்தில் பவுல் அகிரிப்பா ராஜாவுக்கு போதித்துக் கொண்டும், அவருடைய விசுவாசத்தைக் குறித்து கேள்விகேட்டுக் கொண்டும் இருந்தார். பின்பு, நாம் இப்படியாக

வாசிக்கிறோம். "அப்போது அகிரிப்பா பவுலை நோக்கி: நான் கிறிஸ்தவனாகிறதற்குக் கொஞ்சங்குறைய நீ என்னை சம்மதிக்கப் பண்ணுகிறாய் என்றான்". சிலர், அந்த ராஜா, கிறிஸ்தவனாகுதல் என்கிற கருத்தைக் குறித்து கேலி செய்ததாகச் சொல்கிறார்கள். அந்த ராஜா உண்மையாகச் சொன்னானோ இல்லையோ, நமக்குத் தெரியாது. ஆனால், கிறிஸ்தவன் என்கிற பெயரைக் குறித்து கொஞ்சம் அவன் அறிந்திருந்தான். ஒரு வேளை, பவுலை சந்திப்பதற்கு முன்பே கிறிஸ்தவம் பற்றி அதிகமாக இவன் கேள்விப்பட்டிருக்கலாம். உண்மையில், பவுல், அப்போது காவலில் இருந்தார், அவர் சென்ற இடமெல்லாம் கிறிஸ்துவை பிரசங்கித்ததற்காக கைது செய்யப்பட்டு ராயனால் விசாரிக்கப்படும்படி ரோமாபுரிக்கு அனுப்பப் படும்படி இருந்தார். ஒரு வேளை, அகிரிப்பா ராஜாவுக்கு தன்னுடைய நாட்களில் வாழ்ந்த கிறிஸ்தவர்களைப் பற்றிய பரிச்சயம் இருந்திருக்கலாம். அப்படி இல்லையென்றால் கூட, நிச்சயமாகவே பவுல் அவரிடத்தில் கிறிஸ்துவைப் பற்றியும், கிறிஸ்தவனாவதற்கு என்ன செய்ய வேண்டும் என்பது பற்றியும் சொல்லியிருப்பார். அந்நாட்களில் கிறிஸ்துவைப் பின்பற்றினவர்கள் கிறிஸ்தவர்கள் என்ற பெயராலேயே அழைக்கப்பட்டார்கள் என்கின்ற முடிவுக்கு வரலாம். அப்போஸ்தலனாகிய பேதுரு இது பற்றிச் சொல்லும்போது, " ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து, அதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்தக்கடவன்" என்று சொல்கிறார் (I பேதுரு 4:16). இங்கே பேதுரு, பாவத்தின் காரணமாக ஒருவன் பாடுகள் படுவதற்கும், கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுகள் படுவதற்கும் உள்ள வேறுபாட்டைக் காட்டுகிறார். ஒருவன் கெட்ட அல்லது தவறான காரியம் செய்வதினால் பாடுபடுவது அந்த நபருக்கு அவமானம். அதே நேரத்தில், ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடு பட்டால், அவன் அது குறித்து வெட்கப்பட வேண்டிய அவசியமில்லை.

யார் கிறிஸ்தவன்? கிறிஸ்துவைப் பின்பற்றுபவன், கிறிஸ்துவைப் போல இருப்பவன். அவன் தேவபக்தியுள்ளவன், நேர்மையானவன், எப்போதும் சரியானதைச் செய்ய முயற்சி செய்கிறவன். இதில் என்ன தவறு இருக்கிறது? ஒன்றுமில்லை. எனவே, ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால் அதைக் குறித்து

வெட்கப்படாமலிருந்து, அவருடைய நாமத்துக்காக அவமான மடைவதற்குப் பாத்திரராக எண்ணி, அதை ஒரு வாய்ப்பாகக் கருதி கனி தர வேண்டும். யாக்கோபு 2:7 ஐ வாசியுங்கள் " *உங்களுக்குத் தரிக்கப்பட்ட நல்ல நாமத்தை அவர்களல்லவோ தூஷிக்கிறார்கள்* ". இங்கே யாக்கோபு, கிறிஸ்தவர் என்கிற பெயரைக் குறிப்பிட வில்லையென்றாலும் கிறிஸ்துவின் பகைஞர்கள் சம்மந்தமாக பேசும் போது, நல்ல நாமம் என்பது கிறிஸ்தவன் என்கிற நாமத்தைக் குறிக்கும் விதத்திலேயே பேசியிருக்கிறார். தேவ ஆவியினால் ஏவப்பட்ட இந்த எழுத்தாளர், தேவனுடைய பிள்ளைகள் எந்த நாமத்தினாலே அழைக்கப்பட்டார்களோ அந்த நாமத்தைப் பற்றி தான் பேசுகிறார். கிறிஸ்துவின் நாமத்தைக் காட்டிலும், கிறிஸ்தவன் என்கிற நாமத் தைக் காட்டிலும் எந்த ஒரு பெரிய நாமத்தை அவர்கள் தரித்துக் கொண்டிருக்க முடியும்? ஒருவன் கர்த்தருக்குக் கீழ்ப்படி வதால் மாத்திரம் கிறிஸ்தவன் என்று அழைக்கப்படாமல், அவன் தன் வாழ்க்கையின் மூலம், தான் ஒரு கிறிஸ்தவன் என்று காட்ட வேண்டும். எனவே தான், பவுல் தன்னுடைய நாட்களில் வாழ்ந்த கிறிஸ்தவர்களுக்கு இப்படி எழுதினார். "*வார்த்தையினாலாவது, கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும், அதை யெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலை யாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள்* " (கொலோசெயர் 3:17) என்று.

வேதாகமம் என்ன போதிக்கிறதோ அதனடிப்படையில் நாம் கிறிஸ்தவர்களாக மாத்திரம் இருக்கிறோம். ஒருவர் கிறிஸ்துவை விசுவாசித்து, கர்த்தருக்குக் கீழ்ப்படியும் போது கிறிஸ்து அவரை இரட்சிக்கிறார். எனவே, அவர் கிறிஸ்துவினுடையவராகிறார் என்று வேதவாக்கியம் நமக்குச் சொல்கிறது. இப்படியாக, அவர், தான் யாருடையவர், தன் உரிமையாளர் யார் என்பதைக் காட்டு வதற்காக கிறிஸ்தவன் என்கிற பெயரைத் தரித்துக் கொள்கிறார். ஒருவர் வேறொருவரின் பெயரைத் தரித்துக் கொண்டு, இப்படிப் பட்ட உரிமைத்துவத்தை எப்படிக் காட்ட முடியும்? ஒருவர் மனித னால் உண்டாக்கப்பட்ட பெயரைத் தரித்துக் கொண்டு கிறிஸ்து வின் நாமத்தை எப்படிக் கனப்படுத்த முடியும்?

நாங்கள் கிறிஸ்துவை மாத்திரம் பின்பற்றுகிறபடியால், கிறிஸ்தவர்களாக மாத்திரம் இருக்கிறோம். கிறிஸ்து நம்முடைய கர்த்தராகவும், எஜமா னாகவும் இருக்கிறார். அவரிடம் வருவதற்கு எங்களுக்கு நற்செய்தியின் மூலம் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது (மத்தேயு 11:28-30) நாங்கள் அந்த அழைப்பை ஏற்றுக் கொண்டோம். அவர் தம்மீது விசுவாசம் வைத்து, அவருக்குக் கீழ்ப்படியும்படி கட்டளையிட்டார். நாங்களும் அப்படியே செய்தோம் (மாற்கு 16:15,16).

சபையாகிய அவருடைய குடும்பத்தில் நாங்கள் அங்கத்தினர் களாக இருப்பதால் நாங்கள் கிறிஸ்தவர்களாக மட்டும் இருக்கி றோம். அவருடைய குடும்ப அங்கத்தினர்களாக நாங்கள் இருக்கிறபடியால் குடும்பப் பெயரை நாங்கள் தரித்துக் கொண்டிருக்கிறோம் (எபேசி யர் 3:14,15).

நாங்கள் கிறிஸ்தவ ஜீவியத்தை ஜீவித்துக் கொண்டிருக்கிற படியால் நாங்கள் கிறிஸ்தவர்களாக மட்டும் இருக்றோம். வாரத்தின் முதல் நாள் தோறும் ஆராதனைக்காக நாங்கள் கூடுகிறோம் (அப் போஸ்தலர் 20:7), கிறிஸ்துவைப் பின்பற்ற அனுதினமும் பாடுபடு கிறோம் (லூக்கா 9:23)

இப்போது நான் உங்களை ஒன்று கேட்கட்டும். கிறிஸ்துவில் நீங்கள் ஒரு விசுவாசியா? நீங்கள் வேதத்தில் வாசிக்க முடியாத சபை யில் அங்கத்தினராக இருந்தாலோ, அல்லது மனிதனால் உண்டாக் கப்பட்ட பெயரைத் தரித்திருந்தாலோ அல்லது உங்களை ஒரு கிறிஸ்தவன் எனச் சொல்லிக்கொள்வதாலோ நீங்கள் ஒரு கிறிஸ்த வனாக இருக்க முடியாது. நீங்கள் கிறிஸ்வராக இருந்தால் உங்க ளால் தேவனுடைய வார்த்தைக்குச் சென்று, நீங்கள் கிறிஸ்தவராக மாறினதற்கு என்ன செய்தீர்கள் என்பதையும், நீங்கள் ஏன் கிறிஸ்த வரானீர்கள் என்பதற்குமான காரணங்களைக் காட்ட முடியும்.

நீங்கள் கிறிஸ்தவராக இல்லையென்றால், கிறிஸ்தவராகும் படி உங்களை உற்சாகப்படுத்த விரும்புகிறோம். நீங்கள் கிறிஸ்து வை விசுவாசித்து, பாவங்களிலிருந்து மனந்திரும்பி, கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று அறிக்கை செய்து, பாவமன்னிப்புக் கென்று ஞானஸ்நானம் பெறும் போது, அப்போது கர்த்தர் உங்களை

இரட்சித்துத் தம்முடைய சபையில் சேர்த்துக் கொள்வார் (மாற்கு 16:16; அப்போஸ்தலர் 2:38,47). கர்த்தருடைய குடும்பமாகிய சபையில் நீங்கள் அங்கத்தினராக இருக்கும் போது நீங்கள் கிறிஸ்தவனாயிருப்பீர்கள். இது செய்வதற்கு மிகவும் சுலபமானது. முதல் நூற்றாண்டில் வாழ்ந்த பேதுரு, பவுல், யோவானைப் போன்று நீங்களும் ஒரு கிறிஸ்தவன் என்பது எவ்வளவு திருப்திகரமானதாக இருக்கும்! அவர்களால் கிறிஸ்தவர்களாக மட்டும் இருந்திருக்க முடியுமென்றால், உங்களாலும் கிறிஸ்தவனாக மட்டும் இருக்க முடியும். இதற்கு மாறாக, கூடுதலாகவும், குறைவாகவும் ஏன் இருக்க வேண்டும்? கர்த்தர் நீங்கள் எப்படி இருக்க விரும்புகிறாரோ அப்படி மட்டும் இருங்கள். அது போதுமானது.



## பாடம் -14

# ஏன் நாங்கள் ஒற்றுமையில் நம்பிக்கை வைக்கிறோம்?

கிறிஸ்தவத்தில் ஒற்றுமையை விட முக்கியமானது வேறொன்றும் இல்லை. தேவன், கிறிஸ்து, பரிசுத்த ஆவியானவர் இவர்களிடையே ஒற்றுமை இருக்கிறது. வேத வசனங்களில் ஒற்றுமை இருக்கிறது. சபையாகிய தேவனுடைய குடும்பத்தில் விசுவாசிகள் மத்தியில் ஒற்றுமை காணப்படுகிறது. கிறிஸ்தவ வாழ்க்கையில் மனிதனுக்கும், கர்த்தருக்கும் இடையில் ஒற்றுமை காணப்படுகிறது.

ஒற்றுமை என்பதின் பொருள் ஒருமைப்பாடு, முழுமை மற்றும் பூரணத்துவம் என்பதாகும். இன்னும், இது ஒத்துப்போவது, ஒன்றுபடுவது, கூட்டாகச் செயல்படுவது மற்றும் இணைந்து பாடுபடுவது.

கர்த்தருடைய சபையாயிருக்கிற கர்த்தருடைய மக்களாகிய நாங்கள் ஒற்றுமையில் நம்பிக்கை வைக்கிறோம். ஏனென்றால், ஒற்றுமைக்கு எதிரானது பிரிவினையாயிருக்கிறது. ஒற்றுமை பற்றி தொடர்ந்து பார்ப்பதற்கு முன்பு, பிரிவினை பற்றி வேத வசனங்கள் என்ன சொல்கிறதென்று பார்ப்போம். பிரிவினை என்றால் என்ன? அது எதற்கு அடையாளமாக இருக்கிறது? அது எதற்கு வழிவகுக்கிறது? நாம் ஒவ்வொருவரும் மிகப் பெரிய விசுவாசிகளாகவும், ஒற்றுமைக்காகப் பாடுபடுகிறவர்களாகவும் இருப்போம். நீண்ட காலத்திற்கு முன்பு சாலொமோன் ஞானி பிரிவினை குறித்து இப்படியாகச் சொல்கிறார். " சகோதரருக்குள்ளே விரோதத்தை உண்டு பண்ணுதல்" கர்த்தர் வெறுக்கிற ஏழு காரியங்களில் ஒன்று என்று (நீதி. 6:19). இது பிரிவினையை உண்டு பண்ணுகிற ஒருவன் பற்றியே குறிப்பிடுகிறது. அப்போஸ்தலனாகிய பவுல் ரோமாபுரியில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு இப்படியாக எழுதுகிறார். "அன்றி

*யும் சகோதரரே, நீங்கள் கற்றுக் கொண்ட உபதேசத்திற்கு விரோதமாய்ப் பிரிவினைகளையும், இடறல்களையும் உண்டாக்குகிறவர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருந்து, அவர்களை விட்டு விலக வேண்டுமென்று உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன். அப்படிப் பட்டவர்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு ஊழியஞ் செய்யாமல் தங்கள் வயிற்றுக்கே ஊழியஞ்செய்து, நயவசனிப்பினாலும், இச்சகப் பேச்சினாலும் கபடில்லாதவர் களுடைய இருதயங்களை வஞ்சிக்கிறவர்களாயிருக்கிறார்கள்"* (ரோமர் *16:17,18*). இங்கே பவுல் பிரிவினைகளையும், இடறல்களையும் உண்டாக்குகிறவர்களை அடையாளம் காண வேண்டுமென்று ரோமபுரியாரை ஊக்கப்படுத்துகிறார். சிலர், உபதேசத்திற்கு விரோத மான காரியங்களைப் போதித்துக்கொண்டும், செய்து கொண்டும் இருந்தனர். எனவே, அவர்கள் குறிக்கப்பட வேண்டும் என்று பவுல் சொல்கிறார். இக்காரியத்தில் மேற்கூறப்பட்ட ஒழுங்கற்ற செயல்க ளைச் செய்தவர்கள் கர்த்தருக்கு ஊழியம் செய்யாதபடியால் அவர் கள் தவிர்க்கப்பட வேண்டும் என்று பவுல் சொல்கிறார். மாறாக, அவர்கள் தங்கள் வயிற்றுக்கே ஊழியஞ்செய்கிறதாக பவுல் கூறுகி றார். அதாவது, அவர்கள் இப்படிப்பட்ட காரியங்களை தங்கள் சொந்த ஆதாயத்திற்காகச் செய்கிறதாக பவுல் கூறுகிறார். கடைசி யாக, பவுல் அவர்கள் தங்கள் நயவசனிப்பினாலும், இச்சகப்பேச்சினாலும், கபடில்லாத வர்களுடைய இருதயங்களை வஞ்சிக்கிறவர் களாயிருக்கிறார்கள் என்று எச்சரிக்கிறார். இங்கே நேரிடையாகக் குறிப்பிட்டுத்தானே பவுலடியார் சொல்கிறார், அப்படித்தானே? மேலும், அநேகர் தவறான வழியில் நடத்தப்பட்டு விடாதபடி ரோமாபுரியில் இருந்த கிறிஸ்தவர்களை எச்சரிப்பது பவுலுக்கு அவசியமாகக் காணப்பட்டது.

I கொரிந்தியர் *1:11-17* வசனங்களில், கொரிந்து பட்டணத்தில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு பவுல் இப்படியாக எழுதினார். "*ஏனெனில் என் சகோதரரே, உங்களுக்குள்ளே* வாக்குவாதங்கள் *உண்டென்று குலோவேயாளின் வீட்டாரால் உங்களைக் குறித்து எனக்கு அறிவிக்கப்பட்டது. உங்களில் சிலர்; நான் பவுலைச் சேர்ந்தவனென்றும், நான் அப்பொல்லோ வைச் சேர்ந்தவனென்றும், நான் கேபாவைச் சேர்ந்தவனென்றும், நான் கிறிஸ்துவைச் சேர்ந்தவ*

*னென்றும் சொல்லுகிறபடியால் நான் இப்படிச் சொல்கிறேன். கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா? பவுலா உங்களுக்காகச் சிலுவை யிலறையப்பட்டான்? பவுலின் நாமத்தினாலேயா ஞானஸ்நானம் பெற்றீர்கள்? என் நாமத்தினாலே ஞானஸ்நானங் கொடுத்தே னென்று ஒருவனும் சொல்லாதபடிக்கு, நான் கிறிஸ்புவுக்கும், காயுவுக்குமேயன்றி, உங்களில் வேறொருவனுக்கும் ஞானஸ் நானம் கொடுக்கவில்லை; இதற்காக தேவனை ஸ்தோத்திரிக்கி றேன். ஸ்தேவானுடைய வீட்டாருக்கும் நான் ஞானஸ்நானங் கொடுத்ததுண்டு. இதுவுமல்லாமல், இன்னும் யாருக்காவது நான் ஞானஸ் நானங் கொடுத்தேனோ இல்லையோ அறியேன். ஞானஸ் நானத்தைக் கொடுக்கும்படி கிறிஸ்து என்னை அனுப்பவில்லை; சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவே அனுப்பினார்; கிறிஸ்துவின் சிலுவை வீணாய்ப் போகாதபடிக்கு, சாதுரிய ஞானமில்லாமல் பிரசங்கிக்கவே அனுப்பினார்" என்று.*

இதற்கு முந்தைய வசனப்பகுதியில், கொரிந்துவில் இருந்த கிறிஸ்தவர்கள் மத்தியில் காணப்பட்ட பிரிவினையை பவுல் கண்ட றிந்ததை நாம் கவனித்தோம், அங்கே சபை அங்கத்தினர்களில் சிலர், தாங்கள் பவுலைச் சேர்ந்தவர்களென்றும், அப்பொல்லோவைச் சேர்ந்தவர்களென்றும், பேதுருவைச் சேர்ந்தவர்களென்றும், கிறிஸ்துவைச் சேர்ந்தவர்களென்றும் சொல்லிக் கொண்டார்கள். அது தவறென அவர்கள் காண உதவும்படி பவுல், அவர்களைப் பார்த்து, மூன்று கேள்விகளைக் கேட்டார். கிறிஸ்து பிரிந்திருக் கிறாரா? பவுலா உங்களுக்காகச் சிலுவையிலறைப்பட்டான்? பவுலின் நாமத்தினாலேயா ஞானஸ்நானம் பெற்றீர்கள்? கடைசி யாக, பவுலின் நாமத்தினாலேயா, அப்பொல்லோவின் நாமத்தினா லேயா, பேதுருவின் நாமத்தினாலேயா யாருடைய நாமத்தில் ஞானஸ்நானம் பெற்றீர்கள் என்று கேட்டார்? நிச்சயமாகவே, கிறிஸ்து பிரிந்திருக்கவில்லையென்றும், கிறிஸ்து அவர்களுக்காக சிலுவையில் அறையப்பட்டார் என்றும், கிறிஸ்துவின் நாமத்தினா லே, ஞானஸ்நானம் பெற்றதையும் அவர்கள் அறிந்திருந்தார்கள். அது உண்மையாயிருக்க, பவுலையும், மற்றவர்களையும் பின்பற்று வது அவர்களைப் பொறுத்தவரை நியாயமற்றதாயிருந்தது. கிறிஸ்து பிரிந்திருக்கவில்லை என்பதாலும், கிறிஸ்து அவர்களுக்காக

சிலுவையிலறைப்பட்டபடியாலும், கிறிஸ்துவின் நாமத்தினாலே அவர்கள் ஞானஸ்நானம் பெற்றபடியினாலும் அவர்கள் கிறிஸ்துவை மாத்திரம்தான் பின்பற்ற வேண்டும். அப்படிச் செய்தால் தான் அவர்கள் ஒற்றுமையுடன் காணப்படுவார்கள். கொரிந்து சபையில் ஏற்பட்ட சூழ்நிலையினால், அநேகர் தன்னைப் பின்பற்றிவிடாதபடி நல்லவேளை நான் அநேகருக்கு ஞானஸ்நானம் கொடுக்கவில்லை என்று சொல்கிறார். ஆயினும், தான் கிறிஸ்புக்கும், காயுவுக்கும், ஸ்தேவானுடைய வீட்டாருக்கும் ஞானஸ்நானம் கொடுத்ததாகக் கூறுகிறார். பவுல் தொடர்ந்து, ஞானஸ்நானத்தைக் கொடுக்கும்படி கிறிஸ்து தன்னை அனுப்பவில்லையென்றும், சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவே அனுப்பினதாகவும் கூறுகிறார். பவுல், சிலருக்கு ஞானஸ்நானம் கொடுத்தேன் என்று குறிப்பிட்டிருக்கிறபடியால், ஞானஸ்நானம் அவசியமில்லையென்றோ அல்லது பவுல் ஞானஸ்நானமே கொடுக்கக்கூடாது என்றோ சொல்லவில்லை என்பதை நாம் அறிந்திருக்கிறோம். மாறாக, தான் ஞானஸ்நானம் மாத்திரம் கொடுக்க அனுப்பப்படவில்லையென்றும், சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பது தான் வந்ததின் பிரதான நோக்கம் என்றும் கூறுகிறார். அவர் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதால், யாராவது சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிய விரும்பினால், அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்க வேண்டியது சரியான ஒன்றாவே இருக்கும். ஆனால், இங்கே பவுல், முதல் காரியங்கள் முதலில் வரவேண்டும் என்று கூறுகிறார், அவ்வளவே.

நாங்கள் மேற்கோள் காட்டியிருக்கிற பலதரப்பட்ட வசனங்களிலும், கொரிந்துவில் இருந்த கிறிஸ்தவர்களுடைய காரியத்திலும், கர்த்தர் பிரிவினையில் பிரியப்படவில்லை என்றும் மாறாக, அவர் அதை எதிர்த்து கடிந்து கொள்கிறார் என்றும் நம்மால் பார்க்க முடிகிறது. அது உண்மையாயிருக்க, வேத வசனங்கள் ஒற்றுமையைப் பற்றி என்ன சொல்கிறது என்று இப்பொழுது பார்ப்போம். கொரிந்து பட்டணத்தில் உள்ள சபைக்கு நாம் மறுபடியும் செல்வோம், அங்கே இருந்த கிறிஸ்தவர்களுக்கு பவுல் இப்படியாக எழுதினார். “சகோதரரே, நீங்களெல்லாரும் ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினைகளில்லாமல் ஏகமனதும், ஏக யோசனையும் உள்ளவர்களாய்ச் சீர்பொருந்தியிருக்கவும் வேண்டுமென்று நம்மு

டைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன்" (1கொரிந்தியர் 1:10) இங்கே திட்டமாக பிரிவினை கண்டிக்கப்பட்டு ஒற்றுமை வலியுறுத்தப்படுகிறது. யோவான் பதினேழாம் அதிகாரத்தில், நம் கர்த்தர், அப்போஸ்தலர்களின் சார்பாகவும், இயேசுவை விசுவாசிக்கிறவர்களின் சார்பாகவும் பிதாவை நோக்கி ஜெபித்தார். "நான் இவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காவும் வேண்டிக்கொள்கிறேன், அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறது போல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன். நாம் ஒன்றாயிருக்கிறது போல அவர்களும் ஒன்றாயிருக்கும்படி, நீர் எனக்குத் தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன். ஒருமைப்பாட்டில் அவர்கள் தேறினவர்களாயிருக்கும்படிக்கும், என்னை நீர் அனுப்பினதையும், நீர் என்னில் அன்பாயிருக்கிறது போல, அவர்களிலும் அன்பாயிருக்கிறதையும் உலகம் அறியும்படிக்கும் நான் அவர்களிலும் நீர் என்னிலும் இருக்கும்படி வேண்டிக்கொள்கிறேன் " (யோவான் 17:20-23). இங்கே கிறிஸ்து, அப்போஸ்தலர்களுடைய வார்த்தையினால் தன்னில் விசுவாசம் வைக்கப் போகிறவர்களுக்காக ஜெபிக்கிறேன் என்பதை நாம் கவனிக்க வேண்டும். அதாவது, இங்கே வார்த்தைகளினால் என்பது, மாற்கு 16:15,16 வசனங்களில் பதிவு செய்யப்பட்டிருக்கிறபடி சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதினால், எல்லாரும் ஒன்றாயிருக்க முடியும் என்று பொருள்படும். இயல்பாகவே, எல்லா அப்போஸ்தலர்களும் ஒரே செய்தியைப் பிரசங்கித்தால், எல்லோரும் அதை விசுவாசித்தால், எல்லோரும் ஒரே காரியத்தை விசுவாசிப்பார்கள். ஒரே காரியத்தைச் செய்வார்கள், அப்பொழுது அங்கே எல்லாரும் ஒன்றாயிருப்பார்கள். மீண்டுமாக, கிறிஸ்து வானவர் தானும், பிதாவும் ஒன்றாயிருப்பது போல எல்லாரும் ஒன்றாயிருக்கும்படி ஜெபம் பண்ணினார். இது பூரண ஒருமைப்பாடாகி இருக்கும். அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கும் படி இயேசு ஜெபம் பண்ணினதற்கான மற்றொரு காரணம், பிதா தன்னை அனுப்பினதை இந்த உலகம் விசுவாசிக்க வேண்டுமென்பதற்காக.


விசுவாசிகள் எல்லாரும் பிரிந்து ஒருவரையொருவர் எதிர்த்தால், அது தீங்கைத்தான் விளைவிக்கும். அப்போது உலகம் அவர்களைப் பார்த்து சிரிக்கும். ஒற்றுமையானது நன்மையை உண்டாக்கக்கூடிய அபாரசக்தியாக இருக்கிறது. அதேவேளையில், பிரிவினையானது அழிவை ஏற்படுத்தக்கூடியதாய் இருக்கிறது.

எபேசியர் 4:1-6 வசனங்களில், அப்போஸ்தலனாகிய பவுல் ஒற்றுமைக்கான அடித்தளத்தை அமைக்கிறார். *" ஆதலால், கர்த்தர் நிமித்தம் கட்டுண்டவனாகிய நான் உங்களுக்குச் சொல்கிற புத்தியென்னவெனில், நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திர வான்களாய் நடந்து, மிகுந்த மனத் தாழ்மையும், சாந்தமும், நீடிய பொறுமையும் உடையவர்களாய், அன்பினால் ஒருவரை யொருவர் தாங்கி, சமாதானக் கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக் கொள்வதற்கு ஜாக்கிரதையாயிருங்கள். உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டது போல, ஒரே சரீரமும், ஒரே ஆவியும் உண்டு; ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும், எல்லாருக்கும் ஒரே தேவ னும் பிதாவும் உண்டு; அவர் எல்லார் மேலும், எல்லோரோடும் உங்கள் எல்லாருக்குளும் இருக்கிறவர் "* . இங்கே, ஒரே சரீரம் அல்லது ஒரே சபை, ஒரே நம்பிக்கை போன்றவற்றை அடிப்படை யாக வைத்து, பவுல் ஒற்றுமைக்காக வேண்டுகோள் விடுப்பதை கவனியுங்கள். வேறு விதமாகச் சொன்னால், நமக்கு ஒரே தேவன் அல்லது பிதா உண்டு. அவர் தம்முடைய சித்தத்தை பரிசுத்த ஆவியானவர் மூலமாக நமக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். அதைப் போலவே, நமக்கு ஒரே கர்த்தர் உண்டு. நாமெல்லாரும் ஒரே உபதேசத்தை விசுவாசித்து, தண்ணீரில் அடக்கம் பண்ணப்படு தலைக் குறிக்கும் ஞானஸ்நானத்தில் கர்த்தருக்கு கீழ்ப்படிந்ததால், சபையாகிய ஒரே சரீரத்தில் நம் எல்லோரையும் சேர்த்துக் கொள்கி றார். அந்த சபையில், நம் எல்லோருக்கும் நித்திய ஜீவனைப்பற்றிய நம்பிக்கை உண்டு. என் நண்பர்களே, நாமெல்லாரும் ஒரே கர்த்தரை விசுவாசித்து, அவருக்குக் கீழ்ப்படிந்தால் நாம் எப்படி பிரிந்திருக்க முடியும்? அது நம்மைப் பிரிக்காது. மாறாக, நம்மை இணைக்கும். முன்பொரு காலத்தில் சங்கீதக்காரனாகிய தாவீது இப்படிச் சொன்னார். *"இதோ சகோதரர் ஒருமித்து வாசம் பண்ணுகிறது*

எத்தனை நன்மையும், எத்தனை இன்பமுமானது?" (சங்கீதம் 133:1) என்று.

என் நண்பர்களே, இன்று மத உலகில், நாங்களும் கிறிஸ்து வைப் பின்பற்றுகிறோம் என்று சொல்லிக் கொள்ளுகிறவர்கள் மத்தியில் பிரிவினைகள் அதிகமாகக் காணப்படுகிறது. இது மிகுந்த துக்கத்தையும், வேதனையையும் அளிக்கிறது. இந்நிலைக்காக கிறிஸ்துவையும், அவருடைய உபதேசத்தையும் குற்றஞ்சாட்டக் கூடாது. மாறாக, மனிதன் தான் இதற்குப் பொறுப்பாளி. ஏனென் றால், கர்த்தர் எதைச் செய்யும்படியாக கேட்டுக் கொண்டாரோ அதை மாத்திரம் செய்வதற்கு அநேகருக்கு விருப்பமில்லை. இந்த பிரிவினை நிலை உங்களையும் வஞ்சிக்க நீங்கள் தயவு செய்து இட மளித்து விட வேண்டாம். சத்தியத்தை அறிந்து கொள்ளும்படி இயேசுவிடமும், அவருடைய வார்த்தைகளிடமும் செல்லுங்கள். அதை விசுவாசித்து, அதற்குக் கீழ்ப்படியும் போது, நீங்கள் இரட்சிக் கப்பட்டு, வேதத்தில் நாம் வாசிக்கிற கர்த்தருடைய சபையாகிய ஒரே சபையில் கர்த்தரால் சேர்க்கப்படுவீர்கள். அப்போது கர்த்த ருக்கு உண்மையாகக் கீழ்ப்படிந்தவர்களோடு நீங்களும் இணைக் கப்படுவீர்கள். ஆம், கிறிஸ்து எவ்வகையான ஒற்றுமைக்காக ஜெபித்தாரோ அதே ஒற்றுமை இப்போதும் சாத்தியமே. நாம் இரட்சிக்கப்பட்டு பரலோகம் போக வேண்டுமென்றால், இதற்கு குறைவான எதிலும் நாம் திருப்திபட்டு விடக் கூடாது.

நீங்கள் ஒரு கிறிஸ்தவரா? கிறிஸ்துவின் சபையில் அங்கத்தி னரா? இல்லையென்றால், நீங்கள் ஒரு கிறிஸ்தவராக மாறும்படி நாங்கள் ஜெபிக்கிறோம். நீங்கள் கிறிஸ்துவை விசுவாசித்து, உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, கிறிஸ்துவில் உள்ள உங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்து, பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ் நானம் பெறுவதினால், நீங்கள் ஒரு கிறிஸ்தவராக முடியும். நீங்கள் கிறிஸ்துவில் ஒன்றாயிருக்கும்படி கர்த்தர் உங்களை இரட்சித்து சபையிலே சேர்த்துக் கொள்வார். நீங்கள் அவருக்கு கீழ்ப்படியும் போது, உங்களை எந்த சபையில் சேர்க்க வேண்டும் என்பதை அவர் அறிந்திருக்கிறார். அந்த சபை தான் கிறிஸ்துவுக்குச் சொந்தமான ஒரே ஒரு சபை.



## பாடம் - 15

# ஏன் கிறிஸ்து சிலுவையில் மரித்தார்?

ஆதியில் தேவன் ஆணையும், பெண்ணையும் உண்டாக்கினபோது, அவர்கள் பூரணமாகவும், பாவமில்லாதவர்களாகவும் இருந்தனர். ஆனால், அவர்கள் நீண்ட காலத்திற்கு அந்தத் தூயநிலையில் இருக்கவில்லை. சீக்கிரமாகவே அவர்கள் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் போய், ஆவிக்குரிய பிரகாரமாய் மரித்து பாவத்தின் விளைவுகளை அனுபவிக்கும்படியாக அந்த அழகான ஏதேன் தோட்டத்திலிருந்து விரட்டியடிக்கப்பட்டார்கள். பாவத்தின் விளைவால் தான் மனிதன் புசிப்பதற்கும், பிழைப்பதற்கும் தன் நெற்றி வியர்வையை சிந்த வேண்டிய தாயிருக்கிறது. அதுபோலவே, ஒரு பெண், பிள்ளைப் பேற்றின் போது மிகுந்த வேதனையை அனுபவிக்க வேண்டியதாயிருக்கிறது; அத்தோடு, அவர்கள் சரீரமரணத்தையும் சந்திக்க வேண்டிய தாயிற்று. (ஆதியாகமம் 1-3). பாவம், தேவனுக் கும், மனிதனுக்கும் இடையில் வந்த படியால் இப்போது மனிதன் தேவனுடைய சத்துருவாகி விட்டான்.

மனிதன் தன் பழைய நிலைக்கு திரும்பிப் போக முடியாமற் போனதினாலும், மிருக பலிகள் அவன் பாவங்களை நிரந்தரமாக எடுத்துப் போட முடியாமற் போனதினாலும், தேவன் தம்முடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை உலகத்தின் பாவத்திற்காக பூரண பலியாகவும், மனிதன் தேவனிடம் திரும்பும்படியாக, மனித னுக்கும், தேவனுக்கும் இடையில் மத்தியஸ்தராக இருக்கும்படி யாகவும் அனுப்பி வைத்தார் (எபிரெயர் 10:4; ஆதி. 3:15). எனவே, ஏற்ற காலத்தில் தேவன் தம்முடைய குமாரனை உலகத்திற்கு அனுப்பி கன்னி மரியாளிடம் பிறக்கும்படி செய்தார். தேவ தூதன் மரியாளுக்கு நிச்சயிக்கப்பட்டிருந்த யோசேப்புக்கு தரிசனமாகி, "அவள் ஒரு குமாரனைப்பெறுவாள். அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக; ஏனெனில், அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்" என்றான் (மத்தேயு 1:21).

வேதவசனங்களில் வாக்குத்தத்தம் செய்யப்பட்டிருக்கிறபடியும், தீர்க்கதரிசனங்களில் முன்னுரைக்கப்பட்டபடியும் இயேசு இந்த உலகத் திற்கு வந்தார் என்று நமக்கு சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், ஆச்சரியவிதமாக, தேவன் அவரை நமக்காக மரிக்கும்படியாக அனுப்பிக் கொடுத்தார். நாம் இப்படியாக வாசிக்கிறோம். *"தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார். உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல் அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார்"* (யோவான் 3:16,17). தேவன் தமது குமாரனை மரிப்பதற்கு மட்டும் அனுப்பாமல் பாவங்களுக்காகவும், தேவ பக்தியற்றவர்களுக்காகவும், துன்மார்க்கருக்காகவும் மரிக்கும்படியாக அனுப்பி வைத்தார். பவுல் இப்படிச் சொன்னார், *"அன்றியும் நாம் பெலனற்றவர்களாயிருக்கும் போதே, குறித்த காலத்தில் கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார். நீதிமானுக்காக ஒருவன் மரிக்கிறது அரிது; நல்லவனுக்காக ஒரு வேளை ஒருவன் மரிக்கத் துணிவான். நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணுகிறார். இப்படி நாம் அவருடைய இரத்தத் தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்க லாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே"* (ரோமர் 5:6-9). கிறிஸ்து தமது சீடர்களிடம் இப்படிச் சொன்னார். *" நான் உங்களில் அன்பாயிருக்கிறது போல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்பதே என்னுடைய கற்பனையாயிருக்கிறது. ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக் கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை. நான் உங்களுக்குக் கற்பிக்கிற யாவையும் நீங்கள் செய்வீர்களானால், என் சிநேகிதராயிருப்பீர்கள்"* (யோவான் 15:12-14) என்று. யோவான் *"தம்முடைய ஒரே பேறான குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்குத் தேவன் அவரை இவ்வுலகத்திலே அனுப்பினதினால் தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது. நாம் தேவனிடத்தில் அன்பு கூர்ந்ததினால் அல்ல அவர்*

*நம்மிடத்தில் அன்புகூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதார பலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பின தினாலே அன்பு உண்டாயிருக்கிறது"* என்று (I யோவான் 4:9,10).

கிறிஸ்து இந்த உலகத்தில் இருந்தபோது அவர் நன்மை செய்கிறவராகச் சுற்றித் திரிந்தார். வியாதிகளை சுகப்படுத்தினார், குருடர்கள் பார்வையடையும்படி செய்தார், மரித்தோரை உயிரோடு எழுப்பினார், தான் தேவனிடத்திலிருந்து அனுப்பப்பட்டவர் என்ப தை நிரூபிக்கும்படி அநேக அற்புத அடையாளங்களைச் செய்தார். யோவான் அப்போஸ்தலன் இப்படி எழுதியுள்ளார். *" இந்தப் புஸ்தகத் தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீஷருக்கு முன் பாகச் செய்தார். இயேசு தேவனுடைய குமார னாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும் விசுவா சித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும் படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது "* (யோவான் *20:30,31).*

இயேசு தெய்வீகம் நிறைந்த ஒரு நல்ல மனிதராக இருந்தார்; அவர் பாவமில்லாதவராக இருந்தார். பவுல் கிறிஸ்துவைப் பற்றி இப்படிச் சொல்கிறார். *" நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும் படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார் " (II கொரிந்தியர். 5:21). "அவர் பாவஞ் செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை"* என்று பேதுரு கூறியுள் ளார். (I பேதுரு *2:22).*

ஆயினும், நன்மை செய்கிறவராக இந்த உலகத்தில் சுற்றித் திரிந்த இந்த நல்ல மனிதர், பாவமில்லாத இந்த நல்ல மனிதர், தேவனுடைய குமாரனாகிய இவர், இந்த உலகத்தின் பாவங்களுக் காக சிலுவையில் மரித்தார். பவுல் சொன்னார். *"அவர் மனுஷ ரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது, சிலுவையின் மரண பரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத் தாமே தாழ்த் தினார்" (பிலிப்பியர் 2:8)* என்று. பேதுரு இப்படியாக அறிவித்தார், *" இதற் காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில், கிறிஸ்து வும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடு களைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப்*

பின்வைத்துப் போனார். அவர் பாவஞ் செய்யவில்லை. அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை; அவர் வையப்படும் போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாய மாய்த் தீர்ப்புச் செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார். நாம் பாவங் களுக்காகச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும் படிக்கு அவர் தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவை யின்மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானீர்கள் " (1பேதுரு 2:21-24). வேத வாக்கியங்களின்படி நம்முடைய பாவங் களுக்காக கிறிஸ்து மரித்தார் என்று பவுல் சொன்னார் (I கொரிந்தியர் 15:3).

ஆனால், கிறிஸ்து ஏன் சிலுவையில் அறையப்பட்டார்? அதாவது, ஒரு நல்ல மனிதரைக் கொலை செய்ய யார் விரும்புவர்? அவர் மனிதனை இரட்சிக்க வந்திருந்தாலும், பாவ மனிதனின் காரியங்களைச் சரி செய்ய வேண்டியதாயிருந்தது. தேவனுடைய பிரதிநிதிகளைப் போலிருந்த ஆசாரியர்கள், வேத பாரகர்கள், பரிசே யர்கள், சதுசேயர்கள் போன்றோர் மனித உபதேசங்களுக்கும், கற்பனைகளுக்கும் பின் சென்றபடியால், அவர்கள் பொறாமையி னாலும், துன்மார்க்கத்தினாலும் நிறைந்து காணப்பட்டார்கள். "அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமான வர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை" என்று நமக்குச் சொல் லப்பட்டிருக்கிறது (யோவான் 1:11). இயேசு சொன்னார் "அப்படி யிருந்தும் உங்களுக்கு ஜீவன் உண்டாகும்படி என்னிடத்தில் வர உங்களுக்கு மனதில்லை" (யோவான் 5:40).

கர்த்தருடைய சபை ஸ்தாபிக்கப்பட்ட பெந்தெகொஸ்தே நாளில் திரளாகக் கூடியிருந்த யூதர்களிடத்தில் பேதுரு இப்படியாகப் பேசினார். "இஸ்ரவேலரே, நான் சொல்லும் வார்த்தைகளைக் கேளுங்கள்; நீங்கள் அறிந்திருக்கிறபடி நசரேயனாகிய இயேசுவைக் கொண்டு தேவன் உங்களுக்குள்ளே பலத்த செய்கைகளையும், அற்புதங்களையும், அடையாளங்களையும் நடப்பித்து, அவைகளி னாலே அவரை உங்களுக்கு வெளிப்படுத்தினார். அப்படியிருந்தும், தேவன் நிர்ணயத்திருந்த ஆலோசனையின்படியேயும், அவரு டைய முன்னறிவின்படியேயும், ஒப்புக்கொடுக்கப்பட்ட அந்த

இயேசுவை நீங்கள் பிடித்து அக்கிரமக்காரருடைய கைகளினாலே சிலுவையில் ஆணி யடித்துக் கொலை செய்தீர்கள். தேவன் அவருடைய மரண உபாதைகளின் கட்டை அவிழ்த்து, அவரை எழுப்பினார்; அவர் மரணத்தினால் கட்டப்பட்டிருக்கக் கூடாதிருந்தது" (அப்போஸ்தலர். 2:22-24). பிலாத்துவினால் விசாரிக்கப்படும்படி இயேசு கொண்டு வரப்பட்டபோது, பொறாமையினாலே பிரதான ஆசாரியர்கள் அவரை ஒப்புக்கொடுத்தார்களென்று பிலாத்து அறிந்து கொண்டான் (மாற்கு 15:9). இப்படியாக, கிறிஸ்துவுக்கு அநியாயமான தீர்ப்பு வழங்கப்பட்டு சிலுவையில் அறையப்பட்டார். அக்கிரமக்காரரால் அவர் அடிக்கப்பட்டு, பரியாசம் செய்யப்பட்டு கோரக்குருசில் ஆணிகளால் கடாவப்பட்டு, இரண்டு கள்ளர்கள் மத்தியில் தொங்க விட்டு, அப்படியே மரிக்கும்படி அவர் அங்கேயே விடப்பட்டார். பின்பு அவரை சிலுவையிலிருந்து இறக்கித் துணிகளால் சுற்றி, ஒரு கல்லறையிலே அடக்கம் பண்ணி, அதன் வாயிலில் ஒரு பெரிய கல்லைப் புரட்டி வந்து வைத்தார்கள். தான் மரித்தால் மூன்று நாட்கள் கழித்து தான் உயிரோடு எழுவேன் என்று இயேசு வாக்களித்திருந்தார் (யோவான் 14:10) அதன்படி, மூன்று நாட்கள் கழித்து உயிர்த்தெழுந்த கர்த்தராக கல்லறையிலிருந்து இயேசு வெளியே வந்தார். (யோவான் 14:10) மூன்றாம் நாள் காலையில், ஸ்திரீகள் அவருடைய கல்லறையைக் காண வந்தபோது, தேவதூதன் அவர்களுக்கு முன்பாகத் தோன்றி இப்படிச் சொன்னார். அவர் இங்கே இல்லை; தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார்; கர்த்தரை வைத்த இடத்தை வந்து பாருங்கள் என்று (மத்தேயு 28:6). அதன்பின்பு, சீடர்களுக்கு முன்பாகவும், ஐந்நூறுபேருக்கு அதிகமான சகோதரருக்கும் தரிசனமாகி பிறகு, ராஜாதி ராஜாவாகவும், கர்த்தாதி கர்த்தராகவும் அரசாட்சி செய்யும்படி பரலோகத்தில் இருக்கிற பிதாவினிடத்திற்கு ஏறிச் சென்றார் (1கொரி. 15:18; அப். 1:1-11) இன்றளவும் அவர் பரலோகத்தில் தான் இருக்கிறார்.

இப்போது, மீண்டும் அதே கேள்விதான், சிலுவையில் - கிறிஸ்து ஏன் மரித்தார்? அவர் மரித்ததற்கு அநேகக் காரணங்கள் இருந்தாலும், நிச்சயமாகவே அவைகளில் பிரதான காரணம், மனிதன் இரட்சிக்கப்படும்படியாகத்தான். அத்தோடு, கிறிஸ்து

தம்முடைய மரணத்தைக் குறித்து உரைக்கப்பட்ட தீர்க்க தரிசனங்கள் நிறைவேறும்படியாகவும் சிலுவையில் மரித்தார் (ஏசாயா 53; அப்.8). பழைய பிரமாணத்தை எடுத்துப் போட்டு, புதிய பிரமாணத்தைத் தரும்படியாக மரித்தார் (கொலோ. 2:14; யோவான் 1:17; மத்தேயு 26:28). தம் இரத்தஞ்சிந்துதலினால் மனிதனுக்குப் பாவ மன்னிப்பு உண்டாகும்படி மரித்தார் (எபேசியர் 1:7; அப்போஸ்தலர். 22:16). சபை ஸ்தாபிக்கப்படும்படியாக அவர் மரித்தார் (எபேசியர் 5:25), இரட்சிக்கப்பட்டவர்களுக்கு நித்திய ஜீவனின் நம்பிக்கையைக் கொடுக்கும்படி கிறிஸ்து சிலுவையில் மரித்தார். (II தெசலோனிக்கேயர். 2:16).

உலகத்தை இரட்சிக்கும்படியாக கிறிஸ்து சிலுவையில் மரித்த போதிலும், நம்மைச் சுற்றிலும் இருக்கின்ற பெரும்பாலான மக்கள் இழந்து போன நிலையில் தான் இருக்கிறார்கள். ஏன்? இதற்கு அநேக காரணங்கள் உண்டு. பெரும்பாலோர் தேவனுடைய சித்தத்தைக் குறித்து அறியாமல் இருக்கிறார்கள். தான் கிறிஸ்தவனா வதற்கு முன்பு அறியாமையால் தான், சபையைத் துன்பப்படுத்தி யதாக பவுல் கூறியுள்ளார் (I தீமோத்தேயு. 1:13). சிலர் ஒழுக்கமுள்ள வாழ்க்கை தங்களை இரட்சிக்கும் என தங்கள் பேரில் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். ஆனால், கொர்நேலியும், அவன் வீட்டாரும் நல்லவர்கள் தான், ஆனாலும் அவர்கள் இரட்சிக்கப்பட கர்த்தருக் குக் கீழ்ப்படிவது அவர்களுக்கு அவசியமாயிருந்தது (அப்போஸ் தலர் 10-ம் அதிகாரம்). சிலர் தேவனால் புகழப்படுவதைக் காட்டி லும், மனுஷரால் புகழப்படுவதை அதிகமாக விரும்புகிறார்கள். கிறிஸ்துவானவர் தன்னை விசுவாசிப்பதால் மதத் தலைவர்களால் தாங்கள் நிராகரிக்கப்படுவோமோ என்று பயந்து தன்னை அறிக்கை செய்யாத சிலரைப் பற்றி பேசியிருக்கிறார். பின்பு, அவர்கள் ஏன் தன்னை அறிக்கை செய்யமாட்டார்கள் என்று விளக்கமளித்தார். "அவர்கள் தேவனால் வருகிற மகிமையிலும் மனுஷரால் வருகிற மகிமையை அதிக மாய் விரும்பினார்கள்" (யோவான் 12:43) என்று. ஆம், இதுபோன்று நம்முடைய நாட்களிலும் அநேகர் இருக்கிறார்கள். இன்னும் அநேகர், மத சம்மந்தமான காரியங்களில் வஞ்சிக்கப்படுகிறார்கள். யோவான் இப்படிப்பட்ட நிலைகுறித்து எழுதியுள்ளார். "பிரியமானவர்களே, உலகத்தில் அநேக கள்ளத் தீர்க்கதரிசிகள்

தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள்" (1யோவான். 4:1). இன்றும் அநேகக் கள்ளத் தீர்க்கதரிசிகள் இருக்கிறபடியால், அநேகர் தவறான பக்திப் பாதையில் வழி நடத்தப்படுகிறார்கள். கடைசியாக, வேறு அநேகர் உலகத்தில் அன்பு கூர்ந்து, மாம்சத்தின் கிரியைகளை அனுபவிக்கிறார்கள். ஆனால், இதில் இருக்கிற ஒரே பிரச்சனை என்னவென்றால், உலகத்திலும், " உலகத்திலுள்ளவைகளிலும் அன்பு கூராதிருங்கள் என்று கர்த்தர் சொல்லியிருக்கிறார் " (1யோவான் 2:15) மாம்சத்தின் கிரியைகள் நம்மை மரணத்திற்கு வழிநடத்துகிறது (கலாத்தியர் 5; ரோமர் 6:23).

என் நண்பர்களே, நீங்கள் இரட்சிக்கப்படும்படி கிறிஸ்து உங்களுக்காக மரித்தார் என்று உங்களுக்குத் தெரியுமா? நீங்கள் இரட்சிக்கப்படுவதற்கு ஒரே வழியாகவும், உங்களுக்கு நம்பிக்கையை தரக்கூடிய ஒரே ஒருவராகவும் இயேசு இருக்கிறபடியால் நீங்கள் அவரை நிராகரிக்கவோ, மறுக்கவோ வேண்டாம். நீங்கள் அவரை விசுவாசித்து, உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, அவரை தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட்டு, பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெறும்போது, அவர் உங்களை இரட்சித்துத் தம்மு டைய சபையில் சேர்த்துக்கொள்வார். நீங்கள் அவரிடத்தில் உண்மையுள்ளவர்களாயிருந்தால், ஒரு நாளில், பரலோகத்தில் உங்களுக்கு ஒரு நித்தியமான வீட்டைத் தருவார். (மாற்கு 16:16; மத்தேயு 10:32; அப். 2:38,47; வெளி. 2:10).

## பாடம் - 16

# ஏன் நாங்கள் கிறிஸ்து கல்லறையிலிருந்து எழுந்தார் என்று விசுவாசிக்கிறோம்?

*ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் வாழ்ந்து, சிலுவையில் மரித்தார் என்கின்ற உண்மையை நிச்சயமாகவே நாமெல்லாரும் அறிந்திருக்கிறோம். அதுவே, அவருடைய முடிவாக இருந்திருந்தால் எப்பொழுதோ அவர் மறக்கப்பட்டி ருப்பார். ஆனால், இன்றும் அவர் ஆயிரக்கணக்கான, லட்சக்கணக்கான இருதயங்களிலும், ஜீவியங்களிலும் வாழ்ந்து கொண்டிருக்கிறார். ஏன்? இயேசு அந்தக் கோரக்குருசில் அறையப்பட்டு, அடக்கம் பண்ணப்பட்டு, மூன்று நாட்களுக்குப் பிறகு கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்த காரணத்தினால் தான். ஆகையால்தான், நாங்கள் இன்றும் கிறிஸ்து மரித்ததோடல்லாமல் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார் என்று பறைசாற்றுகிறோம். இவ்வுண்மையினடிப்படையில், நாம் எபிரெய எழுத்தாளரோடு சேர்ந்து, " இயேசு கிறிஸ்து நேற்றும், இன்றும், என்றும் மாறாதவராயிருக்கிறார் " என்று சொல்ல முடியும் (எபிரெயர் 13:8).*

*கிறிஸ்து உயிரோடிருக்கும்போதே, தான் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுவதாக வாக்கு செய்திருக்கிறார். இயேசு யூதர்களைப் பார்த்து, இந்த ஆலயத்தை இடித்துப் போடுங்கள்; மூன்று நாளைக்குள்ளே இதை எழுப்பு வேன் என்று சொன்னார். ஆனால், யூதர்கள், இயேசு எருசலேம் தேவாலய கட்டிடத்தைப் பற்றித்தான் பேசுகிறார் என்று நினைத்து, இயேசுவைப் பார்த்து, இந்த ஆலயத்தைக் கட்ட நாற்பத்தாறு வருஷம் சென்றதே, நீர் இதை மூன்று நாளைக்குள்ளே எழுப்புவீரோ என்றார்கள் (யோவான் 2:19-21). மறுபடியுமாக, " அது முதல் இயேசு, தாம் எருசலேமுக்குப் போய் மூப்பராலும், பிரதான ஆசாரியராலும், வேதபாரகராலும் பல பாடுகள்பட்டு, கொலையுண்டு மூன்றாம் நாளில் எழுந்திருக்க வேண்டும் என்பதைத் தம்மு*

டைய சீடர்களுக்குச் சொல்லத் தொடங்கினார்" என்று விசுவாசிக்கிறோம். (மத்தேயு. 16:31). அந்நேரத்தில் சீடர்களுக்கு இயேசு சொன்னவைகளின் முக்கியத்துவம் புரியவில்லை. ஆனால், ஒரு நாள் வந்தது. அதில் உயிர்த்தெழுந்த இயேசுவை கண்ணாரக் கண்ட போது, இயேசு சொன்னவைகளை நினைவு கூர்ந்து அதைப் புரிந்து கொண்டார்கள்.

கிறிஸ்து அநியாயமாய் விசாரிக்கப்பட்டு, சிலுவையில் அறையப்பட்டு, மிகுந்த வேதனையுள்ள மரணத்தை சந்தித்ததற்குப் பிறகு, வேத வசனம் இப்படியாகச் சொல்கிறது. " சாயங்காலமான போது, இயேசுவுக்குச் சீஷனும், ஐசுவரியவானுமாயிருந்த யோ சேப்பு என்னும் பேர் கொண்ட அரிமத்தியா ஊரானாகிய ஒரு மனு ஷன் வந்து, பிலாத்துவினிடத்தில் போய், இயேசுவின் சரீரத்தைக் கேட்டான். அப்பொழுது, சரீரத்தைக் கொடுக்கும்படி பிலாத்து கட்டளையிட்டான். யோசேப்பு அந்த சரீரத்தை எடுத்து, துய்யதான மெல்லிய துப்பட்டியிலே சுற்றி, தான் கன்மலையில் வெட்டியிருந்த தன்னுடைய புதிய கல்லறையிலே அதை வைத்து, கல்லறையின் வாசலில் ஒரு பெரிய கல்லைப் புரட்டி மரியாளும், மற்ற மரியாளும் கல்லறைக்கு எதிராக உட்கார்ந்திருந்தார்கள்" (மத்தேயு 27;57-61). அந்தச் சமயத்தில், இயேசு இத்தோடு முடிந்தார் என்பது போல் தெரிந்தது. சீடர்கள் கூட, ஒருவேளை அவர்கள் அதிர்ச்சியில் இருந்திருந்தாலும், இயேசுவுக்கு முடிவு வந்துவிட்டது என்பதை ஏற்றுக் கொண்டது போல் தெரிகிறது. எப்படியெனில், அவரவர் தங்கள் வீடுகளுக்கும், விட்டு வந்த தொழிலுக்கும் திரும்பிச் செல்ல நினைக்கத் தொடங்கி விட்டார்கள். இது ஒரு பக்கம் இருந்தபோதிலும், இயேசுவின் சத்துருக்கள் இயேசு கல்லறையிலிருந்து உயிர்த்தெழுவதாகச் சொன்ன வார்த்தைகளை மறக்கவில்லை. எனவே, நாம் இப்படி வாசிக்கிறோம். "ஆயத்த நாளுக்குப் பின்னான மறுநாளிலே பிரதான ஆசாரியரும், பரிசேயரும் பிலாத்துவினிடத்தில் கூடிவந்து; ஆண்டவனே, அந்த எத்தன் உயிரோடிருக்கும் போது, மூன்று நாளைக்குப் பின் எழுந்திருப்பேன் என்று சொன்னது எங்களுக்கு ஞாபகமிருக்கிறது. ஆகையால், அவனுடைய சீஷர்கள் இராத்திரியிலே வந்து, அவனைக் களவாய் கொண்டு போய், மரித்தோரிலிருந்து எழுந்தானென்று ஜனங்களுக்குச் சொல்லாத

படிக்கும், முந்தின எத்தைப் பார்க்கிலும் பிந்தின எத்து கொடிதாகாத படிக்கும், நீர் மூன்று நாள் வரைக்கும் கல்லறையைப் பத்திரப்ப டுத்தும்படி கட்டளையிட வேண்டும் என்றார்கள். அதற்குப் பிலாத்து; உங்களுக்குக் காவல் சேவகர் உண்டே; போய், உங்களால் கூடிய மட்டும் பத்திரப்படுத்திக் கொள்ளுங்கள் என்றான். அவர்கள் போய்க் கல்லுக்கு முத்திரை போட்டு, காவல் வைத்து, கல்லறை யைப் பத்திரப்படுத் தினார்கள் " (மத்தேயு 27:62-66).

இதற்கு முந்தின வசனப்பகுதியில், அவர்கள், கிறிஸ்து உண்மையாகவே கல்லறையிலிருந்து உயிரோடு வருவார் என்பதை விசுவாசிக்கவில்லை என்பதை தயவு செய்து கவனியுங்கள். ஆனால், சீஷர்கள் வந்து இயேசுவின் உடலைத் திருடிக் கொண்டு போய், அதன் விளைவாக இயேசுவின் புகழ் முன்பு இருந்ததை விட அதிகமாகிவிடும் என்று பயந்தார்கள். அப்படி நடக்காதபடி நிச்சயப் படுத்த, அவர்கள் கல்லறைக்குச் சென்று அது ஒழுங்காக முத்திரை போடப்பட்டிருக்கிறதா என்பதை உறுதி செய்துவிட்டு, அங்கே இரண்டு மனுஷரைக் காவல் போட்டார்கள்.

நாம் தொடர்ந்து வாசிக்கும்போது, வேத வசனம் இப்படிச் சொல்கிறது. "ஓய்வு நாள் முடிந்து வாரத்தின் முதலாம் நாள் விடிந்து வருகையில், மகதலேனா மரியாளும் மற்ற மரியாளும் கல்லறை யைப் பார்க்க வந்தார்கள். அப்பொழுது, பூமி மிகவும் அதிரும்படி, கர்த்தருடைய தூதன் வானத்திலிருந்து இறங்கி வந்து, வாசலில் இருந்த கல்லைப் புரட்டித் தள்ளி, அதின்மேல் உட்கார்ந்தான். அவனுடைய ரூபம் மின்னல் போலவும், அவனுடைய வஸ்திரம் உறைந்த மழையைப் போல வெண்மையாகவும் இருந்தது. காவலாளர் அவனுக்குப் பயந்ததினால் திடுக்கிட்டுச் செத்தவர்கள் போலா னார்கள். தூதன் அந்த ஸ்திரீகளை நோக்கி; நீங்கள் பயப்படாதிருங்கள் சிலுவையில் அறையப்பட்ட இயேசுவைத் தேடுகிறீர்கள் என்று அறிவேன். அவர் இங்கே இல்லை; தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார்; கர்த்தரை வைத்த இடத்தை வந்து பாருங்கள்; சீரக்கிரமாய்ப் போய், அவர் மரித்தோரி லிருந்து எழுந்தார் என்று அவருடைய சீஷர்களுக்குச் சொல்லுங்கள். அவர் உங்களுக்கு முன்னே கலிலேயாவுக்குப் போகிறார்; அங்கே அவரைக் காண்பீர்கள்; இதோ, உங்களுக்குச் சொன்னேன் என்றான்.

அவர்கள் பயத்தோடும், மகா சந்தோஷத்தோடும் கல்லறையை விட்டுச்சீக்கிரமாய்ப் புறப்பட்டு, அவருடைய சீஷர்களுக்கு அறிவிக்க ஓடினார்கள். அவர்கள் அவருடைய சீஷர்களுக்கு அறிவிக்கப் போகிறபோது, இயேசு தாமே அவர்களுக்கு எதிர்ப் பட்டு; வாழ்க என்றார். அவர்கள் கிட்ட வந்து, அவர் பாதங்களைத் தழுவி, அவரைப் பணிந்து கொண்டார்கள். அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி; பயப்படாதிருங்கள்; நீங்கள் போய், என் சகோதரர் கலிலேயாவுக்குப் போகும்படி அவர்களுக்குச் சொல்லுங்கள்; அங்கே அவர்கள் என்னைக் காண்பார்கள்" என்றார் (மத்தேயு 28:1- 10). இது இயேசு வின் சீஷர்கள் அவருடைய உடலைத் திருடிக் கொண்டு போக ஏற்கனவே திட்டமிட்டிருந்தபடி தெரிகிறதா? இல்லை. மாறாக, அவர்களும் காவல் சேவகரைப் போல ஆச்சரியந்தான் அடைந்தார் கள். அப்போஸ்தலர்களில் சிலர் இதை ஆரம்பத்தில் சந்தேகப்படக் கூடச் செய்தார்கள்.

மேலும் நாம் வாசிக்கும்போது, அந்தக் காவற் சேவகர்கள் இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப் பிறகு என்ன செய்தார்கள் என்று பார்க்கலாம். அவர்கள் போகையில் காவல் சேவகரில் சிலர் நகரத்துக்குள்ளே வந்து, நடந்த யாவற்றையும் பிரதான ஆசாரிய ருக்கு அறிவித்தார்கள். இவர்கள் மூப்பரோ டே கூடிவந்து, ஆலோசனை பண்ணி, சேவகருக்கு வேண்டிய பணத்தைக் கொடுத்து, நாங்கள் நித்திரை பண்ணுகையில், அவனுடைய சீடர்கள் இராத்தி ரியிலே வந்து, அவனைக் களவாய்க் கொண்டு போய்விட்டார்கள் என்று சொல்லுங்கள். இது தேசாதிபதிக்குக் கேள்வியானால் நாங்கள் அவரைச் சம்மதப்படுத்தி, உங்களைத் தப்புவிப்போம் என்றார்கள். அவர்கள் பணத்தை வாங்கிக் கொண்டு, தங்களுக்குப் போதிக்கப்பட்டபடியே செய்தார்கள். இந்தப் பேச்சு யூதர்களுக் குள்ளே இந்நாள் வரைக்கும் பிரசித்தமாயிருக்கிறது (மத்தேயு 28:11-15). இப்போது அங்கே நடந்தவற்றை சிந்தித்துப் பாருங்கள். இதற்கு முந்தின சில வசனங்களை நாம் வாசிக்கும்போது, கல்லறை யைப் பார்க்கச் சென்றவர்களுக்கு அங்கே நடந்தது என்ன என்பது நன்றாகத் தெரிந்திருந்தது. கல்லைப் புரட்டும்படி தேவதூதன் தோன்றியபோது, காவலாளர் அவனுக்குப் பயந்ததினால் திடுக் கிட்டுச் செத்தவர்கள் போலானார்கள். இவைகள் எல்லாவற்றுக்

குப் பிறகு நடந்தவைகளை பிரதான ஆசாரியர்களிடம் அறிவிக்க அவர்கள் பட்டணத்திற்கு சென்றார்கள். அவர்கள் நேர்மையோடு இயேசு உண்மையிலேயே கல்லறையிலிருந்து எழுந்ததை ஒத்துக் கொள்ள மனதில்லாமல், மூப்பர்களோடு கூடி ஆலோசனை பண்ணி, அதன டிப்படையில் காவல் சேவர்களுக்கு பெருந்தொகை லஞ்சமாக கொடுக்கப்பட்டு, அவர்கள் நித்திரை பண்ணுகையில் இயேசுவின் சீஷர்கள் இராத்திரியில் வந்து இயேசுவை திருடிக் கொண்டு போய் விட்டதாகச் சொல்லும்படி காவல் சேவகர்கள் பணிக்கப்பட்டார் கள். பொய் சொல்லும்படி அவர்களுக்கு லஞ்சம் கொடுக்கப்பட் டது. அவர் சொல்லும் காரியம் உண்மையாக நடந்திருக்குமானால் இவர்களுக்கு பணம் லஞ்சமாக கொடுத்திருக்க வேண்டிய அவசிய மில்லை. தாங்கள் தூங்கிக் கொண்டிருக்கும்போது இயேசுவின் சீடர்கள் அவரது உடலைத் திருடிக்கொண்டு போய்விட்டார்கள் என ஒப்புக் கொள்ள காவலர்களால் எப்படி முடிந்தது? அநேக வேளைகளில், வேலை நேரத்தில் காவல் சேவர்கள் தூங்கினால் அதற்காகத் தங்கள் உயிரைக் கிரயமாக கொடுக்க வேண்டிதாயி ருக்கும். அதையும் மீறி இந்த காவல் சேவர்கள் ஒப்புக் கொண்டதன் காரணம், இந்த செய்தி தேசாதிபதிக்குத் தெரிய வந்தால், நாங்கள் அவரைச் சம்மதப்படுத்தி, உங்களைத் தப்புவிப்போம் என்ற பிரதான ஆசாரியர்களும், மூப்பர்களும் உறுதியளித்து தான்.

இது விநோதமாக இருந்தபோதிலும், இன்றும் இயேசு உண்மையிலேயே சிலுவையில் மரிக்கவில்லை என்று சொல்லக் கூடியவர்கள் இருக்கத் தான் செய்கிறார்கள். எனவே, கல்லறையில் அவர் வைக்கப்பட்ட போது, இரவு வேளையில் அவர் தப்பித்து விட்டார் என்று சொல்கிறார்கள். இது நியாயமற்றது. மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் மற்றும் முழு வேதாகமமும் கிறிஸ்து கல்லறையிலிருந்து எழுந்தார் என்கின்ற உண்மைக்கு சாட்சி பகர்கின்றன. அதுமாத்திரமல்ல, இரட்சிப்பு, ஞானஸ்நானம், சபை, கர்த்தருடைய பந்தி இன்னும் ஒட்டுமொத்த கிறிஸ்தவமும், கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை அடிப்படையாகவும், மையமாக வும், வைத்துதான் காணப்படுகிறது. வேறு சிலர் இவைகளை யெல்லாம் போதிக்கும்படி வேதாகமம் மாற்றப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆனால் யார் இதை மாற்றியிருப்பார்கள்?

யூதர்கள் அல்ல. ஏனென்றால், அவர்கள் கிறிஸ்துவை விசுவாசிக்க வில்லை. வேத வசனங்கள் வெளிவந்த போது புறஜாதிகள் ஒட்டு மொத்தமாக அவிசுவாசிகளாகத்தான் காணப்பட்டார்கள். ஆக இதற்கும் வாய்ப்பில்லை. மேலுமாக, நமக்கு கிறிஸ்து பிறப்பதற்கு முன்பு, அதாவது, கி.மு. 200-ம் ஆண்டு வரை, வேத பகுதிகள், குறிப்பாக பழைய ஏற்பாட்டு வேத எழுத்துக்கள் அப்படியே இருக் கின்றன. அப்படியானால், திட்டமாகவே வேதாகமம் சத்தியத்தை, தேவனுடைய பரிசுத்த எழுத்துக்களை அடையாளப்படுத்துகிற தென்றே நமக்குக் காட்டுகிறது. அத்தோடு, கிறிஸ்து கல்லறையி லிருந்து உயிர்த்தெழுந்தார் என்பதைத் திட்டமாகவும், தெளிவாக வும் போதிக்கிறது.

பவுல் இப்படியாக எழுதுகிறார். " *அன்றியும், சகோதரரே, நான் உங்க ளுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தை மறுபடியும் உங்க ளுக்குத் தெரியப்படுத்து கிறேன்; நீங்களும் அதை ஏற்றுக் கொண்டு, அதிலே நிலைத்திருக்கிறீர்கள். நான் உங்களுக்கு பிரசங்கித்த பிரகாரமாய், நீங்கள் அதைக் கைக்கொண்டிருந்தால், அதினாலே நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள்; மற்றபடி உங்கள் விசுவாசம் விருதா வாயிருக்குமே. நான் அடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்துவானவர் வேத வாக்கி யங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப் பட்டு, வேத வாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெ ழுந்து, கேபாவுக்கும், பின்பு பன்னிருவருக்கும் தரிசனமானார். அதன்பின்பு, அவர் ஐந்நூறு பேருக்கு அதிகமான சகோதரருக்கும் ஒரே வேளையில் தரிசனமானார்; அவர்களில் அநேகர் இந்நாள் வரைக்கும் இருக்கிறார்கள், சிலர் மாத்திரம் நித்திரையடைந்தார் கள். பின்பு யாக்கோபுக்கும், அதன் பின்பு, அப்போஸ்தலரெல் லாருக்கும் தரிசன மானார். எல்லாருக்கும் பின்பு, அகாலப் பிறவி போன்ற எனக்கும் தரிசனமானார் (I கொரிந்தியர் 15:1-8).*

அப்போது பவுல் யாராக இருந்தார்? கிறிஸ்தவனாவதற்கு முன்பு அவர் சவுலாக இருந்தார். அவர் ஒரு யூதர், கமாலியேலின் பாதத்தில் கல்வி பயின்றவன், தன் மதத்தின் மேல் மிகவும் பக்தி வைராக்கியமாயிருந்த ஒரு பரிசேயன் (பிலிப். 3:4-7). பவுல் சபை யை மிகவும் துனப்பப்படுத்துகிறவராக இருந்தார். அதாவது, கர்த்தர்

அவனுக்குத் தரிசனமாகி, தான் ஒரு கிறிஸ்தவனாகும் வரை (அப்போஸ்தலர். 9:22). அதன்பின்பு, கிறிஸ்துவை உயிர்த்தெழுந்த கர்த்தரென்றும், தேவனுடைய குமாரனென்றும் பிரசங்கிக்கத் தொடங்கினார் (அப்போஸ்தலர். 9:20; 17:18). தனக்குத் தரிசனமான கிறிஸ்துவை உயிர்த்தெழுந்த கர்த்தர் தான் என்ற உண்மையை அவன் உணராதிருந்திருந்தால், இப்படி ஓர் அதிரடியாக, ஓர் அவிசுவாசியாக இருந்து விசுவாசியாகியிருக்க முடியாது.

நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? கிறிஸ்து கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்ததை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? அவர் இன்னும் ஜீவிக்கிறார் என்பதையும், ஒரு நாளில் தம்முடைய ஜனங்களாகிய சபைக்காகத் திரும்ப வருவார் என்பதையும் விசுவாசிக்கிறீர்களா? நீங்கள் இதுகாறும் ஒரு விசுவாசியாக இல்லாவிட்டால், நீங்கள் ஒவ்வொருவரும் விசுவாசியாக மாற வேண்டும் என்பது எங்கள் ஜெபமாயிருக்கிறது. நீங்கள் கிறிஸ்துவை விசுவாசித்து, உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று அறிக்கை செய்து, பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெறும்போது, கர்த்தர் உங்களை இரட்சித்து, தம்முடைய சபையில் சேர்த்துக் கொள்வார் (மாற்கு 16:16; அப். 2:47).

## பாடம் - 17

# ஏன் நாங்கள் கிறிஸ்து மீண்டும் வருவார் என விசுவாசிக்கிறோம்?

இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்றும், அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார் என்றும் நாங்கள் விசுவாசிக்கிறோம். Iகொரிந்தியர் 15 ஆம் அதிகாரத்தில், பவுல் கிறிஸ்துவின் மரணம், அடக்கம், மற்றும் உயிர்த்தெழுதலை அறிவித்து, அதன் மூலம் உயிர்த்தெழுதலுக்கான ஆதாரங்களை வெளி யிட்டிருக்கிறார். கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைக் கண்ணாரக் கண்டு சாட்சிகளாயிருந்த பலதரப்பட்ட ஜனங்களை அங்கே குறிப் பிட்டிருக்கிறார். அதன் பின்பு பவுல் சொல்லும்போது, *" கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்தாரென்று பிரசங்கிக்கப் பட்டிருக்க, மரித் தோரின் உயிர்த்தெழுதலில்லையென்று உங்களில் சிலர் எப்படிச் சொல்லலாம்? மரித்தோரின் உயிர்த் தெழுதலில்லாவிட்டால், கிறிஸ்துவும் எழுந்திருக்கவில்லையே. கிறிஸ்து எழுந்திருக்கவில்லையென்றால், எங்கள் பிரசங்கமும் விருதா, உங்கள் விசுவாசமும் விருதா. மரித்தோர் உயிர்த் தெழாவிட்டால், தேவன் எழுப்பாத கிறிஸ்துவை அவர் எழுப் பினாரென்று நாங்கள் தேவனைக் குறித்துச் சாட்சி சொன்ன தினாலே, தேவனுக்காகப் பொய்சாட்சி சொல்லுகிறவர் களாகவும் காணப்படுவோமே. மரித்தோர் உயிர்த்தெழா விட்டால், கிறிஸ்துவும் எழுந்திருக்கவில்லை. கிறிஸ்து எழுந்தி ராவிட்டால், உங்கள் விசுவாசம் வீணாயிருக்கும்; நீங்கள் இன்னும் உங்கள் பாவங்களில் இருப்பீர்கள். கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்தவர்களும் கெட்டிருப்பார்களே. இம்மைக்காக மாத்திரம் நாம் கிறிஸ்துவின் மேல் நம்பிக்கையுள்ளவர்களா யிருந்தால், எல்லா மனுஷரைப் பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக்க வர்களாயிருப் போம். கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்தெழுந்து, நித்திரை யடைந்தவர்களின் முதல் பலனானார்"* (I கொரிந்தியர். 15:12-20)

இப்போது, கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை நாங்கள் விசுவாசிக்கிறபடியால், கிறிஸ்து திரும்பவும் வருவார் என்றும் விசுவாசிக்கிறோம். தான் மறுபடியும் வருவதாக கிறிஸ்து தாமே வாக்குதத்தம் செய்துள்ளார். கிறிஸ்து இப்படிச் சொன்னார், " *உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள். என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்போகிறேன். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணின பின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்ளுவேன் " (யோவான் 14:1-3).*

பரலோகத்திலிருக்கிற தன் பிதாவினிடத்தில் கிறிஸ்து திரும்பிச் சென்ற போது வேத வசனம் இப்படிச் சொல்கிறது, " *இவைகளை அவர் சொன்னபின்பு, அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கையில் உயர எடுத்துக் கொள்ளப்பட்டார்; அவர்கள் கண்களுக்கு மறைவாக ஒரு மேகம் அவரை எடுத்துக்கொண்டது. அவர் போகிற போது அவர்கள் வானத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்கையில் இதோ வெண்மையான வஸ்திரந்தரிந்தவர்கள் இரண்டு பேர் அவர்களருகே நின்று : கலிலேயராகிய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்து நிற்கிறீர்கள்? உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப் போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார் " என்றார்கள் (அப்போஸ்தலர் 1:9-11).* இயேசு ஒரு நாள் திரும்ப வந்து எருசலேமிலே தன்னுடைய ராஜ்யத்தை ஸ்தாபித்து அங்கே நீதிமான்களோடு ஆயிரம் வருடங்கள் அரசாள்வார் என்று வாதிடுகிறவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனால், வெண்வஸ்திரந் தரிந்த இரண்டு மனுஷர் அவர்கள் தேவதூதர்களாயிருக்கிறபடியால், இயேசு எப்படி உங்கள் கண் களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார் என்று சொன்னதை நீங்கள் கவனிக்க வேண்டும். இங்கே இந்த பூமிக்கு மறுபடியும் வருவது பற்றியோ, ராஜ்யத்தை ஸ்தா

பித்து ஆயிர வருடங்கள் அரசாள்வது பற்றியோ எதுவும் சொல்லப் படவில்லை. முதலாவது, கர்த்தர் தமது ராஜ்யத்தை சீஷர்களுடைய வாழ்நாளில் ஸ்தாபிக்கப் போவதாகச் சொன்னார் (மாற்கு 9:1). இரண் டாவது, மரணம் கூட அவர் தம்முடைய சபை அல்லது ராஜ்யம் கட்டப்படுவதை தடுக்க முடியாது என்று சொன்னார் (மத்தேயு 16:18,19). மூன்றாவது, அப்போஸ்தலருடைய நடபடிகள் இரண் டாம் அதிகாரத்தில், சபை ஸ்தாபிக்கப்பட்டதையும், அதன் பிறகு தேவனுடைய ராஜ்யம் அல்லது கிறிஸ்துவின் ராஜ்யம் இருந்ததையும் நாம் வாசிக்க முடியும் (அப்போஸ்தலர் 8:12; கொலோசெயர் 1:13). எபிரெயர் 12:28 ல், நாம் தேவனுடைய ராஜ்யத்தை பெற்று விட்டதாகச் சொல்லுகிறார். கடைசியாக, வேதவசனங்கள், கிறிஸ்து இப்போது ராஜாதி ராஜாவாகவும், கர்த்தாதி கர்த்தாவாகவும் அரசாண்டு கொண்டிருக்கிறதாகச் சொல்கிறது (1தீமோத்தேயு 6:15). இவைகள் எல்லாம் ராஜ்யமும், சபையும் ஒன்று தான் என்கின்ற பொருளைக் கொடுக்கின்றன. எனவே, சபையானது, ஸ்தாபிக்கப் பட்டு கிறிஸ்து தம்முடைய ராஜ்யத்தில் இப்போது ஆட்சி செய்து கொண்டிருக்கிறார். இவைகள் உண்மையாயிருக்கிறபடியால், கிறிஸ்து மறுபடியும் வந்து ஆயிர வருடங்கள் அரசாட்சி செய்வார் என்பது ஏற்றுக் கொள்ளப் படத்தக்கதல்ல. அப்படி பூமியில் ஆட்சி செய்யவில்லையானால், வேறு என்ன செய்வார்?.

பேதுரு அப்போஸ்தலன் கர்த்தருடைய வருகை பற்றி இப்படிச் சொல்கிறார். "கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும்; அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுவோம், பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதி லுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம். இப்படி இவைக ளெல்லாம் அழிந்து போகிறதாயிருக்கிறபடியால் நீங்கள் எப்படிப் பட்ட பரிசுத்த நடக்கையும், தேவ பக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும். தேவனுடைய நாள் சீக்கிரமாய் வரும்படிக்கு மிகுந்த ஆவலோடே காத்திருங்கள்; அந்த நாளில் வானங்கள் வெந்து அழிந்து, பூதங்கள் எரிந்து உருகிப்போம். அவருடைய வாக்குத்தத் தின்படியே நீதி வாசமாயிருக்கும் புதிய வானங்களும், புதிய பூமியும் உண்டாகுமென்று காத்திருக்கிறோம். ஆகையால், பிரியமா னவர்களே, இவைகள் வரக் காத்திருக்கிற நீங்கள் கறையற்ற

*வர்களும், பிழையில்லாதவர்களுமாய்ச் சாமதானத்தோடே அவர் சந்நிதியில் காணப்படும்படி ஜாக்கிரதையாயிருங்கள்"* (II பேதுரு *3:10-14*). பவுல் இப்படியாக எழுதுகிறார். "*அன்றியும், சகோதரரே, நித்திரையடைந்தவர்களினிமித்தம் நீங்கள் நம்பிக்கையற்றவர் களான மற்றவர்களைப் போலத்துக்கித்து, அறிவில்லாதிருக்க எனக்கு மனதில்லை. இயேசுவானவர் மரித்து பின்பு எழுந்தா ரென்று விசுவாசிக்கிறோமே; அப்படியே இயேசுவுக்குள் நித்திரை யடைந்தவர்களையும் தேவன் அவரோடே கூடக் கொண்டு வரு வார். கர்த்தருடைய வார்த்தையை முன்னிட்டு நாங்கள் உங்களுக் குச் சொல்லுகிறதாவது; கர்த்தருடைய வருகை மட்டும் உயிரோடி ருக்கும் நாம் நித்திரையடைந்தவர்களுக்கு முந்திக் கொள்வதில் லை. ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனு டைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார் ; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர் கொண்டு போக, மேகங்கள் மேல் அவர்களோடே ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு இவ்விதமாய் எப்பொழு தும் கர்த்தருடனே கூட இருப்போம். ஆகையால், இந்த வார்த்தை களினாலே நீங்கள் ஒருவரையொருவர் தேற்றுங்கள்"* (I தெச *4:13-18*).

பவுல் தொடர்ந்து எழுதும் போது, "*தேவனை அறியாதவர்க ளுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத் திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு, கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜீவாலித்து எரிகிற அக்கினியோடும் வானத்திலிருந்து வெளிப்படும்போது அப்படியாகும். அந்நாளிலே தம்முடைய பரிசுத்தவான்களில் மகிமைப்படத்தக்கவராயும், நீங்கள் எங்களு டைய சாட்சியை விசுவாசித்தபடியினாலே உங்களிடத்திலும், விசுவாசிக்கிறவர்களெல்லாரிடத்திலும் ஆச்சரியப்படத்தக்கவரா யும் அவர் வரும் போது, அவர்கள் கர்த்தடைய சந்நிதானத்திலிருந் தும், அவருடைய வல்லமை பொருந்திய மகிமையிலிருந்தும் நீங்க லாகி, நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள்"* (II தெச லோனிக்கேயர் 1:7-10).

கொரிந்து கிறிஸ்தவர்களுக்கு பவுல் இப்படி எழுதினார் "*அதன்பின்பு முடிவு உண்டாகும்; அப்பொழுது அவர் சகல துரைத்தனத்தையும், சகல அதிகாரத்தையும் வல்லமையையும் பரிகரித்து, தேவனும் பிதாவுமாயிருக்கிறவருக்கு ராஜ்யத்தை ஒப்புக்கொடுப்பார்*" (I *கொரி 15:24) என்று.*

இப்போது, நாம் சற்று முன்பு வாசித்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறவைகளைச் சுருக்கமாகப் பார்ப்போம்:

முதலாவது, கிறிஸ்து தான் மீண்டும் வருவதாக வாக்குத்தத்தம் செய்திருக்கிறார்.

இரண்டாவது, அவர் எப்படிப் போனாரோ அப்படியே மறுபடியும் வருவார். அதாவது, அவர் மேகங்களில் வருவார்.

மூன்றாவது, இரவிலே திருடனைப் போல வருவார். அதாவது, எவ்வித அறிவிப்புமின்றி வருவார்.

நான்காவது, அவர் வரும் போது, எல்லாமே அழிந்து போய்விடும்; அதாவது, வானமும், பூமியும் அதிலுள்ள யாவும் அழிந்துபோகும்.

ஐந்தாவது, கிறிஸ்துவின் வருகையின் போது மரித்த நீதிமான்கள் முதலில் எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர் கொண்டுபோக, மேகங்கள் மேல் அவர்களோடே கூட ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்போம்.

ஆறாவது, கர்த்தருடைய வருகையின் போது, அவர் தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும், நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்துவார். கிறிஸ்து, ஆன்மீக அறியாமையை, தன்னைப் பற்றி அறியாமலிருப்பதற்கான ஒரு சாக்காகச் சொல்வதை ஏற்றுக்கொள்ளமாட்டார், அதைப் போலவே, சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியாதவர்களை அவர் இரட்சிப்பதுமில்லை. கிறிஸ்து இப்படியாகச் சொன்னார். "*பின்பு, அவர் அவர்களை நோக்கி; நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம்*


பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ, ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" (மாற்கு 16:15,16). சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிகிறவர்கள் இரட்சிக்கப்படுவார்கள். ஆனால், சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியத் தவறுகிறவர்கள் கூறும் காரணங்கள் எதுவாக இருந்தாலும் இழந்து போவார்கள். நியாயத்தீர்ப்பு நாளிலே கர்த்தர் வேறு விதமாக செயல்படுவார் என்பது பற்றி வேத வசனங்களில் நமக்கு எந்த வெளிப்பாடும் கொடுக்கப்படவில்லை. கிறிஸ்து சொன்னார், " என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசி நாளில் நியாயந் தீர்க்கும் " என்று. (யோவான் 12:48). எபிரெய ஆசிரியர் "அன்றியும், ஒரே தரம் மரிப்பதும்; பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது" என்று சொல்கிறார் (எபிரெயர் 9:27). "கிறிஸ்து தம்முடைய சிங்காசனத்திற்கு முன்பாக நிற்கிறவர்களைப் பார்த்து அநீதிமான்கள் நித்திய ஆக்கினையை அடையவும் நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையவும் போவார்கள் என்றார்" (மத்தேயு 25:46).

ஏழாவது, கர்த்தருடைய வருகையின் போது, ராஜ்யம் அல்லது சபையிலிருந்து துன்மார்க்கர் பிரிக்கப்பட்டு நரகத்திலே தள்ளப்படுவார்கள் (மத்தேயு 13:41). அதே வேளையில், சபை அல்லது ராஜ்யத்தில் உள்ள நீதிமான்கள் தேவனிடத்தில் ஒப்புக் கொடுக்கப்பட்டு அவர்கள் கர்த்தரோடு என்றென்றுமாய் வாசம் செய்வார்கள். கிறிஸ்து இப்படியாகச் சொன்னார், "இதைக் குறித்து நீங்கள் ஆச்சரியப்பட வேண்டாம்; ஏனென்றால், பிரேதக் குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும்; அப்பொழுது, நன்மை செய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள் " (யோவான் 5:25-29).

ஆகையால், நாங்கள் கர்த்தராகிய கிறிஸ்து மறுபடியும் வருவார் என விசுவாசிக்கிறோம். கர்த்தர் நம்மை எச்சரித்து, தம்முடைய சித்தத்தை நமக்குத் தந்து, இரட்சிப்பை அளித்து, அதை ஏற்றுக் கொள்வதற்கான வாய்ப்பையும் தந்திருக்கிறார். அவருக்குக்

கீழ்ப்படிந்து, அவருடைய இரண்டாம் வருகைக்காக நம்மை நாம் ஆயத்தப்படுத்திக் கொள்வது நம் கையில் தான் இருக்கிறது.

நீங்கள் கிறிஸ்துவில் விசுவாசம் வைக்கிறீர்களா? அவருக்குக் கீழ்ப்படிந்து விட்டீர்களா? அவரைச் சந்திக்க நீங்கள் ஆயத்தமாயி ருக்கிறீர்களா? அப்படியானால், எல்லாம் நன்றாகத்தான் இருக்கி றது, மகிழ்ச்சி. ஆனால், ஒருவேளை நீங்கள் அவரை சந்திக்க ஆயத்த மாக இல்லையென்றால், நீங்கள் கிறிஸ்துவை விசுவாசித்து, உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, கிறிஸ்துவை தேவனு டைய குமாரன் என்று அறிக்கையிட்டு, உங்கள் பாவமன்னிப்புக் கென ஞானஸ்நானம் பெற்றுக்கொள்வது அவசியம். நீங்கள் இதைச் செய்தால், கர்த்தர் உங்களை இரட்சித்து, தம்முடைய சபை யிலே சேர்த்துக் கொள்வார் (மாற்கு 16:16; அப்போஸ்தலர் 2:38; அப்போஸ்தலர் 1:47). அதன் பின்பு நீங்கள் மரணபரியந்தம், உண்மையுள்ளவர்களாயிருந்தால் கர்த்தர் நித்திய ஜீவக் கிரீடத்தை உங்களுக்குத் தந்தருளுவார் (வெளி 2:10).



## பாடம் - 18

# ஏன் கிறிஸ்தவம் இன்று அவசியப்படுகிறது?

உலகில் இன்று அநேக மதங்கள் உண்டு. அவைகள் ஒவ்வொன்றும் தங்களுக்குள் ஒன்றுக்கொன்று வேறுபட்ட மத காரியங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. இருந்த போதிலும் கிறிஸ்தவத்தைப் போன்று வேறு எந்த மதமும் இல்லை. மாத்திரமல்ல, கிறிஸ்தவத்தைப் போல அவசியப்படுகிற வேறொரு மார்க்கமும் இல்லை.

கிறிஸ்தவம், இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்கின்ற உண்மையை அடிப்படையாகக் கொண்டது. இது கிறிஸ்துவிடமிருந்து வந்தது. இது கிறிஸ்துவின் உபதேசங்களுக்கு கீழ்ப்படிகிறவர்களால் நடை முறைப்படுத்தப்படுகிறது.

நாம் கிறிஸ்தவத்தை விசுவாசிக்கிறவர்களாக இருக்கலாம் அல்லது கிறிஸ்துவின் மார்க்கத்தை பிரசங்கிக்கிறவர்களாகக் கூட இருக்கலாம். ஆனால், அதன் உபதேசங்களைக் கைக்கொள்வதுதான் எல்லாவற்றைக் காட்டிலும் முக்கியம். யாக்கோபு ஆசிரியர் இப்படிச் சொல்லியுள்ளார், *"அல்லாமலும், நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள்"* (யாக்கோபு 1:22). மறுபடியும் அதே யாக்கோபு சொல்லும்போது, *" சுயாதீனப் பிரமாண மாகிய பூரணப்பிரமாணத்தை உற்றுப் பார்த்து, அதிலே நிலைத்திருக்கிறவனே கேட்கிறதை மறக்கிறவனாயிராமல், அதற்கேற்ற கிரியை செய்கிறவனாயிருந்து, தன் செய்கையில் பாக்கியவானாயிருப்பான்"* (யாக்கோபு 1:25). தொடர்ந்து யாக்கோபு, *" உங்களில் ஒருவன் தன் நாவை அடக்காமல், தன் இருதயத்தை வஞ் சித்து, தன்னைத் தேவபக்தியுள்ளவனென்று எண்ணினால் அவனுடைய தேவ பக்தி வீணாயிருக்கும். திக்கற்ற பிள்ளைகளும், விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும், உலகத்தால் கறைபடாதபடிக்குத் தன்னைக்*

காத்துக்கொள்ளுகிறதுமே பிதாவாகிய தேவனுக்கு முன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக் கிறது " (யாக்கோபு 1:26,27)

இன்றைய உலகம் எவ்வளவு துன்மார்க்கமாய் இருக்கிற தென்பது நம்மெல்லாருக்கும் நன்றாகவே தெரியும். ஒழுக்க நெறிகள் தரைமட்டத்திற்குத் தாழ்ந்து விட்டன. அதிகாரத்திற்குக் கொடுக்க வேண்டிய மரியாதை குறைவுபட்டிருப்பதை எல்லா மட்டங்களிலும் பார்க்க முடியும். லஞ்சமும், நேர்மையின்மையும் இன்றைய நாட்களின் தன்மையாக மாறி விட்டது. நடந்து கொண்டிருக்கிற காரியங்களை வைத்துப் பார்க்கும்போது, இது எங்கே போய் முடியும் என்று பயமாக உள்ளது? நிச்சயமாகவே, நமக்கு சில மாற்றங்கள் தேவை. அப்படியானால், சிறந்த முறையில் உலகத்தை எது மாற்ற முடியும்? இயேசு கிறிஸ்துவின் உண்மையான புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவம் தான் மற்ற எல்லாவற்றைக் காட்டிலும் இந்த உலகத்திற்குத் தேவை என்று நான் விசுவாசிப்பதாகச் சொல்லும் போது நீங்கள் ஆச்சரியப்படலாம். ஆனாலும், உண்மையில், மனிதனுடைய ஒரே நம்பிக்கை இது தான். மனிதர்கள் பல்வேறுபட்ட மதங்களை முயற்சி செய்ததை அடிப்படையாக வைத்து இதை நான் சொல்கிறேன். அவர்கள் ராணுவ பலத்தைக் கொண்டு முயற்சி செய்தார்கள். சிற்றின்பத்திற்கு பின்னே சென்று முயற்சித்தார்கள். உலகப்பிரகாரமான காரியங்களை வலியுறுத்தி முயற்சித்தார்கள். இந்த உலகம் எல்லாவகை யிலும் முயற்சி செய்து விட்டது. ஆனால், இவைகள் எல்லாம் உலகை சிறந்ததாக மாற்றியிருக்கிறதா? மனிதன் மகிழ்ச்சியாக இருக்கின்றானா? இல்லை, இல்லவே இல்லை. மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு இனி எஞ்சியிருப்பவை தேவன், கிறிஸ்து, கிறிஸ்தவம் ஆகிய இவைகள் மாத்திரமே. கிறிஸ்தவம் மாத்திரமே உலகத்தில் மாற்றத்தை ஏற்படுத்த முடியும். கிறிஸ்தவம் இந்த உலகத்தில் மனிதன் வாழ்வதற்கான வழியினையும், நம்பிக்கையோடு மரிப்பதற்கான வழியையும் தருகிறது.

ஆவிக்குரிய காரியங்களில் மனிதனுக்கு தேவையானது கிறிஸ்தவம் தான். கிறிஸ்தவம் என்ற பெயரில் காணப்படும் ஏராளமான பிரிவினைக் கூட்டமல்ல. மாறாக, வேதாகமத்தில் விவரிக்கப்பட்டிருக்கிற கிறிஸ்துவின் ஒரே மார்க்கம் தான் இன்று உலகிற்கு தேவை. இது கிறிஸ்துவின் பேரில் வைக்கும் விசுவாசம், ஒரே சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிதல், ஒரே சபையில் அங்கத்தினரா

யிருத்தால், ஒரே பெயரைத் தரித்தல், ஒரே மாதிரியாக ஆராதித்தல், ஒரே காரியத்தை போதித்தல், இணைந்து பணியாற்றுதல், ஒரே நம்பிக்கையோடு இருத்தல் போன்றவைகளை அடிப்படையாகக் கொண்டது. நாம் எல்லோரும் அவருக்குள் ஒன்றாயிருக்கும்படி கிறிஸ்து ஜெபம் பண்ணினார் (யோவான் 17அதிகாரம்). பிரிவினை வேதாகமத்தில் கடிந்து கொள்ளப்பட்டிருக்கிறது (ரோமர் 16:17,18). அதுமாத்திரமல்ல, மனுஷருடைய போதனைகள் பிரிவினையை உண்டாக்குகிறபடியால் வேத வாக்கியங்களின் போதனைகளுக்கு இது எதிரானதாயிருக்கிறது (மத்தேயு 7:21-23).

கிறிஸ்தவத்தை நடைமுறைப்படுத்துகிறவர்கள் நல்ல குடி மக்களை உண்டாக்குகிறார்கள். அவர்கள் தங்கள் நாட்டுச் சட்டங் களுக்கு கீழ்ப்படிகிறதில் நம்பிக்கை வைக்கிறார்கள். அப்போஸ் தலனாகிய பவுல், " எந்த மனுஷனும் மேலான அதிகாரமுள்ளவர் களுக்குக் கீழ்ப்படியக்கடவன்; ஏனென்றால், தேவனாலேயன்றி ஒரு அதிகாரமுமில்லை; உண்டாயிருக்கிற அதிகாரங்கள் தேவ னாலே நியமிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால், அதிகாரத்திற்கு எதிர்த்து நிற்கிறவன் தேவனுடைய நியமத்திற்கு எதிர்த்து நிற்கி றான்; அப்படி எதிர்த்து நிற்கிறவர்கள் தங்களுக்குத் தாங்களே ஆக்கி னையை வருவித்துக் கொள்ளுகிறார்கள். மேலும், அதிகாரிகள் நற்கிரியைகளுக்கல்ல, துர்க்கிரியைகளுக்கே பயங்கரமாயிருக் கிறார்கள்; ஆகையால், நீ அதிகாரத்திற்குப் பயப்படாதிருக்க வேண்டுமானால், நன்மை செய், அதினால் உனக்குப் புகழ்ச்சி உண்டாகும். உனக்கு நன்மை உண்டாகும் பொருட்டு, அவன் தேவ ஊழியக்காரனாயிருக்கிறான். நீ தீமை செய்தால் பயந்திரு; பட்ட யத்தை அவர் விருதாவாய்ப் பிடித்திருக்கவில்லை; தீமை செய்கிற வன் மேல் கோபாக்கினை வரப்பண்ணும்படி, அவன் நீதியைச் செலுத்துகிற தேவ ஊழியக்காரனாயிருக்கிறான். ஆகையால், நீங்கள் கோபாக்கினையினிமித்தம் மாத்திரமல்ல, மனச்சாட்சியி னிமித்தமும் கீழ்ப்படிய வேண்டும் " என்கிறார் (ரோமர் 13:1-5). கிறிஸ்தவர்கள் சரியாக வருமான வரி செலுத்துவதில் நம்பிக்கை வைக்கிறார்கள். பவுல் தொடர்ந்து சொல்லும்போது, " இதற்காக நீங்கள் வரியையும் கொடுக்கிறீர்கள். அவர்கள் இந்த வேலையைப் பார்த்து வருகிற தேவ ஊழியக்காரராயிருக்கிறார்களே. ஆகையால், யாவருக்கும் செலுத்த வேண்டிய கடமைகளைச் செலுத்துங்கள்;

எவனுக்கு வரியைச் செலுத்த வேண்டியதோ அவனுக்கு வரியை யும், எவனுக்குத் தீர்வையைச் செலுத்த வேண்டியதோ அவனுக்குத் தீர்வையையும் செலுத்துங்கள்; எவனுக்குப் பயப்பட வேண்டிய தோ அவனுக்குப் பயப்படுங்கள்; எவனைக் கனம் பண்ண வேண்டி யதோ அவனைக் கனம் பண்ணுங்கள்" (ரோமர் 13:6,7). கிறிஸ்தவர் கள் தங்கள் தலைவர்களுக்கு மரியாதை செலுத்துவதில் நம்பிக்கை வைக்கிறார்கள். பேதுரு ஆசிரியர், " எல்லாரையும் கனம் பண்ணுங் கள்; சகோதரரிடத்தில் அன்பு கூருங்கள்; தேவனுக்குப் பயந்திருங் கள்; ராஜாவைக் கனம் பண்ணுங்கள் என்று நமக்கு நினைவுப் படுத்துகிறார்" (I பேதுரு 2:17). அது போலவே, நாம் நம் தேசத்தை நேசிக்க வேண்டும். நாம் காண்கின்ற எல்லாவற்றையும், நடை முறைப்படுத்தப்படுகிற எல்லாவற்றையும் நாம் விரும்பவில்லை யென்றால், அங்கே நாம் சிறந்தவைகளைச் செய்யும்படியாக முயற்சிக்க வேண்டும். நிச்சயமாகவே, நம்முடைய தலைவர் களுக்கு எதிராகச் செயல்படுவது, அதிகாரத்திற்கு அடங்கி நடப்பது மறுப்பது, வரிகட்டத் தவறுவது போன்ற காரியங்களை செய்கிற வன் ஒரு கிறிஸ்தவனாக இருக்க முடியாது. சிலர் தேசத்திலிருந்து, அரசாங்கத்திடமிருந்து எல்லாவற்றையும் பெற்றுக்கொள்ள விரும்புகிறார்கள். ஆனால், திருப்பிச் செலுத்த விரும்புவதில்லை. கிறிஸ்தவம் ஒரு தேசத்தில் வளருவது போல, அதிகாரத்திற்கு செலுத்தும் மரியாதை, தேச சட்டங்களுக்குக் கீழ்ப்படிதல் போன்ற வையும் வளர வேண்டும். அப்போது தான் நம் தேசம் முன்னேற நாம் உதவ முடியும்.

கிறிஸ்தவத்தை நடைமுறைப்படுத்துகிறவர்கள் சமூகத் தீமைகளுக்கு எதிர்த்து நிற்கிறார்கள். கருக்கலைப்பு, மதுபானம், புகைபிடித்தல், விவாகரத்து மற்றும் சின்னச் சின்ன பிரச்சினைக் குக் கூட மறுவிவாகம், சூதாட்டம், ஆண் புணர்ச்சி, ஊழல் போன்றவைகள் இவைகளில் அடக்கம். பவுல் இப்படிச் சொன் னார், "அநியாயக்காரர் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்ப தில்லையென்று அறியீர்களா? வஞ்சிக்கப்படாதிருங்கள்; வேசிமார்க்கத்தாரும், விக்கிரகாராதனைக்காரரும், விபசாரக் காரரும், சுயபுணர்ச்சிக்காரரும், ஆண்புணர்ச்சிக்காரரும், திருடரும், பொருளாசைக்காரரும், வெறியரும், உதாசினரும், கொள்ளைக்காரரும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்ப

தில்லை" (I கொரிந்தியர் 6:9,10). மேலே சொல்லப்பட்டிருக்கிற காரியங்களை நடைமுறைப்படுத்தாத ஒரு மதத்தை உங்களால் கற்பனை செய்து பார்க்க முடியுமா? மற்ற மதங்கள் பெரும்பாலும் பாவமான, ஒழுக்கக்கோடான காரியங்களை ஊக்கப்படுத்து கின்றன அல்லது கண்டுகொள்ளாமல் இருக்கின்றன. கிறிஸ்தவம் அப்படிப்பட்டதல்ல. கிறிஸ்தவம் மக்களிடமிருந்து சிறந்த வைகளை வெளியே கொண்டு வருகிறது. ஒருவேளை, கிறிஸ்த வர்கள் என சொல்லிக் கொள்ளுகிறவர்கள் மோசமான காரியங் களில் ஈடுபட்டால், அது கிறிஸ்தவம் தவறானது என்று பொருள் பட்டு விடாது. மார்றாக, அப்படிச் செய்கிறவர்கள் தவறு செய்கிற படியால் அவர்கள் பாவத்தில் இருக்கிறார்கள். மறுபடியும், பவுல் இப்படியாகச் சொல்கிறார். " *மாம்சத்தின் கிரியைகள் வெளியரங் கமாயிருக்கின்றன; அவையாவன: விபச்சாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் முதலானவைகளே; இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத் தைச் சுதந்தரிப்பதில்லையென்று முன்னே நான் சொன்னது போல இப்பொழுதும் உங்க ளுக்குச் சொல்கிறேன்*" (கலாத்தியர் 5:19-21). இப்படிப்பட்ட பாவங் களைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரிப்பதோ அல்லது அதில் அங்கம் வகிப்பதோ முடியாது என்று வசனம் சொல்லும் போது, அதன் பொருள், இப்படிப்பட்ட பாவங்களைத் தொடர்ந்து செய்கிறவர்கள் இரட்சிக்கப்படமுடியாது. இரட்சிப்படையாவிட்டால் கர்த்தரு டைய சபையில் இவர்கள் பிரவேசிக்க முடியாது என்பதே. நிச்சயமாக அவர்கள் மனந்திரும்பி கர்த்தருக்குக் கீழ்ப் படியும்போது, அவர் அவர்களை இரட்சித்துத் தம்முடைய சபை யில் சேர்த்துக் கொள்வார் (மாற்கு 16:16; அப். 2:47). கிறிஸ்தவர் களாக, கர்த்தருடைய சபையின் அங்கத்தினர்களாக, இப்படிப்பட்டபாவப் பழக்கவழக்கங்களிலிருந்து அவர்கள் விடுபட்டு கிறிஸ்து இயேசுவுக்குள் தூய்மையான தேவ பக்தியுள்ள வாழ்க்கை வாழப் பாடுபடவேண்டும்.

கிறிஸ்தவத்தை நடைமுறைப்படுத்துகிறவர்கள் தங்கள்

வாழ்க்கையை மேம்படுத்த முயற்சி செய்கிறார்கள். தூய்மையான உடல்களை, சுத்தமான உடைகளை, சுத்தமான வீடுகளை கொண்டிருப்பதில் நம்பிக்கை வைக்கிறார்கள். அவர்கள் தங்கள் குழந்தைகளுக்கு நல்ல கல்வியைக் கொடுக்க முயற்சி செய்கிறார்கள். அவர்கள் கடின உழைப்பாளிகளும், எல்லா மக்களோடும் நேர்மையானவர்களுமாயிருக்க முயற்சி செய்கிறார்கள். பவுல் இப்படியாகச் சொன்னார், "ஒருவரிடத்திலொருவர் அன்பு கூருகிற கடனேயல்லாமல் மற்றொன்றிலும் ஒருவனுக்கும் கடன்படாதிருங்கள்; பிறரிடத்தில் அன்பு கூருகிறவன் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறான்" (ரோமர்13:8). மறுபடியும் பவுல், " இப்படியாகச் சொன்னார், உங்கள் அன்பு மாயற்றதாயிருப்பதாக, தீமையை வெறுத்து, நன்மையைப் பற்றிக் கொண்டிருங்கள். சகோதர சிநேகத்திலே ஒருவர் மேலொருவர் பட்சமாயிருங்கள்; கனம் பண்ணுகிறதிலே ஒருவருக்கொருவர் முந்திக்கொள்ளுங்கள். அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்; ஆவியிலே அனலாயிருங்கள், கர்த்தருக்கு ஊழியஞ்செய்யுங்கள். நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கள்; உபத்திரவத்திலே பொறுமையாயிருங்கள்; ஜெபத்திலே உறுதியாய்த்தரித்திருங்கள். பரிசுத்தவான்களுடைய குறைவில் அவர்களுக்கு உதவி செய்யுங்கள்; அந்நியரை உபசரிக்க நாடுங்கள், உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களை ஆசீர்வதியுங்கள்; ஆசீர்வதிக்க வேண்டியதேயன்றி சபியாதிருங்கள். சந்தோஷப்படுகிறவர்களு டனே சந்தோஷப்படுங்கள்; அழுகிறவர்களுடனே அழுங்கள். ஒருவரோடொருவர் ஏக சிந்தையுள்ளவர்களாயிருங்கள்; மேட்டிமையானவைகளைச் சிந்தியாமல், தாழ்மையானவர்களுக்கு இணங்குங்கள்; உங்களையே புத்திமான்களென்று எண்ணாதிருங்கள். ஒருவனுக்கும் தீமைக் குத் தீமை செய்யாதிருங்கள்; எல்லா மனுஷருக்கு முன்பாகவும் யோக்கியமானவைகளைச் செய்ய நாடுங்கள். கூடுமானால் உங்களாலானமட்டும் எல்லா மனஷரோடும் சமாதானமாயிருங்கள். பிரியமானவர்களே, பழி வாங்குதல் எனக்குரியது, நானே பதிற் செய்வேன், என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறபடியால், நீங்கள் பழிவாங்காமல், கோபாக்கினைக்கு இடங்கொடுங்கள். அன்றியும், உன் சத்துரு பசியாயிருந்தால், அவனுக்குப் போஜனங்கொடு; அவன் தாகமாயிருந்தால் அவனுக்குப் பானங் கொடு; நீ இப்படிச் செய்வதினால் அக்கினித் தழலை அவன் தலையின்மேல் குவிப்பாய். நீ தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்லு " (ரோமர் 12:9-21).

கிறிஸ்தவத்தைப் பின்பற்றுகிறவர்கள் சக மனிதர்களிடையே நற்கிரியைகளை செய்வதில் நம்பிக்கை வைக்கிறார்கள். இதில், ஏழைகளுக்கு உதவுதல், திக்கற்ற பிள்ளைகள் மற்றும் விதவைகள் போன்றோர்களுக்கு உதவிச் செய்தல் போன்றவைகளும் அடங்கும். கிறிஸ்து இப்படிச் சொன்னார், *"இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத் திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது"* என்று (மத்தேயு 5:16).

இவ்வகையான கிறிஸ்தவம் இந்த தேசத்திலோ அல்லது வேறு எந்த தேசத்திலோ உலகத்திலுள்ள எல்லா தேசங்களிலுமோ நடைமுறைப்படுத்தப்பட்டால், இதன் மூலம் மனித இனம் முழுவதுமே பயன்பெறும். மேலுமாக, இன்னும் அதிகமான பேர் கிறிஸ்தவத்தை ஏற்றுக்கொண்டு, கிறிஸ்தவத்தை நடைமுறைப்படுத்தினால் உலகம் படிப்படியாக முன்னேற்றமடையும். வேதாகமத்தின் போதனைப்படி கிறிஸ்தவம் நடைமுறைப்படுத்தப்பட்டால், அது எல்லாவற்றையும் மாற்றும் வல்லமையைப் பெற்றிருப்பதால் நிச்சயமாக மாற்றத்தை ஏற்படுத்தும். இவைகள் எல்லாவற்றை யும் செய்கிறவர்கள் தங்கள் வாழ்வில் சிறந்தவர்களாக மாறியிருக்கிறார்கள்.ஆனால், இவைகளை எங்கே தொடங்குவது என்பது கேள்வியாயிருக்கிறது. உங்களிடத்திலிருந்தே முதலில் தொடங்குங்கள். நீங்கள் கிறிஸ்தவராக இல்லையென்றால், கிறிஸ்தவராக மாறுங்கள். நீங்கள் கிறிஸ்தவத்தைக் கடைபிடிக்கும் போது நீங்கள் செய்தது போலவே மற்றவர்களும் செய்யும் படியாக உங்களால் அவர்களை உற்சாகப்படுத்த முடியும்.

நீங்கள் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து, உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, கிறிஸ்து இயேசுவிலுள்ள உங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டு, பாவமன்னிப்புக்கென்று தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெறுவீர்களானால், கர்த்தர் உங்களை இரட்சித்துத் தம்முடைய சபையிலே சேர்த்துக் கொள்வார். அப்போஸ்தலருடைய புத்தகத்தில் இடம் பெற்றுள்ள மனமாற்ற சம்பவங்களை நீங்கள் வாசித்தால் இதைத்தான் அவர்கள் எல்லாரும் செய்ததை உங்களால் காண முடியும். அதையே நீங்களும் செய்யும்போது கர்த்தர் உங்களையும் இரட்சிப்பார். மாற்கு 16:16; மத்தேயு 10:32; அப். 2:38; அப். 2:47 வசனங்களை வாசியுங்கள்.